கோகுலம்

GOKULAM


செப்டெம்பர்
2001

ரூ.6/-




செல்லப் புறா; சாதனைப் புறா!

இங்கு எத்தனை கேரட்கள் உள்ளன?



விடை : 34


நிழல் படங்களின் பெயர்களைக் கண்டு பிடியுங்கள்!




விடை: யானை, நாய், கழுதை, எலி, பூனை, மான், நரி, முயல்

விளையாடி மகிழுங்கள்!

தேனீ பாட்டிலிலிருந்து வெளியே வர வழிகாட்டுங்கள்!



புள்ளிகளை இணையுங்கள்!



''நடக்கக் கூடாதது நடந்திருச்சு.''

''அப்படி என்ன நடந்திடுச்சு?''

''என் தம்பி 'ரன்னிங்ரேஸ்'ல நடந்துட்டான்!''

– கிரேசிசரவணன்



கோகுலம்













மலர் : 19 இதழ் : 8

செப்டெம்பர் 2001

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும். - பாரதியார்.

வரதன் எழுபதடி ஆழத்துக்கு கிணறு தோண்டினான். தண்ணீர் கிடைக்கவில்லை. ஏமாற்றமடைந்து புதுக்கிணறு தோண்ட முற்பட்டான். இதையடுத்து தந்தை தன்னை, 'அறிவுகெட்டவனே! முட்டாள், மட்டி, மடையன்' என்று திட்டியதால் வருத்தமாய் நடந்து கொண்டிருந்தான் வரதன்.

எதிரே ஒருவன் குதிரையில் தலையில் புல் கட்டோடு வந்து கொண்டிருந்தான்.

"ஏனப்பா? குதிரை மேல் புல் கட்டை வைக்காமல் தலையில் சுமந்து வருகிறாயே? உனக்கு மூளையில்லையா?" என்று கேட்டான் வரதன்.

"உனக்குத்தான் மூளையில்லை. குதிரைக்கு ஒரு வாரமாய் உடம்பு சரியில்லை. அது என்னைச் சுமப்பது போதாதென்று புல் கட்டையும் சுமக்க வேண்டுமா? அதுதான் புல்லுக்கட்டை நான் சுமக்கிறேன்" என்றபடி போனான்.

வரதனுக்கு அழுவதா, சிரிப்பதா என்றே தெரியவில்லை.

இருட்டி விட்டது. தெரு விளக்கடியில் ஒருவன் எதையோ தேடிக் கொண்டிருந்தான்.

வரதன் அவன் அருகில் சென்று, "என்ன தேடுகிறீர்கள்? சொன்னால் நானும் தேடுகிறேன்" என்றான்.


"மோதிரத்தைத் தொலைத்து விட்டேன்" என்றான் அவன்.

"எங்கே விழுந்தது? இங்கேயா?" என்று ஒரு இடத்தைக் காட்டிக் கேட்டான் வரதன்.

"அதோ இருட்டாக இருக்கிறதே. அங்கே விழுந்தது" என்றான் அவன்.

"சுத்த மூளை கெட்டத்தனமாக இருக்கிறதே! அங்கே தொலைத்து விட்டு இங்கே தேடினால் எப்படி கிடைக்கும்?" என்று வரதன் கடிந்து கொள்ள,

"உனக்குத்தான் மூளையில்லை! இருட்டிலே எப்படி தேட முடியும்? அதுதான் வெளிச்சத்தில் தேடுகிறேன்" என்று அந்த மதியூகி கூறவும் அயர்ந்து நின்று விட்டான் வரதன்.



கொஞ்ச தூரத்தில் ஒருவன் வெட்ட வெளியில் ஒரு அடி ஆழத்துக்கு நிறைய குழிகள் தோண்டிக் கொண்டிருந்தான்.

"எதற்கு இப்படி குழிதோண்டிக் கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டான் வரதன்.

"நான் இங்கே ஆயிரம் பொற்காசுகள் புதைத்து வைத்திருந்தேன். அதைத்தான் தேடுகிறேன்" என்றான் அவன்.

"அடையாளம் வைக்கவில்லையா?" என்று வரதன் விசாரித்தான்.

"புதைத்த இடத்தில் ஒரு வாழைக் கன்றை வைத்திருந்தேன். வாழை மரமாகி குலை தள்ளி இருக்க வேண்டும். வாழையையே காணோமே"

உனக்குத்தான் மூளையில்லை!

மாலதி

என்றான் அவன் கவலையோடு.

''சுத்த முட்டாளாயிருக்கிறாயே! வாழையை ஆடு, மாடு தின்றிருக்கும். விஷச் செடியையோ, முட்செடியையோ, பாறையையோ வைத்திருக்க வேண்டும்'' என்றான் வரதன்.

''நீதான் முட்டாள். விஷச்செடியை ஏன் நடுகிறாய் என்று யாராவது கேட்டால் மாட்டிக் கொள்ள மாட்டேனா? பாறையை இன்னொருவர் உதவியில்லாமல் நகர்த்த முடியுமா?'' என்று அவன் அடுக்க வரதன் அங்கிருந்து சென்றான்.

எதிரே ஒருவன் அழுதபடி வந்தான். வரதன் அவனிடம், ''ஏன் அழுகிறீர்கள்?'' என்று கேட்டான்.

''நான் ஊருக்குப் புதிது. உறவினர் வீட்டில் தங்கியிருக்கிறேன். ஊரைச் சுற்றிப் பார்க்கக் கிளம்பினேன். உறவினர் வீடு திரும்பிச் செல்ல வழி தெரியவில்லை. முகவரியைத் தொலைத்து விட்டேன்'' என்றான்.

''உறவினர் வீடு செல்ல வேறு அடையாளம் உண்டா?'' என்று வரதன் கேட்க, ''நான் ஒன்றும் மட்டியில்லை! வரும் வழியெல்லாம் கடலை போட்டுக் கொண்டேதான் வந்தேன்'' என்றான் அவன்.

'கடலையைப் பறவைகள் தின்றிருக்குமே' என்று கேட்க நினைத்த வரதன், 'இவனிடமும் முட்டாள் பட்டம் வாங்குவானேன்' என்று நினைத்து மௌனமாய் கடந்து சென்றான்.

ஓய்ந்து போய் ஒரு திண்ணையில் உட்கார்ந்தான் வரதன். எதிர் திண்ணையிலிருந்த பையனிடம் அவன் தந்தை, ''வாத்தியார் படம் வரையச் சொன்னாருன்னு சொல்லிட்டு சும்மா உட்கார்ந்திருக்கியே! நாளைக்கு வெறும் காகிதத்தைப் பார்த்தால் திட்ட மாட்டாரா?'' என்று கேட்டார்.

''வெறும் காகிதமா? இதிலேயிருக்கிற பசு, புலி, புல்லுக்கட்டு எல்லாம் உன் கண்ணுக்குத் தெரியலையா?'' என்று கேட்டான் பையன்.

வரதனும் எட்டிப் பார்த்தான். வெற்றுத்தாள்தான் இருந்தது. ''சரி. புல்லுக்கட்டு எங்கே?'' என்று கேட்டார் தந்தை.

''பசு தின்று விட்டதே!''

''சரி, பசு எங்கே?''

''புலி தின்று விட்டது.''

''சரி, புலி எங்கே?'' தந்தையும் விடவில்லை!

''காட்டுக்குள் ஓடி விட்டது.''

வரதன் சிரித்துக் கொண்டே எழுந்தான். இவன் அப்பாவை மட்டுமல்ல, ஆசிரியரையும் முட்டாளாக்குவான் என்று புரிந்து கொண்டான்.

'அடேயப்பா! இத்தனை பேர் மடையர்களாக இருக்கும் போது நாம் ரொம்ப சாதாரணம்' என்று வீட்டுக்குத் திரும்பினான் வரதன்.


தந்தை சொற்படி எழுபதடிக்கு மேலும் தோண்டினான். மறு நாளே ஊற்றுக் கண் திறந்து நீர் பெருகியது. எழுபதடி தோண்டின பிறகு ஏமாற்றமடைந்து புதுக் கிணறு தோண்டுவேன் என்றால் தந்தை திட்டாமல் கொஞ்சுவாரா?



நமக்கு மிக அருகிலுள்ள நட்சத்திரம் எது தெரியுமா? சூரியன்தான்! நம் குடும்பத் தலைவனான சூரியன் சிறிய, சாதாரண அளவிலுள்ள நட்சத்திரமே! (இந்த நட்சத்திரத்திலிருந்து வெளிச்சம் பூமியை வந்தடைய 8 நிமிடங்கள் ஆகின்றன). நம் சூரியனைவிட மிகப் பெரிய நட்சத்திரங்கள் எல்லாம் கோடிக்கணக்கில், நம் பால் வழியில் (Milky way) உலா வருகின்றன. அவை பெரியவை மட்டுமல்ல; சூரியனை விட அதிக வெளிச்சத்தையும், வெப்பத்தையும் கக்குபவை ஆகும். இந்தச் சூரியனின் வெப்பத்தையே நம்மால் கோடை காலத்தில் தாங்க முடியவில்லையே...! பெரிய, பெரிய சூரியன்கள் நம் அருகில் இருந்திருந்தால் நம் கதி...? பால் வழியில் உள்ள கோடிக்கணக்கான சிறிய நட்சத்திரங்களுள் நம் சூரியனும், அதன் குடும்பமும் ஒன்று.

சூரியன்தான், நம் குடும்பத்தில் நடுவில் உள்ளது என்றும், பூமி மற்றும் இதர கோள்கள் அதனை மையமாக வைத்து சுற்றி வருகின்றன என்ற உண்மையையும் முதன்முதலில் 1543-ல் நிக்கோலஸ் கோப்பர்நிகஸ் என்ற போலிஷ் வானவியலாளர்

• பூமியிலிருந்து பார்க்கும்போது நிலாவும் ஒளி வீசும் சூரியனும்



கண்டுபிடித்தார். இதற்குச் 'சூரிய மையக் கொள்கை' என்று பெயர். அதற்கு முன், பூமி தான் நம் குடும்பத்தின் மையத்தில் உள்ளது என்று எண்ணிக் கொண்டிருந்தனர். இதற்குப் 'புவிமையக் கொள்கை' என்று பெயர். கி.பி. 1610ல் இத்தாலிய வானவிய லாளரான கலீலியோ என்பவர், தொலைநோக்கியைப் பயன்படுத்தி வானவெளியை ஆராய்ந்ததன் மூலம், பூமிதான் சூரியனைச் சுற்றுகிறது என்ற உண்மை நிரூபணமாகியது.

சுட்டெரிக்கும் சூரியன்!

சூரியன் உருவாகி 500 கோடி வருடங்கள் ஆகின்றன. அண்டங்கள் எல்லாம் உருவாகி 700 கோடி வருடங்கள் கடந்த பின்னரே சூரியன் உருவானது. எல்லா நட்சத்திரங்களின் பிறப்பைப் போலவேதான் சூரியனின் உருவாக்கமும். வான் வெளியில், உருவமின்றி சுற்றிக் கொண்டிருந்த அசுர வாயு மேகக் கூட்டங்கள், மிக வேகமாய் சுழன்று மோதி அவற்றின் ஈர்ப்பு விசையால், அதிக அழுத்தத் துடன் சுருங்கி, இறுகி, சுழலும் வேகத்தால் நெருப்புப் பந்தானது. இதிலுள்ள வாயுவில் பெரும்பகுதி ஹைடிரஜன்...


• சூரியனின் உட்புறத் தோற்றம்



தற்போதைய சூரிய உருவக் கொள்கையின்படி, வெகு காலத் திற்கு முன், மிகப் பெரிய வான்தூசு மேகக் கூட்டத்தின் ஏதோ ஒரு பகுதியில் மட்டும் நிறைச்செறிவு ஏற்பட்டு, மற்ற பகுதிகளைத் தன்னை நோக்கி ஈர்க்கத் துவங்கியது. பின் தனது சொந்த நிறை ஈர்ப்பினால், விண் தூசு மேகக் கூட்டம் சுருங்கியதுடன், ஈர்ப்பு விசையால் சுற்றவும் தொடங்கியது. இது பெரிய வாயு பந்து போல் சுருங்க, சுருங்க, சுழலும் வேகமும் அதிகரித்து காலப் போக்கில் வேகமாய் சுற்றுவதால், இதன் மையப் பகுதி குமிழ் போன்றும் சுற்றுப் பகுதி வட்டு (disc) போலவும் ஆகிவிட்டது. வெளிப்புற வட்டின் சுழற்சி வேகம் மேலும் அதிகரித்ததால் மையக் குமிழ் மேலும் சுருங்கி 'ஆப்பம்' போல் உப்பியது. சுழற்சி வேகத்தால் வெப்பம் அதிகரித்து மையப் பகுதி வெப்பமும், ஒளியும் உமிழும் விண்மீனாக, சூரியனாக – உருவெ



• சூரியன் பயணம் செய்யும் காட்சி



"உன் தம்பி சைக்கிளில் உட்காராமல் நின்றபடியே ஓட்டுறானே ஏன்?"

"ஒரு காரியத்தை அவன் தொடங்கிட்டா அதை முடிச்சுட்டுதான் உட்காருவான்!"

– பொறையாறு கங்காகணேசன்

டுத்தது. சுற்றியுள்ள வட்டு உடைந்து, சிறு சிறு துண்டுகளாய், கோள்களாய் மாறின. அது மட்டுமல்ல மிச்சமுள்ள வாயுக்கள் வால் நட்சத்திரங்களாகவும் ஆயின.

● அணுச்சேர்க்கையின்போது ஒரு சிறு பகுதி நிறை ஆற்றலாக மாற்றப்படுகிறது. ($e = Mc^2$ என்ற ஐன்ஸ்டினின் வாய்பாடுப்படி)

● ஒவ்வொரு வினாடியும் 40,00,000 ஹைடிரஜன் அணுக்களை ஆற்றலாக மாற்றி அண்டவெளியில் கதிர்வீச்சை உமிழ்வதால் சூரியன், காலப் போக்கில் தன் எடையைக் கொஞ்சம் கொஞ்சமாக இழந்து கொண்டே வருகிறது.

● சூரியனின் தற்போதைய வயது 500 கோடி வருடங்கள். இந்த எடை குறைவை வைத்துக் கணக்கிட்டால், இன்னும் 700 கோடி ஆண்டுகள் வரை வாழும் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

● சூரியனின் மேற்பரப்பிலிருந்து, நெருப்பு ஜ்வாலை, அதன் வளி மண்டலத்திலிருந்து வெளியே விசிறியடிக்கப்படுகிறது; இவை வெளியே வேகமாய் சுருண்டு விழுவதுடன் சூரியனைவிட 10 மடங்கு ஒளி வெள்ளத்துடனும் திகழுகிறது. ஒரு சின்ன ஜ்வாலைப் பந்துகூட பூமியை விழுங்கி விடும். பெரிய ஜ்வாலைகள் 10 கோடி ச.கி.மீ பரப்புள்ளதாய் இருக்கும். அவை உருவத்தைப் பொறுத்து 15 நிமிடத்திலிருந்து சில மணி நேரம் அண்ட வெளியில் இருக்கும். பின் மறைந்து விடும். இவை உருவான சில நிமிடங்களில் பூமியின் வளிமண்டலத்தில் பாதிப்பை உண்டாக்கும் (முக்கியமாக ரேடியோ அலைகள்). இவற்றிலிருந்து வெளியேறும் புரோட்டான்களும், எலெக்ட்ரான்களும் வான்வெளியில் வினாடிக்கு 1600 கி.மீ வேகத்தில் பயணிக்கின்றன.

● சூரியனில் எடை குறைவு ஏற்படுவதால், அதன் மையப் பகுதியில் உட்குழிவு ஏற்பட்டு, மேற்பரப்பில் சுருக்கம் உண்டாகிறது. எனவே மேற்பரப்பு மையத்தை நோக்கி இழுக்கப்படும்போது, சூரியனின் வெப்பம் அதிகரிக்கிறது. இன்னும் 100 கோடி ஆண்டுகளில் சூரியனின் வெப்பம் 50,000 பாகை பாரன்ஹீட் அளவை எட்டும். அப்போது சூரியன் அழகான வெளிர் நீலத்தில் மின்னும். அடுத்த 300 கோடி ஆண்டுகளில், சூரியன் நடுத்தர வயதை அடையும். அப்போது சூரியனிலுள்ள ஹைடிரஜன் மற்றும் ஹீலியம் அணுக்கள் முழுவதும் அணு ஆற்றலைக் கக்கி முடித்து, தீர்ந்து விடும். சூரியன் செக்கச் சிவந்த, செஞ்சூரியனாகி, மிக விரிவடையத் துவங்கும். அப்போது அதற்கு 'சிவப்பு ராட்சதன்' என்று பெயர். இந் நிலையில் சூரியன் தன் அருகிலுள்ள புதன், வெள்ளி மற்றும் பூமியையும் விழுங்கிவிட்டு, செவ்வாயின் கதவை மெல்லத் தட்டும். (பயப்படாதீர்கள். இன்னும் 400 கோடி ஆண்டுகளுக்குப் பிறகு நாம் இருக்க மாட்டோம். நம் சந்ததியினர், அறிவியல் வளர்ச்சியில், வேறு கோளுக்குக் குடியேறி இருப்பர்... நம் பூமியில் பரிணாம வளர்ச்சியில், மனிதனிலிருந்து வேறு விலங்கினம் உருவாகியிருக்கலாம்...) பிறகு, உட்புற நெருக்கம் காரணமாக, சூரியன் வெண்மை நிறத்தை அடையும். இந்நிலை மேலும் 500 கோடி ஆண்டுகள் நீடிக்கும். அப்போது எரிபொருள் முழுதும் தீர்ந்த நிலையில் 'வெள்ளைக் குள்ளனாக' வானில் சஞ்சரிக்கும். அப்போது இதன் மையக் கருவில் கார்பன் மட்டுமே இருக்கும். அப்புறம் 30 லட்சம் ஆண்டுகளுக்குப் பின், அதனுள் இருக்கும் மிச்ச, சொச்ச ஆற்றலையும் இழந்து, சூரியன் கறுப்புக்குள்ளனாகி, ஒளியின்றி, வானில் மற்ற கோள்களுடன் அடையாளமின்றி சுற்றி வரும். அச்சமயத்தில் வேறு ஏதேனும் ஒரு புதிய சூரியன் உதயமாகி இருக்கலாம்...!

– ஸ்வாதி

ஜோக்ஸ் கார்னர்



"பத்தடி நடந்தால்கூட மூச்சு வாங்குதுன்னு டாக்டர்கிட்டே சொன்னது தப்பாப் போச்சு."

"ஏங்க?"


"ஒரு அடி குறைச்சு ஒன்பது அடி நடந்து பாருங்கன்னு சொல்லிட்டார்!"


- ஆர். தங்கராஜ், திருப்பூர்

"ஆஸ்திரேலியா, ஜப்பான் எங்கிருக்குது?"

"எல்லாம் உலக வரை படத்துல தான் இருக்கு சார்!"

- சாயம் வெ. ராஜாராமன், சென்னை.





"சென்னையில எல்லாமே விலை அதிகம்னு அப்பா சொன்னாரில்லே?"

"அதுக்கென்ன இப்போ?"

"பஸ்ல சேலம் போறதுக்கு நம்மூர்ல எவ்வளவு?"


"பன்னிரண்டு ரூபாய்"

"இங்க சேலம் போக தொண்ணூறு ரூபாய் கேட்கறாங்க!"

"ஏண்டா மருந்து பாட்டிலை இப்படி தேய்க்கிறே?"

"டாக்டர்தான் இந்த பாட்டிலைக் கொடுத்து தலை வலிச்சா தேய்ன்னு சொன்னார்!"

- கே. சரஸ்வதி, மன்னார்குடி





"ரப்பர் கம்பெனி ஆரம்பிச்சியே... என்ன ஆச்சு?"

"என் சொத்தையே அழிச்சிருச்சு!"

- பா. பரணிதரன், பத்தாம் வகுப்பு, ஸ்ரீ சத்ய சாய் ஸ்ரீநிவாசா மேல்நிலைப் பள்ளி, திருப்பதி.


சொத்து
கதை: பா. கவிதா, புதுடில்லி, படம்: மகேஸ்
தங்கப்பனுக்கு ராமு, சோமு, மாணிக்கம், ரத்தினம் என நான்கு மகன்கள். நால்வரி டமும் ஒற்றுமை இல்லை. ஒருநாள்–
மகன்களே! இனி நான் பிழைக்க மாட்டேன். இந்த நான்கு பைகளை ஆளுக்கு ஒன்றாக எடுத்துக் கொள்ளுங்கள்.
மறுவாரம் –
வாங்கடா. அவரவர் பையைப் பிரித்துப் பார்க்கலாம்.
என்ன வச்சிருப்பார் அப்பா?
நால்வரும் பிரித்தனர்.
என்னது! என் பையில் வெறும் மண்தான் இருக்கு.
என் பையில் மாட்டுக் கொம்பு. ஒண்ணுமே புரிய லையே!
இதில் செங்கல்...
என் பையில் ஒரு வெள்ளி நாணயம்.
அப்பா ஏன் இப்படி பண்ணியிருக்கார்?
இதுல ஏதாவது விஷயமிருக்கும். நம்ம பஞ்சாயத்துத் தலைவர்கிட்ட கேட்கலாம், வாங்க.
பஞ்சாயத்துத் தலைவரிடம் நால்வரும் விஷயத்தைக் கூறினர்.
ஐயா, எனக்கு மாட்டுக் கொம்பு.
ராமுவுக்கு மண் பை கொடுத்தது மூலம் நிலம் அவனுக்கு..


சோமு, உனக்கு ஆடு, மாடு போன்ற கால்நடைகள்,
மாணிக்கத்துக்கு வீடு சொந்தம். அதைக் குறிக்க இந்தச் செங்கல்.
ரத்தினத்துக்குப் பணமெல்லாம் சொந்தம். சந்தோஷம்தானே!
எப்படிங்க சந்தோஷமா இருக்க முடியும்? வெறும் நிலத்தை வச்சுக்கிட்டு உழுவதற்கு மாடு, தங்க வீடு இல்லாமல் நான் என்ன செய்ய?
அதானே! நான் வெறும் ஆடு, மாடுகளை வச்சிக்கிட்டு நிலமும் இல்லாமல், வாங்க பணமும் இல்லாமல் எப்படி வாழ முடியும்?
ஐயா! நான் வீட்டில் உட்கார்ந்து கொண்டு பட்டினியா கிடக்க முடியும்?
நான் இருக்கிற பணத்துல நிலத்தை வாங்குவேனா? மாடு, வீடு வாங்குவேனா?
இப்பக்கூட நீங்க சந்தோஷமாக இருக்க முடியும்.
எப்படிங்க?
உங்கள் அப்பா அர்த்தமில்லாமல் இப்படி பிரிக்கலை. நீங்கள் நால்வரும் அவரவர் சொத்தைப் பிறருடன் பகிர்ந்து சந்தோஷமாக வாழலாமே?
ஐயா, எங்களுக்குப் புரிய வச்சுட்டீங்க.
இனி மேல் ஒன்றாக உழைத்து சந் தோஷமாக வாழ்வோம்.

மனதில் ஊனம்

ஹெலன் கெல்லர் ஒன்றரை வயது குழந்தையாக இருந்தபோது கடுமையான பிணிக்கு ஆளானார். அதன் விளைவாக அவருடைய கண்கள் பார்க்கும் சக்தியை இழந்து விட்டன. காதுகள் செவிடாகி விட்டன. வாய் பேசும் சக்தியை இழந்து விட்டது.

ஹெலன் கெல்லர் தனக்கு ஏற்பட்ட பயங்கரமான பல உறுப்புகளின் ஊன நிலையினைப் பற்றிச் சற்றும் கவலைப்படாமல் சிறுகச் சிறுகக் கல்வி பயின்றார். கல்வியில் உயர்ந்த தகுதிகளையும் பட்டங்களையும் வென்றார்.

சிறந்த நூல்களை எழுதினார். தன்னம்பிக்கையும் தீவிர முயற்சியும், அயரா உழைப்பும் இருந்தால் ஒருவரால் சாதிக்க முடியாத காரியமே இல்லை என்பதற்கு ஹெலன் கெல்லர் ஓர் உதாரணமாகத் திகழ்ந்தார்.

இவர் அமெரிக்க நாட்டில் உள்ள டஸ்கம்பியா என்ற சிற்றூரில் 1880,ஜூன் 27ல் பிறந்தார்.

அயர்லாந்து நாட்டைச் சார்ந்த ஆன் சலிவன் என்ற பெண்மணி ஹெலனின் உடற்குறைகளைப் பற்றிக் கவலைப்படாமல் அவருக்குக் கல்வி கற்பிக்கும் பொறுப்பை ஏற்றார்.


பார்வையற்றவர்கள் கல்வி பயிலப் பயன்படுத்தும் பிரெய்லி முறையில் ஹெலன் கல்வி கற்றார்.

எழுபது ஆண்டு காலம் உயிர் வாழ்ந்த ஹெலன் கெல்லர் மறைந்து விட்டாலும் அவர் புகழும் பெருமையும் மறையாது.

ஹெலன் கெல்லருக்கு உடல் முழுக்க ஊனமிருந்தது. ஆனால் மனதில் சிறிதளவும் ஊனமில்லாமல் சாதனைகளைப் படைத்து எல்லோருக்கும் ஒரு வழிகாட்டியாக திகழ்கின்றார்.

- அ. கமர்தாஜ்,
மரிமானிகுப்பம்.

• ஹெலன் கெல்லர்



வித்தியாசம்?

சுவாமி விவேகானந்தர் சிகாகோ மாநாட்டில் இந்து சமயம் பற்றிய உரை நிகழ்த்திய பின்பு அங்குள்ள பல்கலைக் கழக மாணவர்களிடம் உரையாற்ற சென்றார். அவரது, சன்யாசி கோலத்தைக் கண்ட மாணவர் ஒருவர், அவரைக் கேலி செய்யும் பொருட்டு "சுவாமி monk (முனிவர்)குக்கும் monkey (குரங்கு)க்கும் உள்ள வித்தியாசம் என்ன?"என்று கேட்டார். சுவாமிகளோ புன்னகை மாறாமல் "எனக்கும் உனக்கும் உள்ள வித்தியாசம்" என்று பதிலளிக்கவே, கேட்ட மாணவர் வாயடைத்துப் போனார்!

இறங்க வேண்டிய இடம்?

புகழ்பெற்ற விஞ்ஞானி ஐன்ஸ்டீன் ரயிலில் பயணம் செய்து கொண்டிருந்தார். அப்போது டிக்கெட் பரிசோதகர் எல்லோரது டிக்கெட்களையும் பரிசோதித்து வரும்போது ஐன்ஸ்டீன் தனது டிக்கெட்டைத் தேடிக் கொண்டிருந்தார். அவர்தான் ஐன்ஸ்டீன்

என்பதை உணர்ந்த பரிசோதகர் "பரவா யில்லை டிக்கெட் தொலைந்து போனால் என்ன? நான் உங்களை நம்புகிறேன்" என்றார். அதற்கு ஐன்ஸ்டீனோ "நீங்கள் நம்பவேண்டும் என்பதற்காகத் தேடவில்லை. நான் இறங்க வேண்டிய இடத்தைத் தெரிந்து கொள்ளவே தேடுகிறேன்" என்று கூறிக் கொண்டே டிக்கெட்டைத் தேடிக் கண்டு பிடித்தார்.

- நா. பாண்டியம்மாள்,
ஒன்பதாம் வகுப்பு, சேது மாணிக்கம் மேல்நிலைப் பள்ளி, மேலச்சீத்தை.



• ஆபிரகாம் லிங்கன்

வேண்டாம்!

ஆப்ரகாம் லிங்கனின் பணிவு!

ஒரு தடவை அமெரிக்க ஜனாதிபதி ஆப்ரகாம் லிங்கன் காரில் சென்ற போது வழியில் நின்ற நீக்ரோ ஒருவர் தலையைத் தாழ்த்தி, தொப்பியை எடுத்து மரியாதை செய்தார். பதிலுக்கு லிங்கனும் அதே போல் மரியாதை செய்தார். "போயும், போயும் அந்த நீக்ரோவுக்கு மரியாதை செலுத்தலாமா?" எனக் கேட்டார் நண்பர். "என்னைவிட பணிவுள்ளவர்கள் உலகில் வேறு யாரும் இருக்கக் கூடாது என்பதற்காக அப்படி செய்தேன்" என்றார் லிங்கன்.

- ப. கந்தசாமி,
திருச்செங்கோடு.

மற்ற எண்ணங்கள்...

ஒருமுறை மாவீரன் நெப்போலியன் தனது நண்பர்களுடன் உணவருந்திக் கொண்டிருந்தார். அப்போது பயங்கரமான இடி சத்தம் கேட்டு அனைவரும் அதிர்ந்து வெளியே சென்று பார்த்தனர். ஆனால் நெப்போலியனோ சற்றும் அதிர வில்லை, அந்த இடத்தை விட்டு அசையவும் இல்லை. இது பற்றி நண்பர்கள் கேட்டபோது "இப்போது நான் சாப்பிட்டுக் கொண்டிருக் கிறேன். எனவே சாப்பாட்டைத் தவிர மற்ற எண்ணங்கள் என்னுள் இல்லை" என்று அமைதியாகக் கூறினார்.

- நா. பாண்டியம்மாள்,
மேலச்சீத்தை.



• விவேகானந்தர்

அவர் யார்...?

அந்தப் புதிய உறுப்பினர் இங்கிலாந்து பாராளுமன்றத்தில் தட்டுத் தடுமாறி, உரையாற்றினார். எல்லோரும் கிண்டலாகப் பார்த்தார்கள். அவருக்கு அவமானமாக இருந்தது. இருந்தாலும் தம் பேச்சுத் திறனால் பாராளுமன்றத் தைக் கலக்க வேண்டு மென்று முடிவெடுத்தார்... போராடினார்.

கடைசியில் சிறந்த பேச்சாளராக மாறியது மட்டுமின்றி 1868-ம் ஆண்டு இங்கிலாந்தின் பிரதமராகவே ஆனார். அவர்தான் 'பெஞ்சமின் டிஸ்ரேலி'.

- டி.எஸ். பாலு,
சென்னை.



* தேள் நடனம்

தேள்

என் பெயரைக் கேட்டாலே உங்களுக்கெல்லாம் பயம் வந்துவிடும். ‘கடுகு சிறுத்தாலும் காரம் குறையாது’ என்று நீங்கள் சொல்வீர்கள் அல்லவா? அதுபோல் என் உருவமும் பெயரும் சிறியதாக இருந்தாலும் உங்களுக்கு என்னைக் கண்டால் நடுக்கம்தான். அதற்குக் காரணம் என்னிடம் உள்ள கொடுக்குதான்.

கணுக்காலி தொகுதியிலே சிலந்தி வகுப்புப் பிராணிகளிலே ஸ்கார்ப் பியானீஸ் என்னும் வரிசையைச் சேர்ந்தவர்கள் நாங்கள். எங்களை ஆங்கிலத்தில் ஸ்கார்ப்பியன் என்று அழைப்பார்கள். எங்களில் ஏறக்குறைய 400 இனங்கள் உள்ளன. இந்தியாவில் 58 இனங்கள் காணப்படுகின்றன.

நாங்கள் மிகவும் பழங்காலந் தொட்டே இப்பூமியில் வாழ்ந்து வருகிறோம். 28 கோடி ஆண்டுகளுக்கு முன்பிருந்தே நாங்கள் பூமியில் வாழ்ந்து வருவதை பாறைப் படிமங்கள் மூலம் ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.


பொதுவாக எங்கள் இனங்களில் உள்ள அத்தனை தேள்களும் அளவில் வேறுபட்டிருந்தாலும் தோற்றத்தில் ஒரே மாதிரியாகத்தான் காணப்படுகிறோம். அரை அங்குலம் முதல் 8 அங்



* கருந்தேள்

குலம் வரை அளவுகள் வித்தியாசப் படுகின்றன.

என் உடலின் முதற் பகுதி தலையும் மார்பும் ஒன்றாகச் சேர்ந்துள்ள தலைமார்பு அல்லது முன்னுடல் எனப் படும். இதில் ஆறு கண்டங்கள் சேர்ந்திருக்கின்றன. இரண்டாம் பகுதி வயிறு. வயிற்றில் ஏழு கண்டங்கள் அகலமாக இருக்கும். அதற்குப் பின்னே ஐந்து கண்டங்கள் குறுகிக் காணப்படும். இது தான் வால். வாலின் நுனியில் நீங்கள் பயப்படும் கொடுக்கு என்னும் நஞ்சு சுரக்கும் பகுதி இருக்கிறது.



* பச்சைத் தேள்

நான் அநாவசியமாக என் கொடுக்கைப் பயன்படுத்துவது இல்லை. என் வேலையே கொட்டுவதுதான் என்பது போன்ற தவறான கருத்து நிலவுகிறது. நான் என்னைத் தாக்க வருபவர்களிடமிருந்து உயிரைக் காப்பாற்றிக் கொள்ளவே ஒரு தற்காப்பு ஆயுதமாக இந்தக் கொடுக்கைப் பயன்படுத்துகிறேன். இரை பிடிக்கும்போது கூட அது என் பிடியிலிருந்து தப்பிச் செல்லும்போது மட்டுமே இந்தக் கொடுக்கைப் பயன்படுத்தி நிலைகுலையச் செய்வேன். மனிதர்களுக்குக் கொட்டினால் உடனே அந்த இடம் எரிச்சலுடன் வீங்கி விடும். ஓரிரு நாட்கள் வலி இருக்கும். மருத்துவரை அணுகி சரிபடுத்திக் கொள்ளலாம். ஆப்பிரிக்காவில் வாழும் எங்கள் உறவினர்களில் சிலர் கொட்டினால் மரணம்கூட ஏற்படுவதுண்டு.

என் தலைக்கு அருகில் இரண்டு பெரிய இடுக்கிகள் இருக்கின்றன. இவை இரையைப் பிடிப்பதற்கும் உணர்ச்சிக் கருவிகளாகவும் செயல் படுகின்றன. இது தவிர நான்கு ஜோடி கால்கள் உண்டு. இவை நடக்க உதவுகின்றன.

முன் வயிற்றின் அடிப்புறம் நான்கு ஜோடி மூச்சுத் துளைகள் உள்ளன.

என்னுடைய முக்கிய உணவு பூச்சிகள்தான். சிலந்தி, மரவட்டை, பூரான், கரப்பான் போன்றவற்றையும் வாய்ப்புக் கிடைத்தால் ஒரு கை பார்த்து விடுவேன். என்னால் இரையை அப்படியே சாப்பிட இயலாது. பெரிய


எஸ். சுஜாதா



இடுக்கிகளின் மூலம் இரையைப் பிடித்து சிறிய இடுக்கிகளால் நசுக்குவேன். இரை நீர்மமாக மாறும். இந்த நீர் ஆகாரத்தை உறிஞ்சி விடுவேன். கரப்பான் பூச்சியைச் சாப்பிடுகிறேன் என்றால் சாப்பிட்டு முடித்த பின் கரப்பானின் மேலோடு மட்டும் மிஞ்சி நிற்கும்.

எனினும் எனக்கு உணவின் தேவை அதிகமில்லை. என்னால் உண வில்லாமல் ஓராண்டு காலம்கூட உயிரோடிருக்க முடியும். எங்களில் சில இனங்கள் ஈரப்பதமான இடத்தில் வாழ் கின்றன. அவற்றிற்குக் குடிப்பதற்கு நீர் வேண்டும். சில பாலைவனங்களில் வாழ்கின்றன. அவை நீரின்றியே பல மாத காலம் வாழும்.

எனக்கு இரண்டு பெரிய கண்களும் ஆறு சிறிய கண்களும் உண்டு. என்றாலும் என் பார்வைத் திறன் மிகக் குறைவு. மிகவும் அருகில் உள்ள பொருட்கள் அசை வதை வைத்தே என்னால் உணர்ந்து கொள்ள முடியும்.



நாங்கள் வெப்பம் மிக்க நாடுகளில் எல் லாம் வாழ்கிறோம். ஓலைக் குடிசை, ஓட்டு வீடு, தென்னை மரம், சந்து, பொந்து, பாறை இடுக்கு என வாழ்க்கை நடத்துகிறோம். பகலில் இப்படிப்பட்ட இடங்களில் பதுங்கிக் கொண்டிருப்போம். இரவில்தான் எங்களின் நடமாட்டம் இருக்கும்.

எங்களில் சில இனங்கள் வறட்சியான காலத்தில் மண்ணுக்குள் மறைந்து கொள்கின்றன. மழைக்காலம் துவங்கியதும் மண்ணை விட்டு வெளியே வருகின்றன.

என் உடல் வளர வளர தோல் உரியும். ஆண் தேள்கள் பெண் தேள்களைவிட மெலிந்து காணப்படும். ஆணும் பெண்ணும் சேர்ந்து அற் புதமாக நடனமாடி குடும்ப வாழ்க்கை நடத்துவோம். பல சமயங்களில் பெண் தேள் ஆண் தேளைச் சாப்பிட்டு விடுவதும் உண்டு. சில சமயங்களில் ஆண் தேள் தப்பி ஓடி விடவும் செய்யும்.

தாய் குட்டி போடும். பிறக்கும் போதே குட்டிகள் முதிர்ந்த தேளின் உருவத்தைப் பெற்றிருக்கும். தாய் குட்டிகளை முதுகில் ஏற்றிக் கொண்டு அலையும். குறிப்பிட்ட பருவம் வந்ததும் குட்டிகள் இறங்கி தனியாகச் சென்று விடுகின்றன.

எங்கள் கொடுக்கை எங்கள் உறவினர்களிடம் பயன் படுத்தினால் நஞ்சு வேலை செய்யாது. கொடுக்கில் உள்ள நச்சு சுரப்பிகள் நஞ்சை அவ் வப்போது ஊறச் செய்யும். பெரும்பாலும் மற்ற பிராணிகளை மிரட்டி ஓட வைக்கவே கொட்டுவது போல் பாவனை செய்வோம்.

வீட்டையும் சுற்றுப் புறத்தையும் நீங்கள் சுத்தமாக வைத்துக் கொண்டால் நான் ஏன் உங்களைத் தேடி வரப் போகிறேன்?

கோகுலம் க்விஸ் முடிவு



ஜூலை இதழில் வெளி வந்த க்விஸ் போட்டியில் ஆர்வத்துடன் நிறைய பேர் கலந்து கொண்டாலும் பத்தொன்பது பேரே சரியான விடைகளை அளித்திருந்தனர்.

ரூபாய் பத்து பரிசு பெறுவோர்;

1. சா. ராபின்சிங், சைதாப்பேட்டை, சென்னை.
2. எம். முஹம்மது நூருல்லாஹ், நாகப்பட்டினம்.
3. சு. அபிதா, ராணிப் பேட்டை.
4. த. சிவபாரதி, கோபி, ஈரோடு மாவட்டம்.
5. ச. சௌம்யா, காட்பாடி, வேலூர்.
6. தே. இந்துமதி, வில்லியனூர், பாண்டிச்சேரி.
7. அருணாகோபி, கொரட்டூர், சென்னை.
8. எல். அஜிதா, சின்னத் திருப்பதி, சேலம் மாவட்டம்.
9. எஸ். ஜானகி, தாராசுரம், கும்பகோணம்.
10. செ. ரேவதி, பொம்மிடி, தருமபுரி மாவட்டம்.
11. மனிஷா, வடக்கன்குளம், நெல்லை மாவட்டம்.
12. எஸ். அபிஷேகா, உசிலம்பட்டி, மதுரை மாவட்டம்.
13. பி.பி. கிருஷ்ண பிரசாத், சேலம்.
14. எம். சோமேஷ்வர், கோவை.
15. எஸ். அபிநயா, திருநெல்வேலி.
16. ஆலிஸ் ஷப்சிபா, தொரப்பாடி, வேலூர்.
17. ஜெய. அரவிந்த்குமார், அணைக்கரை, தஞ்சாவூர்.
18. கோ. செந்தமிழ்ச் செல்வி, காஞ்சிபுரம்.
19. ஆர். நித்யா, திருச்சி.

சரியான விடைகள்:

1. மேற்கு வங்க முதல்வர் புத்ததேவ் பட்டாச்சார்யா.
2. சுமத்திரா தீவு உள்ள இடம் இந்தோனேஷியா.
3. ஜப்பானின் பணம் யென்.
4. பஞ்சசீலக் கொள்கையை வகுத்தவர் நேரு.
5. உலகின் மிக உயரமான நீர்வீழ்ச்சி ஏஞ்சல் – வெனிசுயேலா.
6. மதர்தெரசா தங்கி சேவை செய்த இடம் கோல்கத்தா.
7. பக்கவாட்டில் நகரும் ஒரே உயிரினம் நண்டு.
8. கோலா கரடிகள் ஆஸ்திரேலியாவில் உள்ளன.
9. துப்பாக்கியைக் கண்டுபிடித்தவர் சாமுவேல் கோல்ட்.
10. பறக்க இயலாத பறவை கிவி.

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள். கலந்து கொண்டவர்களுக்கு நன்றி.

கோகுலம் சுழல் கோப்பை



கோகுலம் இதழ்களில் ஒரு வருடத்தில் எந்தப் பள்ளியின் படைப்புகள் அதிகம் இடம் பெறுகின்றனவோ அப்பள்ளிக்குச் சுழல் கோப்பை வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு போட்டியில் மேலச் சீத்தை, ஆண்டிபட்டி, தூத்துக்குடி போன்ற பள்ளிகள் முன்னிலையில் உள்ளன. உங்கள் பள்ளியும் கோப்பையைப் பெற உடனே படைப்புகளை அனுப்பி வையுங்கள். இன்னும் மூன்று மாதங்களே உள்ளன.

புத்திசாலி மாங்கி!

கதை: நிஷாகந்த் கென்னத்,
நான்காம் வகுப்பு,
சி.எஸ்.ஐ. பள்ளி, மூணாறு.



படம்: சேகர்

குறுக்கெழுத்துப் புதிர்

இடமிருந்து வலம்

1. வாத்து இனங்களில் பெரியது (4)

2. முதன் முதலில் இந்தியாவிற்கு வந்து குடியேறியவர்கள் (4)

4. மெட்ராஸ் ஐ என்பதைக் கண் ______ நோய் எனலாம் (2)

5. மன்னர்கள் இதில் அமர்ந்து பவனி வருவர் (3)

7. இது இல்லாமல் படகில் பயணம் செய்ய முடியாது (4)

14 ______ யே துன்பத்திற்குக் காரணம் (2)

16. மின்சாரம் இந்த உலோகத்தின் மூலம் கடத்தப் படுகிறது (4)

வலமிருந்து இடம்

3. நீர் நிலைகளில் இது பிடிக்கும்; கால் வைத்தால் வழுக்கி விடும் (2)

10. மூளை, தண்டுவடம், நரம்புகள் சேர்ந்தது ______ மண்டலம் (4)

12. அந்தக் காலத்துக் காங்கிரஸ்காரர்கள் கதர் ஆடையும் இதுவும் அணிவது வழக்கம் (3)

13. ______ போனால் சொல் போச்சு (2)

17. சென்னையில் இந்தப் பஞ்சம் தற்போது அதிகம் (4)

மேலிருந்து கீழ்

1. தென்னிந்தியர்களின் முக்கிய உணவு (3)

2. ஒட்டை முதுகில் சுமந்து செல்லும் பிராணிகளில் பெரியது (2)

6. விருந்துக்கு முன் பருகும் பானம் (2)

8. பசித்துப் ______ (2)

13. பருவத்தே ______ செய் (3)

15. 'அனுமான்' இந்த நாமத்தைத்தான் உச்சரிப்பார் (2)

கீழிருந்து மேல்

4. ______ கொடுத்தவர் தலையிலே கை வைப்பது என்று ஒரு பழமொழி உண்டு (3)

9. இது இருந்தால்தான் குழம்பு கலைக்கும் (2)


10. குழந்தைகள் தினம் கொண்டாடப்படும் மாதம் (5)

11. பிரணவ மந்திரம் (2)

16. பாங்காக் இந்நாட்டின் தலைநகர் (5)

17. பிரகதீஷ்வரர் கோயில் உள்ள இடம் (3)

– கோ. செந்தமிழ்ச் செல்வி,
பதினோராம் வகுப்பு,
சோ.சு.க.வி மேல்நிலைப் பள்ளி, காஞ்சிபுரம்



விடை 56 பக்கம்



'பே' போய் 'பெப்பே' வந்தது!

திமிலோகம் என்றொரு நாடு. அந்த நாட்டைத் திடுக்கிடத்தான் என்ற மன்னர் ஆண்டு வந்தார். அந்த மன்னருக்கு ஒருசமயம் பேச்சுரக்கை என்னும் நோய் பற்றிக் கொண்டது. அதாவது மன்னர் ஏதோ பேசிக் கொண்டிருப்பார். பேச்சின் நடுவில் எதிர்பாராத விதமாக 'பே' என்னும் ஒலி அவருடைய வாயிலிருந்து ஒலிக்கும். கேட்பவர் திடுக்கிடுவர். அதுவரை மன்னர் என்ன சொன்னார் என்பது கேட்பவருக்கு மறந்து விடும்.

''அமைச்சரே'' அழைப்பார் மன்னர்.

''மன்னா'' என்று சொல்லி பதவிசாக அமைச்சர் எதிரே நின்று மன்னர் சொல்லப் போவதைக் கேட்க ஆவலாக இருப்பார்.

''நம் நாட்டின் மீது ததிகிடதோம் நாட்டு மன்னன் படை எடுத்து வரப் போவதாகத் தெரிகிறது. உண்மையா?''

''இருக்காது மன்னா, ஏற்கெனவே தீம்தரிகிட நாட்டு மன்னன் ததிகிட தோம் நாட்டின் மீது படையெடுத்துள்ளதால், தன் நாட்டைக் காப்பாற்றிக் கொள்ள ததிகிடதோம் மன்னர் வெகுபாடு பட்டுக் கொண்டிருக்கிறார். அப்படி எல்லாம் நம் நாட்டின் மீது படை எடுப்பு நேராது.'

''பின் எதனால் நம் உளவாளிகள்... பே...''

அவ்வளவுதான். மன்னருக்கும் அமைச்சருக்கும் இடையே நிகழ்ந்த பேச்சு அதோடு நின்று விடும். 'பே' என்று உரக்கக் கூறிய மன்னர் இடப்புறமாக தலை திரும்ப, கண்களைப் பெரிதாக விழித்தபடி நிற்பார். அரண்மனைச் சிப்பந்தி மருத்துவரை அழைத்து வர ஒடுவார்.


இதேபோல மன்னர் ராணியுடன் பேசிக் கொண்டிருப்பார்.

''திருபுவனாதேவி''

''நாதா''

''நம் மகள் திருநடைச் செல்விக்குத் திருமணம் செய்வித்தாக வேண்டும்.''

''ஆம், நாதா. இது பற்றி நானே தங்களிடம் எடுத்துரைக்க இருந்தேன். தாங்கள் முந்திக்கொண்டு




விட்டீர்கள்'' — ராணி

நகைப்பார் மன்னர். ''பார், நீ நினைக்கிறாய், நான்... பே...''

அரண்மனைச் சிப்பந்திகளில் ஒருவர் அரண்மனை மருத்துவரை அழைத்து வர ஓடுவார்.

'பே' என்பதாக வாயைத் திறந்தபடி, சோழி பெரிசுக்குக் கண்களை விரித்துக் கொண்டு, மரமாக நிற்கும் மன்னரின் வாயிலும், கண்களிலும் மருத்துவர் ஒரு பொடியை லேசாகத் தூவுவார். ஆ என்று அலறிய மன்னரின் கண்கள் மூடிக் கொள்ளும். திறந்த வாயும் கதவாக இறுகச் சாத்திக் கொள்ளும்.

மன்னரின் இந்த 'பே' வியாதியைக் குணப்படுத்துவோருக்கு மன்னர் தன் மகளான திருநடைச் செல்வியைத் திருமணம் செய்து கொடுப்பார் என்றும், மன்னருக்குப் பிறகு அப்படி மாப்பிள்ளையாக வருபவர் மன்னர் ஆகலாம் என்றும் பறை அறிவிக்கப்பட்டது. மன்னரின் இந்த நோயைக் குணப்படுத்துவதற்கான பச்சிலை ஒன்று இருப்பதாகவும், அந்த



திருவாழத்தான்

இலை நண்டு வடிவத்தில் பசுமையாக இருக்கும் என்றும், பச்சிலைச் செடி ஏழு கடல் தாண்டி, ஏழு மலை தாண்டி ஏழாவது மலையின் சிகரத்தில் உள்ளது என்றும் பறை அறிவித்தவர் சொல்லிக் கொண்டே போனார்.

நாட்டு மக்கள் அனைவரும் ஏழு கடல், ஏழு மலை தாண்டிச் செல்வதாவது? நம்மால் ஆகாது என்று இருந்துவிட்டனர்.

நாட்டு மக்களில் சித்திரக்குள்ளனும் ஒருவன். அவனுடைய பெற்றோர்கள் அவனுக்கு வைத்த பெயர் பாஸ்கர். தந்தை பெயர் விருத்தாசலம். ஆகவே பள்ளியில் அவன் பெயர் வி. பாஸ்கர் என்று இருந்தது. இருந்தாலும் அவனுடைய பள்ளித் தோழர்கள் அவனைக் குட்டை பாஸ்கர் என்று அழைத்தனர். அப்படி அவர்கள் தன்னை அழைப்பதை அவன் விரும்பவில்லை. ஆகவே தன் பெயரைச் சித்திரக்குள்ளன் என்று மாற்றிக் கொண்டான். பள்ளி பேரேட்டில் அவன் பெயர் வி. சித்திரக்குள்ளன் என மாறியது. இப்போது அவனை ஊரார் விசித்திரக் குள்ளன் என அழைக்கிறார்கள்.

விசித்திரகுள்ளன் ஒருநாள் நகரத்துக்குப் பக்கத்தில் உள்ள காட்டுக்குச் சென்றான். ஒரு மாமரத்தில் ஏறினான். மரத்தில் ஒரு பருத்த கிளை. அக் கிளையின் ஓரிடத்தில் வலது காலை வைக்க, ஒரு பெரிய துளை ஏற்பட்டது. இவனுடைய வலது கால் அத் துளையுள் மாட்டிக்கொண்டது. எடுக்க முடியவில்லை.

அப்போது தரையிலிருந்து, 'யஜமானே!' என்பதான குரல் கேட்டது.

பார்த்தான் விசித்திரக் குள்ளன். தரையில் ஒரு குட்டி பூதம் நின்றிருந்தது. அடர்ந்து சுருண்ட முடி. ரத்தச் சிவப்புக் கண்கள். வட்ட வடிவ முகம்.

பருத்த உடல். திரண்ட கைகள். வால் வேறு இருந்தது.

அப் பூதத்தைக் கண்டதும் விசித்திரக் குள்ளனின் கை, கால்கள் நடுங்கின. வலது கால்தான் மரக்கிளையின் துளையில் மாட்டிக் கொண்டிருக்கிறதே! ஆகவே அவன் தவறிக் கீழே விழுந்து விடவில்லை.

"யஜமானே, என்னை அந்த மரத்தின் துளையிலிருந்து விடுவித்தது குறித்து ரொம்ப சந்தோஷம்" என்றது குட்டி பூதம் நிமிர்ந்து அவனைப் பார்த்தபடி.

"நீ என்ன, அலாவுதீனின் அற்புத விளக்கு பூதம் மாதிரியா?" விசித்திரக்குள்ளன் கேட்டான்.

"அவர் என் அப்பா."

விசித்திரக் குள்ளனிடம் வியப்பு. "அப்படியானால், நான் கேட்பதை எல்லாம் நீ தருவாயா?" எனக் கேட்டான்.

"தருவேன். ஆனால் கேட்டுக் கொண்டே இருந்தீர்களானால், நான் தந்து கொண்டே இருக்க மாட்டேன். தேவையான மூன்று விஷயங்கள் கேளுங்கள். தருகிறேன். அப்புறம் நான் உங்களை விட்டு ஓடி விடுவேன்."

விசித்திரக்குள்ளன் யோசித்தான்.

"இப்போது என்னை இந்த மரத்திலிருந்து இறக்கி விடு" என்றான்.

அடுத்த விநாடி அவன் தரையில் நின்றான்.

"இப்போ என்னை என் வீட்டில் கொண்டு போய் விடு" என்றான்.

'சர்' என்று ஆகாயத்துக்கு எழுந்தான். கீழே தரையில் மரங்கள், மேடுகள், பள்ளங்கள் பின்பக்கமாக ஓடின. பறவைகளை முந்தினான். நகரம் வந்து விட்டது. வீட்டு வாசலில் இறங்கி நின்றான்.

"சரி. இப்ப இது போதும்; மூன்றாவதாக ஏதாவது தேவையான போது உன்னை நான் எப்படி அழைப்பது?"

"சொல்கிறேன். 'தோன், தூள், தீம், தாக்' என்ற மந்திரத்தைச் சொல்லுங்கள். நான் உங்கள் எதிரே நிற்பேன்" என்றபடி மறைந்தது பூதம்.

மந்திரத்தை மனத்துள் சொல்லிப் பார்த்து, விசித்திரக்குள்ளன் பதிய வைத்துக்கொண்டான். ஒரே ஒரு வேண்டுகோள் பாக்கி. இரண்டை வீணாக்கி விட்டான்.

மன்னருக்கு வியப்பு. இந்த விசித்திரக்குள்ளன் நண்டு வடிவப் பச்சிலையை எடுத்து வந்துவிட்டானே! இவனுக்குப் போய் என் மகளைத் திருமணம் செய்து வைப்பதாவது! பின்னாட்களில் எனக்குப் பிறகு இவன் இந்நாட்டு மன்னனாக ஆவதாவது! சரி, பார்த்துக் கொள்ளலாம் என்று எண்ணியபடி மன்னன் அரண்மனை மருத்துவரைக் கொண்டு, பச்சிலையைப் பயன்படுத்தி மருந்து தயாரிக்கச் சொன்னார்.

மன்னரின் பறை ஒலி விசித்திரக்குள்ளனின் காதுகளில் விழுந்தது. ஏழு கடல் தாண்டி, ஏழு மலை தாண்டி, நண்டு வடிவ பச்சிலையை எடுத்து வர முடிவு மேற்கொண்டான். இதுக்குக் குட்டி பூதத்தின் உதவியை நாட வேண்டும்.

'தோன், தூள், தீம், தாக்' மந்திரத்தைச் சொன்னான்.

"எஜமானே!" தலைக்கு மேலாகக் கைகளைக் கூப்பியபடி குட்டி பூதம் அவன் எதிரே நின்றது.

"ஏழு கடல் தாண்டி, ஏழு மலை தாண்டி கடைசி மலை சிகரத்தில் இருக்கும் செடியின் நண்டு வடிவ இலை ஒன்றை எடுத்து வர வேண்டும்."

"தங்களை அழைத்துச் செல்கிறேன்."

"ஏன்? நீ சென்று எடுத்து வர முடியாதா?"

"முடியாது. என்னால் உங்களுக்கு உதவவே முடியும்."

இருவரும் சென்றனர். இரண்டரை நாழிகை நேரத்தில் நண்டு வடிவ பச்சிலையைப் பறித்துக்கொண்டு திரும்பினர்.

மன்னருக்கு வியப்பு. இந்த விசித்திரக்குள்ளன் நண்டு வடிவப் பச்சிலையை எடுத்து வந்துவிட்டானே! இவனுக்குப் போய் என் மகளைத் திருமணம் செய்து வைப்பதாவது! பின்னாட்களில் எனக்குப் பிறகு இவன் இந்நாட்டு மன்னனாக ஆவதாவது! சரி, பார்த்துக் கொள்ளலாம் என்று எண்ணியபடி மன்னர் அரண்மனை மருத்துவரைக் கொண்டு, பச்சிலையைப் பயன்படுத்தி மருந்து தயாரிக்கச் சொன்னார்.

மருத்துவர், மன்னருக்கு மருந்தை வாயில் திணித்து, மன்னருடைய தாடையை மூடினார். உடனே மன்னரின் 'பே' நோய் அவரை விட்டு விலகியது.

விசித்திரக் குள்ளனிடம் மன்னர் சொன்னார்: "இதோ பார், நீ செய்த உதவிக்கு நான் வெகுவாகக் கடமைப்பட்டுள்ளேன். அதுக்காக நான் அறிவித்தபடி உனக்கு என் மகளைத் திருமணம் செய்து கொடுக்க முடியாது. நீ குள்ளமாக இருக்கிறாய். திருமணத்துக்குப் பிறகு நீயும், என் மகளும் எங்காவது நடந்து செல்ல வேண்டும் என்றால், என் மகள் உன்னை இடுப்பில் தூக்கி வைத்துக் கொண்டு சென்றாக வேண்டும். மேலும் நாட்டு மக்கள் இத்தனை குள்ளமாக உள்ள உன்னைத் தங்கள் மன்னனாக ஏற்க மாட்டார்கள். ஆகவே உனக்கு நான் நிறையப் பணம் தருகிறேன். அரண்மனை போன்ற வீடு கட்டித் தருகிறேன். உன் போன்று குள்ளமாக உள்ள ஒரு பெண்ணைப் பார்த்து, உனக்குத் திருமணம் செய்து வைக்கிறேன்" என்றார்.

"மன்னா, தாங்கள் இந் நாட்டு மன்னர். சொன்ன சொல் தவறுவது மன்னருக்கு அழகு அல்ல. தாங்கள் தங்கள் மகளை எனக்கு மணம் புரிந்து தரத்தான் வேண்டும். தங்களுக்குப் பிறகு இந் நாட்டை ஆளும் உரிமையையும் எனக்குத் தந்தாக வேண்டும்" என்று விசித்திரக்குள்ளன் சொன்னான்.



"உங்க சொந்த ஊர் எது?"
"எனக்கு அந்த அளவுக்கு வசதி இல்லைங்க. சொந்தமா வீடுதான் இருக்கு!"
– எம். வினோத்

மன்னருக்கு இது கேட்டுக் கோபம் வந்தது. "யார் அங்கே?" – அழைத்தார்.

நான்கு காவலர்கள் கைகளில் வேல் கம்புகளுடன் விரைந்து வந்தனர்.

"இவனை இழுத்துச் சென்று சிறையில் அடையுங்கள்" என்றார் மன்னர்.

அவர்கள் அவனை நெருங்கியபோது, விசித்திரக்குள்ளன், "தோன், தூள், தீம், தாக்" என்றான்.

உடனே பூதம் அங்கு நின்றது. அதைப் பார்த்த மன்னரும், காவலர்களும் நடு நடுங்கியபடி நின்றனர்.


மன்னர், "பே... பெப்பே... பெப்பெப்பே..." என்றார். அவர் தலை திரும்பியது. கண்கள் பெரிய சோழிகளாக நிலைகுத்தி நின்றன. வாய் பிளந்தது.

குட்டி பூதம் விசித்திரக்குள்ளனைப் பார்த்துக் கேட்டது: "நான்தான் உங்களுக்கு மூன்று உதவிகள் மட்டுமே செய்வேன் என்று சொல்லி இருந்தேனே! உங்கள் மூன்று வேண்டுகோள்கள் தீர்ந்துவிட்டன. அப்படி இருக்க இப்போது ஏன் அழைத்தீர்கள்?"

"சரி, போ" என்று பூதத்திடம் கூறிய விசித்திரக் குள்ளன் அரண்மனையை விட்டு வெளியே வந்தான்.


வாக்குத் தவறிய மன்னர் வெகுநாள் வரை நோயுடன் இருந்தார். 'பே' நோய் அகன்று 'பெப்பெப்பே' நோய் அவரைத் தொற்றிக் கொண்டது.

லின்னேயஸ். இவரது முழுப் பெயர் 'கார்லவான் கேரோவஸ் லின்னேயஸ்' என்பதாகும். ஸ்வீடன் நாட்டைச் சேர்ந்த இவர் 1758ஆம் ஆண்டில் இயற்கை வகைப்பாடு என்ற புத்தகத்தை வெளியிட்டார். உயிரினங்களுக்கு இரட்டைப்




பெயரிட்டு வழங்கும் முறையை முதன் முதலில் மேற்கொண்டார். இன்று வரை இம்முறை பின்பற்றப்பட்டு வருகிறது. இரட்டைப் பெயரிடும் முறையை 'அறிவியல் பெயர்' என்றும் வழங்குகின்றனர்.

சம்மர் பேலஸ். ரஷ்யாவில் உள்ள இந்த அரண்மனை புகழடையக் காரணம் அதில் அமைந்துள்ள ஒரு அறைதான். இந்த அறையின் சுவர்களில் ஏராளமான ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. ஆம்பர் எனப்படும் ஒரு வகைப் பிசினைப் பூமியிலிருந்து தோண்டி எடுத்து ஓவியங்களுக்கு எழில் கூட்டியுள்ளனர். இந்த ஒரு அறைக்கு மட்டும் 12 டன் ஆம்பர் பயன்படுத்தப்பட்டுள்ளது. சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்த இந்த அரண்மனை ஒரு காலத்தில் எட்டாவது அதிசயமாகக் கருதப்பட்டது!



- எஸ். மோகன்ராஜ், சீர்காழி.

பிரிட்டிஷ் தன் காலனி ஆதிக்கத்தை உலகெங்கும் பரப்பியிருந்த காலத்தில், உயர் அதிகாரிகளைக் காணும்போது அவர்கள் கீழுள்ள அலுவலர்கள் தங்களது தொப்பியைக் கழற்றி மீண்டும் அணிவார்களாம். இதுவே காலப்போக்கில் தொப்பியைக் கழற்றாமல், கழற்றுவது போன்று பாவனை செய்துள்ளனர். இதுவே தற்போது நடைமுறையிலிருக்கும் 'சல்யூட்' ஆகும்.



- நா. பாண்டியம்மாள்,
ஒன்பதாம் வகுப்பு,
அரசினர் மேல்நிலைப் பள்ளி, மேலச்சீத்தை,
இராமநாதபுரம்.

தேனைக் காட்டும்


ஜப்பானில் உள்ள கான் சாய் சர்வதேச விமான நிலையம் தீவில் அமைந்த விமான நிலையமாகும். இத்தீவு ஓசாகா கடற் கரையிலிருந்து 5 கி.மீ. தொலைவில் உரு



வாக்கப்பட்ட செயற்கைத் தீவாகும். இத்தீவை உருவாக்க கோடிக்கணக்கான டன் பாறைகளும் மற்றும் இதர பொருள்களும் கலவையாக கடலில் கொட்டப்பட்டது. இது 4.75 கி.மீ. நீளமும் 1.23 கி.மீ. அகலமும் கொண்டது. இந்த விமான நிலையத்தை மிதக்கும் விமான நிலையமாக்க ஜப்பான் அரசு முயற்சித்தது. பருவ நிலை ஒத்துழைக்காததால் தீவு விமான நிலையமாக உருவாகியது. இந்த விமான நிலைய கட்டடம்தான் உலகிலேயே அதிக மதிப்பு மிக்க கட்டடமாகக் கருதப்படு

கிறது. இதன் மதிப்பு சுமார் 72,000 கோடி.

- ஹ. அருண்குமார், ஒன்பதாம் வகுப்பு, அரசினர் மேல்நிலைப் பள்ளி, மேலச்சீத்தை, இராமநாதபுரம்.




பறவை!


தென் கொரியாவில் தேன்காட்டி என்று ஒரு பறவை உள்ளது. எந்த இடத்தில் தேன்கூடு இருக்கிறது என்பதை இவை தேடிக் கண்டுபிடித்து தேன் வேட்டை ஆடுபவர்களை அந்த இடத்துக்கு அழைத்துச் செல்லும். இதற்காகவே இந்தப் பறவைகளை அங்குள்ள பழங்குடி மக்கள் வளர்க்கிறார்கள். இந்தப் பறவையின் முக்கிய உணவு தேனடைதான். மனிதனுக்குத் தேன், பறவைகளுக்குத் தேனடை.

- ஆறுபாதி புகழேந்தி.

கற்பூர மரம் ஈரத்தை உறிஞ்சும் தன்மையுடையது. நீரும், சேறுமான நிலத்தில் உள்ள ஈரத்தை இம்மரத்தின் வேர்கள் உறிஞ்சி எடுத்து விடுவதால் நிலம் கெட்டிப்படும். மேகக் கூட்டங்களில் உள்ள நீர்த்துளிகளை இதன் இலைகள் மண்ணை நோக்கி ஈர்க்கும் தன்மையுடையவை. மேகங்கள் மரம் மீது இறங்கினால் இம்மரத்தின் கீழே மட்டும் மழை பெய்ததுபோல நீர்த் துளிகள் 'சடசட' வென வீழ்வது அருமையான காட்சியாக இருக்கும்.

- எம். ஜரினா பானு.





வௌவால்கள் சுமார் 1000 வகைகள் உள்ளன. இந்தியாவில் 96 வகைகள் இருப்பதாகக் கூறப்படுகிறது. வௌவால்கள் இரவு நேரங்களில் கணிசமான அளவு கொசுக்கள், வண்டுகள், பூச்சிகளைத் தின்கின்றன. வௌவால் மட்டும் இல்லையெனில் உலகில் சிறு பூச்சிகள், வண்டுகள், கொசுக்களின் பெருக்கம் கட்டுக்கடங்காமல் போய் விடும் என விலங்கியல் நிபுணர்கள் கூறுகிறார்கள். வௌவால்கள் தோன்றி சுமார் 5.1 கோடி ஆண்டுகள் ஆகின்றன.

- ராதிகா அழகப்பன்


ஆக்ஸ்ஃபோர்டு பேராசிரியர் ஜேம்ஸ்முர்ரே அகராதியைத் தொகுத்துக் கொண்டிருந்த போது டாக்டர் மைனர்ஸ் என்பவரிடமிருந்து உருப்படியான யோசனைகளும் புதிய வார்த்தைகளும் அதன் அர்த்தங்களும் பற்றி தொடர்ந்து கடிதங்கள் வந்து கொண்டிருந்தன. அவருக்கு நேரில் நன்றி தெரிவிப்பதற்காக குறிப்



பிட்டிருந்த விலாசத்துக்குச் சென்ற பேராசிரியருக்கு அதிர்ச்சியாக இருந்தது. அது ஒரு மனநல மருத்துவ விடுதி. டாக்டர் மைனர்ஸ் புத்தி பிசகி ஒருவரைக் கொன்றுவிட்டதாகவும் சிகிச்சைக்காக அங்கு இருப்பதாகவும் தெரியவந்தது. விடுதியில் ஓயாமல் படித்துக் கொண்டிருந்த மைனர்ஸ் தமக்குத் தோன்றிய வார்த்தைகளை ஜேம்ஸ் முர்ரேக்கு எழுதியனுப்பிக் கொண்டிருந்தார். அவர் கண்டுபிடித்த ஆயிரக்கணக்கான வார்த்தைகள் ஆக்ஸ்போர்ட் அகராதியில் உள்ளன.


- ஜி.கே.எஸ்.மூர்த்தி, கோபிசெட்டிப்பாளையம்.

தண்ணீரில் வாழும் வாத்து அன்னம்



போன்ற பறவைகளின் காலருகே எண்ணெய்ப் பசை சுரக்கும் ஒரு சுரப்பி உள்ளது. அது எண்ணெய்ப் பசையைச் சுரப்பதால் ஈரம் ஒட்டுவதில்லை. இறகுகளும் நெருக்கமாக அமைந்திருப்பதால் தண்ணீர் புக வாய்ப்பில்லை.


- ஜனனி, திருவனந்தபுரம்.



உலகில் மற்ற எந்த நதிக்கும் இல்லாத ஒரு தனிச்சிறப்பு டேன்யூப் நதிக்கு உள்ளது. இந்த நதிக்கரையில் மூன்று நாடுகளின் தலைநகர்கள் அமைந்துள்ளன. அவை யுகோஸ்லேவியாவின் தலைநகர் பெல்கிரேட், ஹங்கேரியின் தலைநகர் புடாபெஸ்ட் மற்றும் ஆஸ்திரியாவின் தலைநகர் வியன்னா.

- உ. ராமநாதன், நாகர்கோவில்.

யானை அதன் துதிக்கையால் தண்ணீரை உறிஞ்சிக் குடிக்கிறது என்று பலரும் நினைக்கிறார்கள். உண்மையில் அது நீரை துதிக்கையினால் உறிஞ்சி, வாயினுள் செலுத்தி பிறகே வயிற்றுக்கு அனுப்புகின்றது. எல்லா உணவுப்



பொருட்களையும் அது அவ்வாறே உண்ணுகிறது. அடிக்கடி யானை காதுகளை அசைப்பதைப் பார்த்திருக்கிறோம். அப்படி அது அசைக்காவிட்டால் சூடு அதிகமாகி இறந்து விடும்.

- நா. ரமேஷ்குமார், கரூர்.



● மின்சாரம் ஒரு வினாடிக்கு இரண்டு லட்சத்து எண்பதாயிரம் மைல் வேகத்தில் பாய்கிறது.

● ஒளி ஒரு வினாடிக்கு ஒரு லட்சத்து எண்பதாயிரம் மைல் வேகத்தில் ஊடுருவுகிறது.

● ஒலி ஒரு வினாடிக்கு ஆயிரத்து நூறு அடிகள் வரை பரவுகிறது.

- ஏ. கோவிந்தன், சேலம்

பள்ளிகளில் போட்டிகள்!





படம் : ஸ்ரீஹரி

பள்ளிகளில் கோகுலம் போட்டிகளை நடத்தி வருகிறது. 4.7.2001 அன்று சென்னை கே.கே.நகரில் உள்ள எம்.ஜி.ஆர். அரசினர் மேல்நிலைப் பள்ளியில் 'இயற்கை' என்ற தலைப்பில் ஓவியப் போட்டி நடத்தப்பட்டது. இப் போட்டியில் நிறைய மாணவ, மாணவியர் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு முதல், இரண்டாவது, மூன்றாவது பரிசுகள் வழங்கப்பட்டன. முதல் பரிசு பெற்ற எம். ஹேம்நாத்தின் (6ஆம் வகுப்பு) படம் இங்கு பிரசுரமாகியுள்ளது.

கோகுலம் வாசகர்களே! உங்கள் பள்ளியிலும் இது போன்ற போட்டிகளை நடத்த வேண்டும் என்றால் நீங்களோ, உங்கள் ஆசிரியர்களோ அல்லது தலைமை ஆசிரியரோ கோகுலத்தைத் தொடர்பு கொள்ளலாம்.



செய்தி சொல்லும் புறா!

இன்று தகவல் தொடர்பு தொழில் நுட்பத்தில் மனிதன் எவ்வளவோ முன்னேறிவிட்டான். உலகத்தில் எங்கோ ஓர் மூலையில் நடைபெறும் நிகழ்ச்சிகூட உடனுக்குடன் உலகம் முழுவதும் பரவி விடுகிறது. ஆனால் அறிவியல் சாதனங்கள் கண்டுபிடிப்பதற்கு முன்பு தகவல் தொடர்பு எப்படி நிகழ்ந்திருக்க முடியும்? அப்போதும் நிகழ்ந்திருக்கிறது. எப்படி தெரியுமா? உயிருள்ள ஒரு தகவல் தொடர்பு சாதனத்தால். அந்தத் தகவல் தொடர்பு சாதனத்தின் பெயர் புறா.


பறவைகளில் புறா புத்திக் கூர்மை மிக்கது. அதைப் பழக்கினால் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குச் சரியாகச் செய்தியைக் கொண்டு போய்ச் சேர்த்துவிட்டு மீண்டும் பழைய இடத்திற்கே திரும்பி விடும். எனவே புறாவின் காலில் செய்தியை எழுதி கட்டி அனுப்பி அந்தக் காலத்தில் தகவல்களைப் பரிமாறிக் கொண்டார்கள். இன்றைய தபால் துறையின் முன்னோடி என்று புறாவை சொல்லலாம்.

புறா மிகவும் வேகமாகப் பறக்கக் கூடியது. எனவே அந்தக் காலத்தில் புறாக்களைப் பந்தயங்களில் பயன்படுத்தினர்.

உலகமெங்கும் சமாதானச் சின்னமாகப் புறா போற்றப்படுகிறது. புறா தன் வாயில் ஆலிவ் இலைகளைப் பிடித்தபடி பறப்பது போன்று சமாதானச் சின்னம் உருவாக்கப்பட்டுள்ளது. ஒரு நாடும் அந்நாட்டு மக்களும் சமாதானத்தையும் அமைதியையும் விரும்புவதை மற்ற நாடுகளுக்குத் தெரியப்படுத்த புறாக்கள் அடையாளமாகப் பயன்படுத்தப்படுகின்றன. நம் ஊர்களில்கூட பெரிய தலைவர்கள் விழாக்களில் புறாக்களைப் பறக்க விடுவதைப் பார்த்திருப்பீர்கள்.



* சமாதானப் புறாவைப் பறக்க விடுகிறார் நேரு



வீட்டில் வளர்க்கும் பறவைகளுள் புறாவும் ஒன்று. புறா அழகான, மென்மையான பறவை. மிகவும் சாதுவானதும்கூட. கூட்டமாக வாழக்கூடிய இயல்புடையது. கோயில்கள், மசூதிகள், சர்ச்சுகள், பெரிய கட்டடங்களில் புறாக்களைப் பார்க்கலாம்.

புறாக்கள் எளிதில் நம்முடன் சிநேகமாகி விடக் கூடியவை. நன்றாகப் பழகிவிட்டால் நம் கையிலிருந்தே தானியத்தைக் கொத்திச் சாப்பிடக் கூடியவை.



• புறா கூண்டு

புறா வளர்க்க நல்ல கவனிப்பும் பொறுமையும் அவசியம் தேவை. இல்லாவிட்டால் நோய் எளிதில் தாக்கி விடும். எனவே புறாக்களைத் தனிக் கூண்டுகளில் வளர்க்க வேண்டும்.

விதைகள், பருப்பு, பழங்கள் முதலியவற்றை புறாக்கள் உணவாக்கிக் கொள்கின்றன. உணவைத் தீனிப் பையில் சேகரித்து வைத்துக் கொண்டு தேவைப்படும்போது அதில் ஒரு பாகத்தை இரைப்பைக்குள் கொண்டு போய் செரிமானம் செய்து கொள்ளும்.

புறாவுக்கு மற்றொரு விசேஷ குணமும் உண்டு. எல்லா பறவைகளும் தண்ணீரை அலகால் எடுத்து தலையைத் தூக்கிக் குடிக்கும். புறா மட்டும் தண்ணீரை ஸ்ட்ரா போட்டுக் குடிப்பது போல் அப்படியே உறிஞ்சிவிடும்.

இவற்றில் பல வகைகள் உள்ளன. ஒவ்வொன்றும் வண்ணம், உருவ அமைப்பு ஆகியவற்றில் சிறிது வேறுபடுகின்றன. புறாவின் முட்டை மிகவும் சிறியது. நீல நிறத்தில் இருக்கும்.


புறாக்கள் துருவப் பிரதேசத்தைத் தவிர்த்து உலகெங்கும் காணப்படுகின்றன. இந்தியப் புராணங்கள், உலக இலக்கியங்கள், பைபிளில் புறாவைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இன்றும் ஒரிஸ்ஸா மாநிலம் கட்டாக்கில் உள்ள காவல் துறையில் காவல் துறை செய்திகளைச் சுமந்து செல்கின்றன புறாக்கள்.

குஜராத் பூகம்பத்தின்போது அத்தனை தகவல் தொடர்பு சாதனங்களும் பழுதாகிவிட, 'ஹாம்' ரேடியோவும் புறாக்களும்தான் கைகொடுத்தன!

அட்டையில் :
மதுவந்தி
வண்ணப்படம் :
ஸ்ரீஹரி






13. ஆளப்பிறந்தவன்

கதை : ராஜி படம் : லலிதா




ஜெயசிம்மனின் கட்டுகள் பிரிக்கப்பட்டவுடன்–
இளவரசே! தங்களை இப்படி கட்டியது யார்? இப்படி ஏதாவது நடக்குமென்பதால்தான் வெளியே செல்ல வேண் டாம் என்கிறோம்.
வீரசிம்மன்தான். லைலா இல்லாவிட்டால் என்னை நீங்கள் பார்த்திருக்க முடியாது.
நான் என்ன செய்தேன்? இளவரசரின் கிராமத்து நண்பர்களுக்குத் தான் நன்றி சொல்ல வேண்டும்.
வர, வர இந்த வீரசிம்மனின் தொல்லை அதிகரித்து வருகிறது. இதற்குச் சீக்கிரம் முடிவு கட்டணும்.
ஆமாம்.


சில நாட்கள் கழித்து சோமு அரண்மனைக்கு வந்தான்.
வா சோமு. உன்னை இந்தப் பக்கமே காணவில்லையே?
நம் கிராமத்தில் ஒரு குள்ளச் சாமி வந்திருக்கிறான்.
குள்ளச் சாமியா? அவனால் என்ன பிரச்னை?
தாடி, மீசையோடு கூடிய அவன் உருவத்தில் அகத்தியர். உனக்கு எதிராகப் பிரச்சாரம் செய்யறான்.
எனக்கு எதிராகவா? நம்ப முடியலையே!



மக்களும் அவனுக்கு மதிப்புத் தருகிறார்கள்
என்ன சொல்றான்?
அனுபவம் இல்லாச் சிறுவனாம் நீ. வீரசிம்மனே நாட்டுக்கு நல்லாட்சி தரக் கூடியவனாம்... சாமியார் சொல்வதை உண்மையென்று மக்களும் நம்புகிறார்கள்.
சோமு, வீரசிம்மனின் சூழ்ச்சிகளில் இதுவும் ஒன்றாக இருக்கலாம்.
எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது.
நானும் லைலாவும் நாளை கிராமத்துக்கு வந்து அந்தக் குள்ளச் சாமியின் குட்டை உடைத்து விடுகிறோம். நீயும் தயாராக இரு.
சரி ஜெயசிம்மா. வருகிறேன். நாளைக்கு வந்து விடுங்கள்.

– தொடரும்



நரியின் கடைக்கு வந்த எருமை அண்ணா!

எருமையண்ணே
எருமையண்ணே
எங்க வந்தீங்க?
எப்ப நீங்க களத்தை விட்டு
எழுந்து வந்தீங்க?

நம்ம கடைக்கு வந்ததுக்கு
நல்வரவண்ணே!
உம்ம தேவை சொல்லுங்கண்ணே
உட்காருங்கண்ணே!

கோடை வெய்யில் தாக்கிடாத
குடைகள் வேணுமா?
கொட்டும் மழையில்
நனைத்திடாத
கோட்டு வேணுமா?

பாசி வீச்சம் மறைந்து போக
பவுடர் வேணுமா?
பூச்சி, பூரான் கடி மருந்து
பூச வேணுமா?


சும்மா சும்மா தூக்கம் சோம்பல்
சுணக்கம் போகவே
சுறுசுறுப்புச் சூர்ணமிங்கே
இருக்குதின்னாங்க.

சுறுசுறுப்புச் சூர்ணமிங்கே
இருக்குதா தம்பி?
நிறுத்துப்போடு நாலு கிலோ
நமக்கு நீ தம்பி!

சுறுசுறுப்புச் சூர்ணம் முழுக்க
தீந்திருச்சண்ணே!
எறும்பு அக்கா அத்தனையும்
எடுத்துட்டாங்கண்ணே!

வந்துவிட்டால் சொல்லிவிடறேன்
வாங்கிப் போங்கண்ணே;
அந்த மட்டும் தூங்கிக்குங்க
அலுப்புப் போகவே!

— என். சுந்தரராமன்,
மதுரை.



இறந்த பாம்பு ஊர்ந்தது!



தொட்டபெட்டா

சென்ற விடுமுறையில் நானும் என் குடும்பத்தினரும் ஊட்டி சென்றிருந்தோம். எங்கள் நண்பர் ஒருவர் எங்களுக்கு 'ஊட்டி'யைச் சுற்றிக் காண்பிக்க எங்களுடன் வந்திருந்தார். முதலில் நாங்கள் 'தொட்டபெட்டா'விற்குச் சென்றோம். செல்லும் வழியில் அந்த நண்பர் தொட்டபெட்டாவின் சிறப்புகளை விளக்கினார். நாங்கள்



அங்கு சென்று விட்டுத் திரும்பும்போது என் நான்கு வயது தம்பி, தான் சுற்றிப் பார்த்தது தொட்டபெட்டாதான் என்று அறியாமல், "அப்பா, எனக்கு போர் அடிக்குது. அடுத்தது 'தொட்டபெட்டா'விற்குப் போறதானால்தான் நான் இங்கிருந்து கிளம்புவேன்" என்று அடம்பிடித்தானே பார்க்கலாம்! நாங்கள் மட்டுமின்றி அருகில் இருந்தவர்களும் சிரித்தனர்.

– ஜெ. லாவண்யா, பதினோராம் வகுப்பு, குளுனி மேல்நிலைப் பள்ளி, நெய்வேலி.

துண்டு

ஒரு நாள் இனிப்பகத்திற்குச் சென்று பலகாரம் வாங்கி வருமாறு தம்பியிடம் சொன்னேன். கடைக்குச் சென்று பலகாரம் வாங்கித் திரும்பிய தம்பி, "அந்தக் கடையில் கால் கிலோ அல்வா வாங்கினால் ஒரு துண்டு இலவசமாகத் தருகிறார்கள்" என்றான். "துணி விற்கும் விலையில் கால்கிலோ அல்வாவுக்கு ஒரு துண்டு கொடுத்தால் அவர்களுக்கு எப்படி கட்டுபடியாகும்?" என்று நான் கேட்டேன். அதற்குத் தம்பி, "அவர்கள் கொடுப்பது துணித்துண்டு அல்ல, அல்வாத்துண்டு" என்றதும் சிரித்துவிட்டேன்.

– அ. பேச்சியப்பன், ராஜபாளையம்.

பாம்பு

ஒரு நாள் இரவு எங்கள் வீட்டிற்குள் ஒரு பாம்பு நுழைந்துவிட்டது. நாங்கள் அதை அடித்து வீட்டின் பின்புறத்தில் போட்டு விட்டோம். மறுநாள் காலையில் தூங்கிக் கொண்டிருந்த என்னை எழுப்பி என் தம்பி "அக்கா நாம் நேற்று அடித்த பாம்பு சாகவில்லை. அது இன்னும் உயிருடன் தான் இருக்கிறது" என்றான். எனக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. சென்று பார்த்தேன்.



அடித்துப் போடப்பட்டிருந்த பாம்பு உண்மை யாகவே அசைந்தது. என் தம்பி பயந்து தூர ஓடிவிட்டான். எனக்கும் பயமாகத்தான் இருந்தது. இன்னும் அருகில் சென்று பார்த்தபோதுதான் ஏராளமான எறும்புகள் கூடி அதன் உடலை இழுத்துக் கொண்டு இருப்பது தெரிந்தது. பிறகுதான் நிம்மதி ஏற்பட்டது!

– ஹெச்.ஜாஹிரா பர்வீன், திரு.பட்டினம்.



மனசு வலிக்கும்

பக்கத்து வீட்டுச் சிறுவன் காலில் அடிபட்டுக் கிடந்தான். அடிபட்ட காயத்தில் தைலம் தடவ "அம்மா, கால் வலி அதிகமாகுதும்மா. வந்து தடவி விடு" என்று அழைத்தான். வேலை செய்து கொண்டிருந்த அவனின் அம்மா, "உனக்கு இதுதான் வேலை. ஆடித்திரியா தேன்னா கேட்கிறியா...? நல்லாபடு" என்று கோபப்பட்டார். உடனே அச்சிறுவன், "இப்ப மனசும் வலிக்குதும்மா. எனக்குத் தைலம் தடவ வராம இப்படி நீ பேசினா இன்னும் மனசுல வலி அதிகமாயிடும்மா" என்று சற்றுச் சிரிப்பும், சற்றுச் சோகமுமாகச் சொல்ல, அவன் அம்மா "இப்படி பேசுறதுதானே என் பிள்ளைக்கிட்ட எனக்குப் பிடிச்சதே" என்றபடி தைலம் எடுத்து வந்து அவனுக்குப் பரிவோடு தடவிவிட்டார். "இந்த பாசம் தானே எனக்கு உன்கிட்ட பிடிச் சது" என்று அவன் சிரித்தான்.

– ராமகிருஷ்ணன், காயக்காடு.

வெயில்

சமீபத்தில் எங்கள் சித்தியின் திருமணம் நடந்தது. மண்டபத்தின் நுழைவு வாயிலருகே நானும் என் சகோதரியும் பன்னீர் செம்பு, சந்த னம், சர்க்கரைத் தட்டுகளோடு நின்று வருபவர் களை வரவேற்கத் தயாரானோம். என்னுடைய



இன்னொரு தங்கை ஓடிவந்து எங்களுடன் சேர்ந்து நிற்க, வீடியோ எடுப்பவர் தன் படப் பதிவை எங்களிடமிருந்து தொடங்கும் பொருட்டு எங்களை ஃபோகஸ் பண்ண ஆரம்பித்தார். என் குட்டித் தங்கை, "அக்கா என் மேல வெயி லடிக்குது. குடை கொண்டாங்க" என்று கூற, வீடியோகிராஃபர் உட்பட அனைவரும் சிரித்து விட்டோம்!

- ப. சௌந்தர்யா, ஆறாம் வகுப்பு, பிரின்ஸ் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி, சென்னை.

பால்?

அன்று ஞாயிற்றுக் கிழமையாதலால் நாங் கள் அனைவரும் வெளியில் செல்ல முடிவு செய் தோம். வீட்டிலிருந்த வேலைக்கார அக்காவிடம் பாலை வாங்கி வைக்குமாறு கூறிவிட்டுச் சென் றோம். எங்கள் வீட்டிற்கு வழக்கமாக பசு, எருமை இரண்டின் பாலும் வருவதுண்டு. அந்த அக்கா இரண்டு பாலையும் வாங்கி ஒரே பாத்திரத்தில் ஊற்றி விட்டாள். வெளியில் போய்விட்டு வந்து நாங்கள் "பசும் பால் எங்கே, எருமைப்பால் எங்கே?" என்று கேட்டோம். அக்கா ஒரு பாத்திரத்தைக் காட்டினாள். "ஏன் இரண்டையும் ஒன்றாக ஊற்றி இருக்கிறாய்" என்று கேட்டோம். பயந்து போன அக்கா தலையைச் சொறிந்து கொண்டே "பசும்பாலை மேலாகத்தான் ஊற்றி இருக்கிறேன்" என்றாள். கோபமாக இருந்த நாங் கள் அனைவரும் சிரித்துவிட்டோம்!

– எம். எஸ். கலா, பன்னிரண்டாம் வகுப்பு, குத்தாலம்.





அழ. வள்ளியப்பா நினைவு நாடகப் போட்டியில் இரண்டாம் பரிசு பெறும் நாடகம்.

காட்சி - 1

இடம் : *பாரியின் குடிசை*

அறிவொளி : பாரி...! பாரி...!

பாரி : அட! வாடா அறிவு உட்கார். அம்மா அறிவு வந்திருக்கான்.

அறிவொளி : டேய்! நான் வர்றது இருக்கட்டுண்டா. உங்கப்பாவுக்கு உடம்பு சரியில்லையாமே கேள்விப்பட்டேன். ஏண்டா நீ என்கிட்ட சொல்லலை?

பாரியின் அம்மா : ஆமாம் தம்பி. இவன் அப்பாவுக்கு ரெண்டு வாரமாகவே உடம்பு சரியில்லை. இத்தனை நாளா வேலைக்குப் போகாம இன்னிக்குப் போயிருக்கார்.

பாரி : ஆமாண்டா! அதனால வீட்லேயும் ரொம்பப் பணமுடை. என்ன செய்றதுன்னே தெரியலே.

அறிவொளி : எனக்குத் தெரியுண்டா. அதனாலதான் விஷயம் தெரிஞ்சதும் உன்னுடைய ஸ்கூல் ஃபீஸை நானே கட்டிட்டேன்.

பாரி : டேய்! நான் வாய் திறந்து கேட்காமலே, தானே முன்வந்து உதவி செய்யறியே! உன்னை மாதிரி நண்பன் கிடைக்க நான் கொடுத்து வச்சிருக்கணும்டா.

தமிழ் ஆசிரியர் (உள்ளே நுழைந்து கொண்டே) : நீ மட்டுமில்லேப்பா. உன்னை மாதிரி நண்பன் கிடைக்க அறிவொளியும் கொடுத்துத்தான் வச்சிருக்கணும்.



நல்ல நட்பு!

இ. ஞானப்பிரகாஷ்

பாரி : நீங்களா சார்! வாங்க, வாங்க.

அறிவொளி : வந்து உட்காருங்க சார்.

தமிழ் ஆசிரியர் : ஏன் பாரி! போன வருஷம் நாமெல்லாம் பிக்னிக் போன போது, ஆற்றிலே அடிச்சிக்கிட்டுப் போக இருந்த அறிவொளியை உன்னுடைய உயிரையும் பொருட்படுத்தாம ஆற்றிலே குதிச்சுக் காப்பாத்தினியே! அதை நீ மறந்தாலும், நாங்களோ அறிவொளியோ மறக்க முடியுமா?

பாரி (சற்றே கூச்சத்துடன்) **:** அடப் போங்க சார்! நீங்க என்னை ரொம்பப் புகழ்றீங்க. அம்மா இவர்தான் எங்க தமிழ் ஆசிரியர்.

த. ஆ. : வணக்கம்மா! இந்த வருஷம் எங்க பள்ளியின் 'சிறந்த நண்பர்கள்' விருதை இவங்களுக்கே கொடுக்கலாம்னு முடிவு செய்திருக்கோம். இந்தப் பக்கம் ஒரு வேலை இருந்தது. அதை முடிச்சுட்டு அப்படியே விஷயத்தையும் சொல்லிட லாம்னுதான் வந்தேன்.

பாரியின் அம்மா : அப்படியா! ரொம்ப நன்றிங்க ஐயா.

பாரி, அறிவொளி : ரொம்பத் தேங்க்ஸ் சார்.

த. ஆ. : இருக்கட்டும். நாளைக்குக் கடைசி பரீட்சை. அதுவும் தமிழ். நல்லாப் படிச்சிருக்கீங்களா?

அறிவொளி : நல்லாப் படிச்சிருக்கேன் சார்.

பாரி : நானும்தான் சார். எப்படியும் இந்தத் தடவை முதலிடம் எங்க ரெண்டு பேரில் ஒருத்தருக்குத்தான்.

த. ஆ. : அப்படியா! ரொம்ப மகிழ்ச்சி. சரிம்மா நான் வரேன்.

காட்சி - 2

இடம் *: பள்ளியின் தேர்வு அறை.*

ஆசிரியர் : தேர்வு முடிய இன்னும் கொஞ்ச நேரம்தான் இருக்கு. சீக்கிரம் எழுதி முடிங்க.

அறிவொளி (ஆசிரியருக்குத் தெரியா மல் கிசுகிசுப்பான குரலில்) **:** டேய் பாரி. எல்லாக் கேள்விகளையும் எழுதிட்டேன்.

ஆனால் ரெண்டு அஞ்சு மார்க் கேள்விகள் மட்டும் தெரியலைடா. அதை மட்டும் கொஞ்சம் காட்டேன்.

பாரி (வியப்புடன்) : டேய்! என்னடா சொல்றே! காப்பியடிச்சு எழுதப் போறியா?

அறிவொளி : ஆமாண்டா! ரெண்டே ரெண்டுதானே ப்ளீஸ்.

பாரி (கோபத்துடன்) : முடியாதுடா அறிவு. நீ தப்பு செய்ய நானே உடந்தையா இருக்க மாட்டேன்.

அறிவொளி : டேய்! என்னடா சொல்றே? நான் உன் நண்பனில்லையா? எனக்குக் காட்ட மாட்டியா?

பாரி : நான் உன் நண்பன்தான். ஆனால் இந்த விஷயத்தில் அது முடியாதுடா. இதுக்குமேலே நீ தொல்லை பண்ணி னேன்னா நான் ஆசிரியரிடம் உன்னை மாட்டி விட்டுடுவேன். பேசாமல் எழுது.

(அறிவொளி அதிர்ச்சியில் உறைகிறான். பின்னர் எழுதி முடித்த விடைத்தாளை ஆசிரியரிடம் மடித்துக் கொடுத்து விட்டுக் கோபத்துடன் வெளியேறுகிறான்)

காட்சி - 3

இடம் : *பள்ளியின் வாயில்*

பாரி (வெளியேறிக் கொண்டிருக்கும் அறிவொளியை நோக்கி நடந்தவாறு) : டேய் அறிவு! கொஞ்சம் நில்லுடா. டேய் ஒரு நிமிஷம் நில்லு! ப்ளீஸ்!

அறிவொளி (நின்று, கோபத்தோடு) : என்ன?

பாரி : என்ன அறிவு? அதுக்குள்ள கோவிச்சுக்கிட்டு...

அறிவொளி (அவன் பேசி முடிப்பதற் குள் குறுக்கிட்டு) : இதோ பார்டா பாரி. இனிமேல் நீ யாரோ? நான் யாரோ? அவனவன் நட்புக்காக என்னென்னவோ செய்யறான். ஆனால் நீ... சீ.

பாரி (கண்கலங்க) : டேய்! என்னடா சொல்றே?

அறிவொளி : டேய்! சும்மா நிறுத்துடா. நம்ம ஸ்கூல்லே எவ்வளவு பேர் தன் னுடைய நண்பனைப் பார்த்தே எழுதறாங்க தெரியுமா? அவங்களோட நண்பர்கள் எதுக்காகத் தன்னோட விடைத்தாளைக் காட்டணும்? எல்லாம் தன் நண்பன் பாஸ் பண்ணணுமேன்னுதான். உனக்கு அப்படி ஒரு அக்கறை என் மேல் இருந்திருந்தால் நீ இப்படி செய்திருப்பியா? போடா டேய்!

(கண்ணீருடன் வீடு திரும்புகிறான் பாரி)

காட்சி - 4

இடம் : *வகுப்பறை*

மாணவர்கள் : காலை வணக்கம் ஐயா!

தமிழாசிரியர் : வணக்கம். உட்காருங்க எல்லாரும். இன்னைக்கு நான் உங்க எல்லாருக்கும் ஒரு கதை சொல்லப் போறேன்.

அறிவொளி : அட! கதையா! என்ன சார் திடீர்னு?

த. ஆ. : ஒண்ணுமில்லேப்பா! எப்பவும் தான் பாடம் நடத்தறேனே. இன்னைக்கு ஒரு மாறுதலா இருக்கட்டுமேன்னுதான்.

மாணவர்கள் : சொல்லுங்க சார்.

த.ஆ. : ஒரு ஊரிலே ஒரு அப்பா, அம்மா இருந்தாங்க. அவங்களுக்கு செல் வின்னு ஒரு பெண். அந்தப் பெண்ணுக்கு ஒருமுறை கடுமையான டைஃபாய்டு காய்ச்சல். அவளுக்குச் சிகிச்சை செய்த டாக்டர், காய்ச்சல் குணமானாலும்கூட இன்னும் ஒரு மாதத்துக்குச் செல்வி காரமான உணவே சாப்பிடக் கூடாதுன் னுட்டார். ஒரு வாரம் கழிச்சு செல்வியின் மாமா ஊரிலேயிருந்து வந்தார். அவருக்கு இந்த விவரமொன்றும் தெரியாது. அவர் செல்விக்குப் பிடிக்குமேன்னு காரச் சீடை,

---


"என்ன சார் இருக்கு?"

"தோசை இருக்கு, சட்னி இல்லை. இட்லி இருக்கு, சாம்பார் இல்லை. குருமா இருக்கு, பூரி இல்லை, சார்."

"பிறகு ஏன்யா கடையை மூடாமல் வச்சிருக்கீங்க?"

"பூட்டு இருக்கு, சாவி இல்லை, சார்!"

- வினோதா



மிளகு வடை எல்லாம் வாங்கி வந்திருந்தார். செல்வி எவ்வளவோ கெஞ்சியும்கூட, செல்வியின் அம்மா, அவளுக்குச் சின்னத் துண்டுகூடத் தரமாட்டேன்னுட்டாங்க. அறிவொளி! நீ சொல்லு செல்வியின் அம்மா செஞ்சது சரிதானா?

அறிவொளி : சரிதான் சார்.

த. ஆ. : எப்படி சொல்றே?

அறிவொளி : சார், டைஃபாய்டு ரொம்பக் கடுமையான காய்ச்சல். அந்த நேரத்திலே டாக்டர் சொன்னபடி கேட்பது தான் நல்லது. பலகாரங்களை எப்போ வேண்டுமானாலும் சாப்பிடலாம். பலகாரம் சாப்பிடணுங்கற ஒரே காரணத்துக்காக உயிருக்கே ஆபத்தை ஏற்படுத்திக் கொள்வது நல்லதா சார்? அதனாலே செல்வியின் அம்மா செய்தது சரிதான் சார்.

த.ஆ. : ஏம்ப்பா, செல்வியின் அம்மா செஞ்சது சரிதான்னு இவ்வளவு தூரம் பேசறியே. அப்படின்னா பாரி செய்தது மட்டும் எப்படி தப்பாகும்?

அறிவொளி (மிக்க வியப்புடன்) : சார்!

த.ஆ. (புன்னகைத்தபடி) : எனக்கு எல்லாம் தெரியும்ப்பா. நேத்து ஸ்கூல் வாசலருகே நீங்க ரெண்டு பேரும் பேசினதை நான் தற்செயலாகக் கேட்டேன். ஏன் அறிவொளி. தேர்வில் ஒருவரைப் பார்த்து ஒருவர் எழுதிடக் கூடாதுன்னு தான் எல்லாரையும் தள்ளி உட்கார வைக்கிறோம். அப்படியும் நீ இந்தத் தவறைச் செய்ய பாரியைத் தூண்டியிருக்கே.

அறிவொளி : சார், அது வந்து...

த. ஆ. (இடைமறித்து) : ரெண்டே ரெண்டு கேள்விதானே? அதுவும் இந்த ஒரு தடவைதானே, பார்த்து எழுதினால் என்ன தப்புன்னு நீ கேட்கலாம்.

அறிவொளி : அதில்லை சார். வந்து...

த.ஆ. (மீண்டும் கோபத்துடன் குறுக்கிட்டு) : உஷ்! பேசாதே. நான் முதலில் சொல்லி முடிக்கிறேன். நண்பன் கேட்கறானேன்னு பாரி பேப்பரைக் கொடுத்து, நீயும் அதைப் பார்த்து இந்த ஒரு முறை எழுதிட்டேன்னு வை; அதன்பின் காலத்துக்கும் உன்னால் சுயமாய்ப் படிக்கவே முடியாது. நண்பன்தான் இருக்கானே அவனைப் பார்த்து எழுதிட்டாப் போச்சு எனும் சோம்பேறித்தனம் நீ அறியாமலே உன்னிடம் வளர்ந்துடும். அடுத்தவரை



''அவர் இந்த ஊரிலேயே விரல் விட்டு எண்ணக்கூடிய பெரிய புள்ளியா?''

''இல்லை. ஒண்ணும் இரண்டும் என்னன்னு கேட்டால்கூட விரல் விட்டு எண்ண ஆரம்பிச்சுடுவார்!''

- சாயம் வெ. ராஜாராமன், சென்னை

காப்பியடிச்சு நீ எத்தனை டிகிரி வாங்கினாலும், அது உனக்கு சொந்தமாகுமா? காப்பியடிச்சு எழுதும்போது மாட்டிக் கொண்டால் உன் வாழ்க்கையே போய் விடும். அப்புறம் நீ வாழ்க்கையில் எப்படி முன்னேற முடியும்? இப்படிப்பட்ட ஆபத்திலிருந்து உன்னைக் காப்பாற்றிய உன் நண்பனுக்கு நீ நன்றி சொல்ல வேண்டாமா?

அறிவொளி : ஆமாம் சார்! என்னுடைய தவறை நான் உணர்ந்துட்டேன். நான் திருந்திட்டேன் பாரி. என்னை மன்னிப்பாயா?

(ஒன்றும் பேசாத பாரி ஆனந்தக் கண்ணீருடன் அவனைத் தழுவிக் கொள்கிறான்)

த. ஆ. : இவங்களுக்கு மட்டுமில்லே! உங்களுக்கும் சொல்றேன். தன் நண்பன் பாஸ் பண்ணணுமேன்னு, தன்னைப் பார்த்து காப்பி செய்து கொள்ள அனுமதிக்கும் ஒவ்வொரு மாணவனும், உண்மையில் தன் நண்பனுக்கு உதவி செய்யவில்லை. மிகக் கடுமையான துரோகத்தைச் செய்கிறான். இதைப் புரிஞ்சுகிட்டா நீங்க இந்தத் தவறைச் செய்ய மாட்டீங்க.

மாணவர்கள் : நாங்களும் புரிஞ்சிக்கிட்டோம் சார். இனிமேல் நாங்க இந்தத் தவறைச் செய்யவே மாட்டோம்.

தமிழாசிரியர் : நல்லது. அப்படித்தான் இருக்கணும்.

(வகுப்பு நிறைந்ததை அறிவிக்கும் மணி ஒலிக்கிறது)


கோகுலம்

போஸ்டர்




ஜெயசூர்யா

யார் அந்த மூணு பேர்?



பிடிச்ச காய்

என் தங்கை ஐஸ்வர்யா மிகவும் குறும்புக்காரி. ஏதேனும் தவறு செய்து விடுவாள். அப்பா, அம்மாவிடம் சாமர்த்தியமாகப் பேசி சமாளித்து விடுவாள். ஐஸ்வர்யாவை நான் படிக்கும் பள்ளியில் சேர்ப்பதற்காக என் அம்மா அவளுக்கு A, B, C, D, ... ஒன், டூ, த்ரீ... எல்லாம் சொல்லிக் கொடுத்து இருந்தார். எல்.கே.ஜி. அட்மிஷனின்போது இன்டர்வியூவில் கத்தரிக்காய் பொம்மையை எடுத்து "இது என்ன காய்?" என்று கேட்டார் ஒரு ஆசிரியர். இவளுக்குப் பெயர் தெரியவில்லை. இருந்தாலும் சமாளித்துக் கொண்டு... "ஐ! இது எனக்குப் பிடிச்ச காய்!" என்றாளே பார்க்கலாம். அங்கிருந்த அனைவருமே சிரித்து விட்டனர். அதேபோல ஆசிரியர் A, B, C, D சொல்லு என்றவுடன், அவள் மடமடவென, 'ஒன், டூ, த்ரீ...' என சொல்ல ஆரம்பித்து விட்டாள். ஏனெனில் அவளுக்கு A, B, C, D வரிசைப்படி முழுவதும் சொல்ல வராது. "A, B, C, D தெரியாதா?" என மேடம் கேட்க, "நீங்கள் சொல்லிக் கொடுங்கள் மிஸ். நான் சரியாகச் சொல்கிறேன்." என்றதும் ஆசிரியரும் சிரித்தபடியே அட்மிஷன் போட்டுவிட்டார்.

- பி. ஆனந்த், நான்காம் வகுப்பு ஏ பிரிவு, ஸ்ரீ சாரதா பால மந்திர், மெட்ரிகுலேஷன்பள்ளி, சேலம்.

பெயர் குழப்பம்

என் நெருக்கமான நண்பன் பெயர் வில்லியம் டேவிட் ஜான்சன். ஒரு நாள் வகுப்பில் ஆங்கிலப் பாடம் நடத்திக் கொண்டிருந்தார் ஆசிரியர். இடையில் உதவியாளர் ஒருவர் வந்து "இங்கே யாருப்பா வில்லியம், டேவிட், ஜான்சன்? மூணு பேரையும் பார்க்க அவங்க அப்பா வந்திருக்கார்" என்று கூற எங்களுக்கெல்லாம் ஒரே சிரிப்பு! அந்தப் பெயர் ஒருவருடையதுதான் என்று தெரிந்து கொண்ட உதவியாளரும் சிரித்து விட்டார்.





- கோ. குப்புசாமி, நெய்வேலி.


கூப்பிட... கூப்பிட...

அன்று எங்களுக்கு சமூக அறிவியல் வகுப்பு. ஆசிரியர் வந்து பாடம் நடத்தி முடித்துவிட்டு, "நான் இப்போது நடத்தினதிலிருந்து கேள்விகளைக் கேட்பேன். ஆகையால் நீங்கள் அனைவரும் அதைப் படிக்க வேண்டும்" என்றார். அனைவரும் படித்துக் கொண்டு இருந்தோம். அப்போது ஆசிரியர் ஒரு மாணவியைப் பார்த்து "ஹேமா, ஹேமா" என்றார். ஆனால் அந்த மாணவி ஆசிரியர் அழைப்பதைக் காதில் வாங்காமல் உட்கார்ந்து கொண்டே இருந்தாள். கோபம் அடைந்த ஆசிரியர்

அருகில் வந்து "ஹேமாவதி" என்றார். அந்த மாணவி பயத்துடன் எழுந்து நின்றாள். ஆசிரியரோ "நான் இவ்வளவு நேரம் கூப்பிட்டு ஏன் நீ எழுந்து நிற்க வில்லை?" என்றார். அதற்கு அந்த மாணவி பயத்துடன் "ஏம்மா... ஏம்மா..." என்று யாரையோ கூப்பிடுகிறீர்கள் என்று நினைத்து விட்டேன் சார்" என்றவுடன், ஆசிரியர் உள்பட அனைவரும் சிரித்தோம்.

- ந. துரை,
வெள்ளையாம்பட்டு.





பார்க்கலாம்!

- எஸ். நீரஜாக்ஷி,
சென்னை.

குறியீடு?

அறிவியல் ஆசிரியர் பாடம் நடத்திக் கொண்டு இருந்தார். ஒரு மாணவன் தூங்கி விழுந்து கொண்டு இருந்தான். ஆசிரியர் அவனை எழுப்பி "சோடியத்தின் குறியீடு என்ன?" என்றார். அவன் விழிக்க, ஆசிரியர், "என் கேள்வியைப் புரிந்து கொண்டு உன் பதில் 'என்னே' என்று சொல்" என்றார். பதில் தெரிந்த மாணவர்கள் சிரித்தனர். "என் கேள்வியிலிருந்தே பதில் 'என்னே' என்று சொல்லலாம்" என்றார் ஆசிரியர் மீண்டும். அப்போதும் அந்த மாணவனுக்குத் தெரியவில்லை. பிறகு ஆசிரியரே பதில் 'என் ஏ' என்று சொல்லி அவனை உட்கார வைத்தார்.

- எம். சுப்பிரமணி, செ.ம.மே.நி. பள்ளி, தாரமங்கலம்.



எங்கள் பள்ளியில் நடந்தது!

விஷமில்லாத பாம்பு?

அறிவியல் பாடவேளை. ஆசிரியர் 'பாம்புகள்' பற்றி பாடம் நடத்திக் கொண்டிருந்தார். "பாம்புகள் எல்லாம் விஷமானவை அல்ல. சாரைப் பாம்பும் சாதாரண தண்ணீர் பாம்பும் விஷமற்றவை" என்றார். ஆனால் பாடத்தை ஒரு மாணவன் கவனிக்கவே இல்லை. ஆசிரியர் உடனே அவனை எழுப்பி "எந்தப் பாம்பு விஷமில்லை?" என்று கேட்டார். அதற்கு அவன், "நல்ல பாம்பு" என்று பட்டென்று கூறினான். ஆசிரியர் கோபத்துடன் "எப்படி சொல்றே?" என்றார் "அதுக்குத்தான் பெயரிலேயே 'நல்ல' இருக்குதே சார்" என்றானே


மீதி?


நான் படிக்க உட்கார்ந்தேன். பக்கத்து வீட்டு அக்கா சின்ன வகுப்பு பிள்ளைகளுக்குப் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். ஒரு மாணவியை நோக்கி, "நீ ஒன்பது ரூபாயைக் கடைக்கு எடுத்துட்டுப் போறே. 9 ரூபாய்க்கும் சாமான் வாங்கிட்டீனா கையில் என்ன இருக்கும்?" என்றார். ஒரு நிமிடம் யோசித்த அந்த மாணவி "சாமான் தான் கையில் இருக்கும்" என்றாளே பார்க்கலாம்!


- அ. கமர்தாஜ், மரிமானிகுப்பம்,

தியானம்


சி.மோஹன்,
சாந்தூ









மறுநாள் சோமேந்திர செல்லையா மீண்டும் தூங்க ஆரம்பித்தார்.
சிறிது நேரத்தில் கண்விழித்த குருஜி அதிர்ந்தார்.
முட்டாள்களே எழுந்திரிங்கடா. இங்கே ஏதாவது கற்றுக் கொள்ளத்தானே வந்திருக்கிறீர்கள்? தூங்கக் கூடாது.
மன்னியுங்கள் குருவே. நாங்கள் யாரும் தூங்கவில்லை. எல்லோரும் தியானத்தில் இருந்தோம்.
நாங்களும் உங்களுடன் சேர்ந்து உங்கள் குருவைச் சந்திக்க விரும்புகிறோம்.
நீங்கள் தனியே செல்ல வேண்டாமே!



• தஞ்சை பெரிய கோயில்



• கோமதீஸ்வரர்
கோயில்



• விதான் சௌதா



• திருமலை நாயக்கர் மஹால்





• கொனாரக் சூரியன்கோயில்

ஒவ்வொன்றும் ரூ. 500/- மதிப்புள்ள இரண்டு கைக்கடிகாரங்கள் பரிசு!



• செங்கோட்டை

கோகுலம் வாசகர்கள் நேரத்தைத் திட்டமிட்டு செயல்படுத்த உதவும் வகையில் மாதந்தோறும் 2 கைக்கடிகாரங்களைப் பரிசாக வழங்கி வருகிறோம். இப்போட்டியில் பள்ளி மாணவ, மாணவியர் மட்டுமே கலந்து கொள்ள முடியும். நீங்கள் பள்ளி மாணவர் என்பதற்கு அத்தாட்சியாக உங்கள் பெற்றோரின் கையொப்பம் இருக்க வேண்டும். ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பி வைக்கலாம். பள்ளி முகவரி, வீட்டு முகவரிகளைக் கண்டிப்பாகத் தர வேண்டும். பெற்றோர் கையொப்பம், முகவரி கூப்பன் இல்லாத படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

சரியான விடை அளித்தவர்களில் குலுக்கல் முறையில் இருவர் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவர். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

கடைசி தேதி **20.9.2001**

இந்த மாதப் போட்டி


இங்கு ஆறு புகைப் படங்கள் உள்ளன. அவற்றிற்குக் கீழே புகைப் படங்களின் பெயர்கள் தவறாக உள்ளன. புகைப் படங்களின் பெயர்களைச் சரியாகக் கண்டு பிடித்து வரிசைப் படி எழுதி அனுப்புங்கள்.

1. ____________
2. ____________
3. ____________
4. ____________
5. ____________
6. ____________

முதல் போட்டியில் 2 கைக்கடிகாரங்கள் யார், யாருக்கு? அடுத்த இதழில் அறிவிக்கப்படும்.

ஆசிரியர்,
கோகுலம்,
47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை – 600 097

முதல் பரிசு
எஸ். ராபின்சிங்,
ஆல்பா மெட்ரிக்குலேஷன் பள்ளி, சென்னை.




ஜூலை இதழில்
'டால்ஃபின்'
என்ற
தலைப்பில்
ஓவியப்
போட்டி
அறிவித்
திருந்தோம்.
அதில் பரிசு
பெற்ற
ஓவியங்கள்.




இரண்டாம் பரிசு
சி. சரவணன்,
பத்தாம் வகுப்பு,
செங்கல்பட்டு.


ஓவியப் போட்டி
முடிவுகள்



மூன்றாம் பரிசு
எஸ். நிர்மலாதேவி,
நான்காம் வகுப்பு, எஸ்.டி.ஏ பள்ளி,
கோச்சடை, மதுரை.



ஆறுதல் பரிசு
டி.ஜி. சிவப்ரியா,
ஐந்தாம் வகுப்பு,
மாமல்லன் மெட்ரிக்
பள்ளி, காஞ்சிபுரம்.



ஆறுதல் பரிசு
வி. ராகவ்,
மூன்றாம் வகுப்பு,
ஜவஹர்
மெட்ரிக் பள்ளி,
நெய்வேலி.

டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள் 1916ஆம் ஆண்டு வரை சென்னை மாநிலக் கல்லூரியில் பணியாற்றினார். மிகச் சுவையாகப் பாடம் போதிப்பார். மாணவர்கள் அவர் வகுப்பைத் தவற விடவே மாட்டார்கள்.

கணீரென்ற குரல், அழகான ஆங்கில உச்சரிப்பு.

எளிமையான உவமைகள். தேவையான இடங்களில் சிறுசிறு கதைகள். புராணத்தில் இருந்தும், இதிகாசத்திலிருந்தும் மேற்கோள்கள், கிருஸ்துவ சமயம், இஸ்லாமிய சமயம் ஆகியவற்றிலிருந்தும் சான்றுகள் தருவார்.

மாணவர்கள் மட்டுமின்றி பேராசியர்கள்கூட அவரது சொற்பொழிவில் மயங்கி நிற்பார்கள்.

மாநிலக் கல்லூரியில் பணியாற்றிய போது பத்திரிகைகளில் கட்டுரைகள் எழுதத் தொடங்கினார்.

வெளிநாட்டு பத்திரிகைகளிலும் தத்துவக் கட்டுரைகள் எழுதினார். அவருக்கு சொல்லாற்றல் போலவே எழுத்தாற்றலும் வலிமை மிகுந்தது. அனைவரையும் வசீகரித்தது.

உலக அறிஞர்களின் பார்வை நம் பேராசிரியர் மீது பட்டது. நாடெங்கிலும் அவருக்கு ரசிகர்கள் திரண்டனர். இராதாகிருஷ்ணனின் திறமை கண்டு வியந்தவர்கள் பலர். அவர்களில் ஒருவர்தான் டாக்டர் விஸ்வேஸ்வரய்யா.

டாக்டர் விஸ்வேஸ்வரய்யா இந்தியாவின் தலைசிறந்த பொறியியல் வல்லுநர்களில் ஒருவர். கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்தவர்.

காவிரி ஆற்றின் குறுக்கே அணைகள் கட்டி நீர்ப்பாசன வசதியை அம்மாநிலத்தில் பெருக்கியவர். அவர் இராதாகிருஷ்ணனின் அறிவுக் கூர்மைக்குத் தன்னையே அடிமையாக்கிக் கொண்டார். அது மட்டுமல்ல. இராதாகிருஷ்ணனின் திறமை கர்நாடக மாநில மக்களுக்குக் கிடைக்க வேண்டும் என்றும் பேரவா கொண்டார்.



• ஸ்டாலின்

மைசூர் மகாராஜா கல்லூரியில் இராதாகிருஷ்ணனைத் தத்துவ இயல் பேராசிரியராக 1918ல் அழைத்துக் கொண்டார்.

பேராசிரியரின் வருகையால் அக் கல்லூரியின் புகழ் கூடியது. ஆசிரியரால் ஒரு நிறுவனம் பெயர் பெறமுடியும் என்பதற்கு அவரே அடையாளம்.



• இராதாகிருஷ்ணன்

பாடம் நடத்தும் நேரம் தவிர மற்ற நேரங்களில் படிப்பில் மூழ்கி விடுவார். புத்தகங்கள் கட்டுக்கட்டாய் அவரைச் சுற்றிக் குவிந்து காணப்படும்.

மாணவர்களிடம் அன்பாக

நடந்து கொள்வார். புரியாத பகுதிகளை மீண்டும் மீண்டும் பொறுமையுடன் விளக்குவார். ஏழை மாணவர்கட்கு வேண்டிய உதவிகள் செய்வார்.

1937-38ல் ஆசியக் கல்வி மாநாடு லக்னோவில் நடைபெற்றது. ஜவஹர்லால் நேரு மாநாட்டைத் துவக்கி வைத்தார்.

டாக்டர் இராதாகிருஷ்ணன் தலைமை உரை நிகழ்த்தினார். அவரது சொற்பொழிவின் அச்சுப் பிரதி எல்லோரது கைகளிலும் இருந்தது.

இராதாகிருஷ்ணன் தம் கையில் அந்தப் பிரதிகளை வைத்துக் கொள்ளவில்லை. ஆனால் அச்சுக்கும் அவர் உரைக்கும் ஒரு எழுத்துக்கூட மாறுதல் இல்லாமல் இருந்தது.

நேரு உட்பட அனைவரும் அவரது நினைவாற்றலைக் கண்டு பிரமித்து விட்டார்கள்.

பேராசிரியர் ரஷ்யாவில் தூதராகப் பொறுப்பேற்றபோது ஸ்டாலின் அந்நாட்டு அதிபராக இருந்தார்.

அப்படி மாறுவீர்களோ, என்னவோ யாருக்குத் தெரியும்' என்றார்.

ஸ்டாலின், பேராசிரியர் பேச்சைக் கேட்டு லேசாகப் புன்னகை புரிந்தார்.

சந்திப்பு முடிந்து பேராசிரியர் சென்று விட்டார்.

ரஷ்ய நாட்டுத் தூதர் பதவி முடிந்து பேராசிரியர் இந்தியா திரும்பும் சமயம், ரஷ்யாவின் அயல்நாட்டு அமைச்சர் பேராசிரியருக்குப் பிரிவு உபசார விருந்து அளித்தார்.

விருந்தின்போது அதிபர் ஸ்டாலின் பேராசிரியரைச் சந்திக்க விரும்புவதாகச் சொல்லியனுப்பினார்.

உடனே பேராசிரியர் ஸ்டாலினைச் சந்திக்கச் சென்றார். அப்போது ஸ்டாலின் நோய் வாய்ப்பட்டுப் படுத்த படுக்கையாய் இருந்தார்.

பேராசிரியர் வாஞ்சையோடு ஸ்டாலினின் கன்னங்களைத் தடவிக் கொடுத்தார்.

இந்த அன்பு, அதிபரை திக்கு முக்காடச் செய்தது.

ஆசிரியர் பணியை நேசித்தவர்!

ஒரு நாள் அதிபர் ஸ்டாலின் இராதாகிருஷ்ணன் அவர்களைச் சந்திக்க அழைத்தார்.

பொதுவாக அரசாங்கத் தூதர்கள் நள்ளிரவில்தான் ஸ்டாலினைச் சந்திப்பது வழக்கம். ஆனால் பேராசிரியரின் நடைமுறைகளை ஸ்டாலின் அறிந்து இருந்தார். எனவே பேராசிரியரின் சௌகர்யத்தை முன்னிட்டு இரவு ஒன்பது மணிக்கே சந்திக்கச் சம்மதம் தெரிவித்தார்.

அந்தச் சந்திப்பின்போது பேராசிரியர், வரலாற்றில் நடந்த ஒரு கதையை ரஷ்ய அதிபருக்குச் சொன்னார்.

'எங்கள் நாட்டில் அசோகர் என்ற சக்கரவர்த்தி இருந்தார். அவர் ஒரு பயங்கரமான போர் நடத்தினார். ரத்த ஆற்றில் நீந்தி பிறகு வெற்றிக் கொடி நாட்டினார். பின்பு அந்த அசோக சக்கரவர்த்தி மனம் திருந்தி புத்த பிட்சுவாக மாறிவிட்டார்.

நீங்களும் ரத்த வழியைக் கடந்து ஆட்சியில் அமர்ந்தவர். ஒரு வேளை நீங்களும்

'என்னை அரக்கன் என்று எண்ணாமல் மனிதன் என்று எண்ணிப் பழகிய முதல் மனிதர் நீங்கள்தான். நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து செல்வதற்காக நான் மிகவும் வருந்துகிறேன். நீங்கள் நீண்ட காலம் வாழ வேண்டும் என்று விரும்புகிறேன். நான் இனி அதிக காலம் உயிர் வாழ மாட்டேன்' என்று நாத்தழுதழுக்க ரஷ்ய அதிபர் கூறினார்.

ரஷ்ய நாட்டுத் தூதராக இருந்த போதும்கூட ஆக்ஸ்ஃபோர்டில் பேராசிரியராகப் பணிபுரிய அனுமதி வேண்டி, அவ்வாறே பணிபுரிந்தார் இராதாகிருஷ்ணன். அவர் விரும்பி ஏற்றுக் கொண்ட துறை ஆசிரியர் துறை.

எனவேதான் அவரது பிறந்த நாளான செப்டெம்பர் 5ஆம் தேதியை இந்தியா முழுவதும் 'ஆசிரியர் தினம்' ஆகக் கொண்டாடுகிறோம்.

— சு. கண்ணகி, மிட்டூர்.

6 நடேசனுக்கு ஆபத்து

அழைப்புமணி ஒலித்ததும் நெடுமாறன் எழுந்து செல்ல முயன்றான். அதற்குள் 'நான் போய்ப் பார்க்கிறேன்' என்று எழுந்து சென்றாள் பல்லவி. இரண்டே நிமிடத்தில் பல்லவி திரும்பி வந்தாள். அவளுடன் வந்த நபரைப் பார்த்து, மூவேந்தர்கள் வியப்படைந்தார்கள்.

வந்த நபர் மூவேந்தர்களுக்குத் தெரிந்த, மூவேந்தர்களைக் காரணமில்லாமல் வெறுக்கும் வகுப்பு மாணவன் மனோகரன்.

அவன் அவர்களைத் தேடி வந்திருப்பது ஏன்?

வீடு தேடி வந்து சண்டை போடப் போகிறானா?

முகத்தில் அதற்குரிய வெறுப்போ, கோபமோ தெரியவில்லையே! ஆனால் சோகம் தெரிகிறது; அளவிட முடியாத சோகம் தெரிகிறது!

— மூவேந்தர்களின் சிந்தனை இந்த வகையில் செல்ல, "நண்பர்களே, உங்களைத் தேடி வந்த நண்பனை வரவேற்க மாட்டீர்களா? உட்காரச் சொல்லி உபசரிக்க மாட்டீர்களா? பேர் மட்டும் மூவேந்தர்கள்" என்று பல்லவி தன் இயல்பான எள்ளலுடன் கூறியபோதுதான், அவர்களுக்குத் தவறு புரிந்தது.

"வா மனோகரா" என்றான் நெடுமாறன்.


அருள்மொழி எழுந்து சென்று 'ஹலோ' சொல்லிக் கைகுலுக்கி அவனை அருகேயிருந்த சோபாவில் அமரச் செய்தான்.

"என்ன மனோகரா, ஏதோ சோகமா இருக்கிற மாதிரி தெரியுது. என்ன விஷயம்? சொல்லு" என்று இதமாகக் கேட்டான், இளங்கோ.

மனோகரன் அப்போதும் சோகத்தோடு தான் இருந்தான்.

தேவையில்லாமல் தான் சிறுமைப்படுத்திய மூவேந்தர்களைத் தேடிப் போகிறோமே, அவர்கள் பழிக்குப் பழி வாங்குகிற மாதிரி நடந்து நமது சோகத்தை அதிமாக்குவார்களோ? — என்று ஐயத்தோடு வந்த மனோகரன் அவர்களது அன்பையும் பண்பையும் பார்த்து அதிசயித்தான்.

"நண்பர்களே, முதலில் நீங்கள் என்னை மன்னிக்க வேண்டும். பிறரைச்



சீண்டிவிட்டு வேடிக்கை பார்ப்பது, கேவலப்படுத்தி மகிழ்ச்சியடைவது – இவை என் பிறவிக்குணம். இதனால் நீங்களும் பாதிக்கப்பட்டிருக்கிறீர்கள் என்றாலும் எதையும் மனத்தில் வைத்துக் கொள்ளாமல், எதுவுமே நடக்காதது போல என்னை வரவேற்கிறீர்கள். பண்பு என்னும் சொல்லைப் படித்திருக்கிறேன். அதை இங்கேதான் நேருக்கு நேராய்ப் பார்க்கிறேன். நண்பர்களே, என்னை முதலில் மன்னியுங்கள்!''

மனோகரன் குரல் தழுதழுக்கச் சொன்னான்.



''மனோகரா, சிரிச்சுப் பேசறது மட்டுந்தான் சிநேகிதமா? சீறிப் பேசுவதும், சண்டையிடுவதும்கூட சிநேகிதத்தின் உரிமை. ஆனால், எல்லாம் சில நிமிடத்தில் மாறிப் போய் பழையபடி சிரிச்சுப் பேசறதுதான் சிறப்பான சிநேகிதம். எங்களுக்கு உன்மேல் வருத்தம் வந்தது உண்டு. வெறுப்பு தோன்றியதில்லை. வி ஆர் ஆல் ஃபிரண்ட்ஸ் – உன்னையும் சேர்த்துதான் மனோ!''

அருள்மொழி கூறியதை மற்றவரும் ஆமோதிக்க,

''அதெல்லாம் இருக்கட்டும்... இப்ப மனோ வந்த விஷயத்தைக் கேட்போம்'' என்றான் இளங்கோ.

மனோகரன் தன் சோகக் கதையைச் சொல்லத் தொடங்கினான்.

மனோகரனுக்கு நண்பர்கள் அதிகம் இல்லை. ஆனால் நடேசன் ஒருவன் மட்டும் எப்போதும் நண்பன். மனோகரனின் ஆணவம், அலட்சியம், அடக்குமுறை முதலியன வெளிப்படுகிற போதும் நண்பன்!

நடேசன் படிப்பில் மகாகெட்டி! அவனால் – அவனது தூண்டுதலால், மனோவும் ஃபெயில் ஆகாமல் தப்பி வந்தான்.

இருவரும் இணைபிரியா நண்பர்கள்! எந்தச் சூழ்நிலையிலும் அந்த நிலை மாறியதில்லை.

இன்று பள்ளி முடியும்போது, மனோவும் நடேசனும் ஒன்றாகப் புறப்பட்டார்கள்.


மனோவின் வீடு அய்யாவு காலனியில், நடேசன் இருப்பது வைணவர் கல்லூரிக்குப் பின்னே உள்ள மு.வ. தெருவில்.

இன்று அய்யாவு காலனி வந்ததும் மனோ பிரிந்து தெற்கே போக, நடேசன் நெடுஞ்சாலையில் தொடர்ந்து நடந்தான். வழக்கமாக அரை மணி நேரத்தில் நடேசன் மறுபடி

டாக்டர் பூவண்ணன்

மனோவைத் தேடி வந்து விடுவான். இது என்றும் நடப்பது. மனோ வீட்டிலோ, வேறிடத்திலோ இருவரும் கூடிப் பேசுவார்கள்; செஸ் ஆடுவார்கள்; டி.வி பார்ப்பார்கள். ஏழு மணிக்கு நடேசன் விடை பெற்றுச் செல்வான். இது சூரியன் கிழக்கே உதிப்பது போல மாறாமல் தொடரும் பழக்கம்!

"இன்னைக்கு வழக்கம் போல நான் என் வீட்டுக்குப் போக, நடேசன் தன் வீட்டுக்குப் போனான். ஆனால் திரும்பி வரவில்லை; அரைமணியில் வருபவன் ஒரு மணி நேரம் கடந்தும் திரும்பி வரவில்லை. மணி ஆறானப்போ, நடேசனின் தம்பி என்னைத் தேடி வந்தான். நடேசன் பள்ளியிலிருந்து வீட்டுக்கே வரலையாம். என்னோடு இருக்கிறானா என்று பார்த்து வரச் சொன்னாங்களாம். அவன் நாலு மணிக்கே வீட்டுக்குப் போனதைச் சொல்லியனுப்பினேன். நடேசன் எங்கே போறதானாலும் என்னிடம் சொல்லிவிட்டுத்தான் போவான். நாலு மணிக்கு என்னிடம் விடை பெற்றுச் சென்றவன், வீட்டுக்குப் போகாமல் எங்கே போனான்? போகும் வழியில் என்ன நடந்திருக்கும்? புரியலை..."



"தவணைமுறையிலே டி.வி வாங்கினது தப்பாப் போச்சு!"

"ஏன்?"

"ஒவ்வொரு நிகழ்ச்சியும் தொடர்ச்சியாகத் தெரியாம கொஞ்ச நேரம் விட்டு விட்டுப் படம் தெரியுது!"

— அறிவழகன்

ஒரு வினாடி பேச்சை நிறுத்திய மனோ தொடர்ந்தான்:

"நான் வீட்டிலேருந்து வெளியே வந்து, மெயின் ரோடிலே நடந்தேன். எங்கேயாவது சாலை விபத்து நடந்ததா என்று விசாரித்தேன். பள்ளி மாணவர்கள் எதிர்பட்டால், 'நடேசனைப் பார்த்தீங்களா?' என்று கேட்டேன். நம்ம வகுப்பு பையன் ஒருத்தன் டிராஃபிக் ஜாம் காரணமா, ஒரு கார் மெல்ல ஊர்ந்தபோது காரின் பின்சீட்டில் நடேசனும் வேறொரு முரட்டு ஆசாமியும் இருந்ததைப் பார்த்தானாம்!"

மனோவின் பேச்சை மறித்து, "முரட்டு ஆசாமின்னு பார்த்தவன் சொன்னானா?" என்று கேட்டான், இளங்கோ.

"ஆமாம். அதுதான் என்னைக் குழப்பியது. வேற யாரும் நடேசனைப் பார்க்கலே. நடேசன் ஏன் கார்லே போனான்? யார் அந்த முரட்டு ஆசாமி? ஒன்றுமே புரியலே. திரும்பவும் நடேசன் வீட்டுக்குப் போய் அவன் இன்னும் வரலேங்கறதைத் தெரிஞ்சுகிட்டேன். நடேசன் எங்கே போனான் – யாரோட போனான்னு தெரியலே... எனக்குத் திடீர்னு பயம் வந்துடுச்சு. நடேசனுக்கு ஏதாவது ஆபத்து வந்திருக்குமோன்னு பயம் – இப்படி யோசிச்சுகிட்டே திரும்பி வந்தப்போ இந்த வீட்டருகே வந்துட்டது தெரிஞ்சது. நெடுமாறனிடம் நடேசனைப் பாத்தியான்னு கேட்கலாம்னு வந்தேன். வந்தா மூவேந்தரும் இருக்கீங்க" - மனோ கூறினான்.

மனோவுக்குள்ளே, ஒரு முரட்டு மிருகம் ஒளிந்திருப்பதாக இதுவரை நினைத்த மூவேந்தர்கள் அவனுக்குள் நேசமும் பாசமும் நிறைந்திருப்பதை உணர்ந்தார்கள்.

"மனோ, நான் நடேசனைப் பார்க்கலே..." என்ற நெடுமாறன், மற்ற இருவரையும் பார்க்க அவர்களும் 'பார்க்கவில்லை' என்றனர்.

"மனோ, நடேசன் கெட்டிக்கார மாணவன். அவனை யாரும் எதுவும் செஞ்சிட

முடியாது. அவன் ஒரு முரட்டு ஆசாமியோடு காரிலே போன செய்தி கொஞ்சம் கவலை தருதுங்கறது உண்மைதான். ஆனாலும் பொறுத்துப் பார்ப்போம். இரவுக்குள்ளே அவன் திரும்பிடலாம். இல்லேன்னா எங்கப்பாவிடம் சொல்லி, போலீஸில் விசாரிக்கலாம் – அல்லது புகார் செய்யலாம்'' என்றான் இளங்கோ.

மனோகரன் எழுந்துகொண்டான்.


''காலை வரை காத்திருப்போம். நடேசன் வீட்டிலே என்ன செய்யறாங்கன்னு தெரியலே... காலையிலே வரேன்'' என்றபடி விடை பெற்றான்.

வேண்டும்...மொத்தம் மூணு கேஸ்! ஒரே மாதிரியான மூணு கேஸ்'' என்றான் அருள் மொழி.

''மொத்தம் மூணுன்னு சொல்றது தவறு. பதிமூணா இருக்கலாம்... முப்பத்து மூணாவும் இருக்கலாம். அதிலே நமக்குத் தெரிஞ்சது மூணு கேஸ். எங்கப்பாவிடம் இது போல வேற கேஸ் பற்றி செய்தி யிருக்கான்னு கேக்கறேன்'' என்றான் இளங்கோ.

''கேட்டுப் பார் இளங்கோ. காலைக்குள்ளே நடேசனைப் பற்றி எதுவும் தெரியலேனா போலீஸில் புகார் கொடுக்கணும். அதுக்கு உங்கப்பா வந்தா நல்லது. பத்திரிகைக்காரங்களுக்கு போலீஸார் மதிப்புத் தருவாங்க'' என்றான் நெடுமாறன்.

இளங்கோ தன் அப்பாவிடம் பேசுவதாகக் கூறினான். நால்வரும் 'குட்பை' சொல்லிப் பிரிந்தனர்.



மனோவை வீதிவரை சென்று வழியனுப்பி விட்டுத் திரும்பிய மூவேந்தரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

பல்லவிதான் பேசினாள்:

''நண்பர்களே, சிந்தாதிரிப்பேட்டை பூபதி, திருவொற்றியூர் சுந்தரம் வரிசையில் அரும்பாக்கம் நடேசனும் சேருகிறானோன்னு சந்தேகம் வருது...''

''கரெக்ட்! பூபதி படிப்பில் கெட்டிக்காரனாம்! நடேசனும் கெட்டிக்காரன்! சுந்தரமும் கெட்டிக்காரனாகத்தான் இருக்க

இதற்குப் பின் நெடுமாறனின் மனம் எந்த வேலையிலும் ஈடுபடவில்லை. சாப்பாட்டிலும் ஈடுபட மறுத்தது. அம்மாவின் வற்புறுத்தலுக்காக ரெண்டு வாய் சாப்பிட்டு விட்டுத் தன் அறைக்குள் புகுந்துகொண்டான். அவன் நெஞ்சம் முழுதும் நடேசனே நிறைந்திருந்தான்.

அடிக்கடி நடேசனை இடித்துக்

கொண்டு ஒரு உருவம் – முகம் சரியாகத் தெரியாத ஒரு முரட்டு உருவம் – அவன் மனத்துள் நுழைந்தது.

நெடுமாறன் அந்த நினைவுகளை மறந்து உறங்க விரும்பினான். எப்போது உறங்கினான் என்பது அவனுக்கே தெரியாது.

''மாறா! மாறா!''

யாரோ அழைப்பது... தொடர்ந்து அழைப்பது எங்கோ வெகு தூரத்தில் கேட்பது போலிருந்தது...

நெடுமாறன் மெல்ல கண் விழித்த போது, கட்டிலின் ஓரத்தில் அம்மா உட்கார்ந்திருப்பதைக் கண்டான். உடனே சடாரென்று எழுந்து உட்கார்ந்தான். ''என்னம்மா...'' என்று கேட்டான்.

''மாறா, பதற்றப்படாதே. மெதுவாக எழுந்து வா. போனிலே உன்னை யாரோ கூப்பிடறாங்க.''

அம்மா கூறியதைக் கேட்டதும் அருகே மேசை மீதிருந்த கடிகாரத்தைப் பார்த்தான். மணி சரியாகப் பத்து.

''போனிலே யாரும்மா?''

கேட்டபடி எழுந்தான் நெடுமாறன்.

''தெரியலே. உங்கப்பாதான் போன் எடுத்தார்.''

நெடுமாறன் அவசர அவசரமாக அறையை விட்டு ஹாலுக்கு வந்தான்.

அப்பா ஒரு கையில் ரிசீவரை ஏந்திய படி சோபாவில் உட்கார்ந்திருந்தார்.

நெடுமாறன், ''யாருப்பா?'' என்று அவரை நெருங்கினான்.

''நீயே கேட்டுத் தெரிஞ்சுக்கோ'' என்ற அப்பாவின் கையிலிருந்த ரிசீவரை வாங்கிக் காதிலே பொருத்தி ''யாருங்க?'' என்று கேட்டான்.

மறுமுனையில் ஒரு குரல், ''நான் எஸ்.டி.டி பூத் வச்சிருக்கிற சம்பத் பேசுறேன். நீங்க புக் பேங்க் நடத்தற நெடுமாறன்தானே'' என்று விசாரித்தது.

''ஆமாங்க.''


''நடேசன்னு ஒரு பையனை உங்களுக்குத் தெரியுமா?''

இந்தக் கேள்வி மாறனிடம் ஒரு பயத்தை உண்டாக்கி, வயிற்றைப் புரட்டியது. அவன் தடுமாறிய குரலில், ''தெரியுங்க, அவனுக்கேதாவது ஆபத்தா?'' என்று கேட்டான்.

மறுமுனைக் குரல், ''ஆமாம்'' என்றதும் மாறன் பலம் முழுதும் இழந்தவன் போலத் தளர்ந்து சரிந்தான்.


(தொடரும்)

குறுக்கெழுத்துப் புதிர் விடை



1 அ	ன்	ன	ம்	■	2 ஆ	ரி	ய	ர்
ரி	■	■	ர	■	மை	■	■	ப
சி	3 பா	■	4 வ	லி	■	5 ர	த	ம்
■	■	6 சூ	■	■	ளி	■	■	வ
7 து	டு	ப்	8 பு	■	9 பு	ம்	ர	10 ந
ந்	■	■	சி	■	■	11 ஓ	■	■
லா	ல்	12 கு	■	ல்	13 ப	■	14 ஆ	சை
ய்	■	■	15 ரா	■	யி	■	■	ஞ்
16 தா	மி	ர	ம்	■	ர்	ணீ	ண்	17 த

புதிர் உலகம்



I. ராமு சோமுவிடம் சொன்னான் ஒரு கணக்கு. அது மிகவும் ஆச்சரியப்படும் விதமாக இருந்தது. கணக்கைச் சொல்லிவிட்டு மீதி 7 தானே வந்தது என்றான். அதன்படியே மீதி 7 தான் வந்தது. எப்படி என்றேன். அது ஒரு சிறிய டெக்னிக் என்றான். நீங்களும் உங்கள் நண்பர்களை அசத்தலாம். டெக்னிக் இதுதான். நண்பனை ஏதாவது ஒரு எண்ணை நினைத்துச் கொள்ளச் சொல்லுங்கள். அதுடன் அதற்கு அடுத்த எண்ணைக் கூட்டிக் கொள்ளச் சொல்லுங்கள். கிடைத்த எண்ணுடன் 13ஐக் கூட்டச் சொல்லுங்கள். பின்பு அந்த எண்ணை 2ஆல் வகுக்கச் சொல்லி வரும் எண்ணிலிருந்து முதலில் நினைத்த எண்ணைக் கழிக்கச் சொல்லுங்கள். இப்போது நீங்கள் உனக்கு மீதி 7 தானே வருகிறது என்று கேளுங்கள். நண்பன் அசந்து விடுவான்.

40 + 41 = 81 + 13 = 94

94 ÷ 2 = 47 - 40 = 7

மீதி 7.

- ஏ.எஸ்.யோகானந்தம்

II. நான் ஒரு நாள் உழவர் சந்தைக்குச் சென்று கொண்டு இருந்தேன். அப்போது எனக்கு எதிரே ஒருவர் வந்தார். அவருடன் அவரது 3 குழந்தைகளும் சென்று கொண்டிருந்தனர். ஒவ்வொருவரும் தன்னுடன் ஒரு நாயை அழைத்துக் கொண்டு வந்தனர். முதல் நாய்க்கு 1 குட்டியும், இரண்டாவது நாய்க்கு 2 குட்டிகளும், மூன்றாவது நாய்க்குக் 3 குட்டிகளும், இருந்தன. இப்போது உழவர் சந்தைக்கு எத்தனை பேர் சென்று கொண்டிருக்கிறோம் என்று சரியாகக் கூறுங்கள் பார்க்கலாம்?

III. வரிசையான மூன்று எண்கள். அவற்றைக் கூட்டினாலும் பெருக்கினாலும் ஒரே விடைதான் வருமெனில் அந்த எண்கள் எவை?

- எம். வினோத், விருதாச்சலம்.

IV. இரண்டு எண்கள் இருக்கின்றன. அவற்றைப் பெருக்கினால் மூன்று பத்து. அந்த முப்பத்தை இரு எண்களையும் கூட்டி வந்த தொகையால் பெருக்கினால் முப்பத்து மூன்று பத்து. அந்த எண்கள் யாவை?

- ஆறுபாதி புகழேந்தி.

V. 1. 'வந்தே மாதரம்' என்ற பாடலின் மூலம் தேசிய உணர்வை ஊட்டியவர் யார்?

2. சுதந்திரம் பெறுமுன்பே ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம் என்று பாடியவர் யார்?

3. இந்தியாவில் தோன்றிய முதல் சமுதாயப் பண்பாட்டு அமைப்பு எது?

4. உலகப் புகழ் பெற்ற இரண்டாம் இப்ராஹிம் அபில்ஷா கல்லறை அமைந்துள்ள இடம் எது?

5. சூரியனுக்கு மிக அருகில் உள்ள கிரகம் எது?

6. வளவனின் தலைநகர் கடலில் மறைந்துள்ள இடம் எது?

7. ஈரோட்டில் பெண்கள் முன்னேற்றத்திற்கான மாநாடு நடத்தியவர் யார்?

8. சாரண இயக்கத்தின் தந்தை யார்?

9. தெய்வீக உரிமைக் கொள்கையைக் கொண்டு வந்த முகலாய மன்னரான அக்பரின் பாதுகாவலராக விளங்கியவர் யார்?

10. ஆந்திர மாநிலம் உருவாகக் காரணமாக இருந்தவர் யார்?

- சிவ. மணவழகி, மயிலாடுதுறை

விடை 71ம் பக்கம்

கை, கால்கள் மரத்துப் போவது ஏன்?

● ப. வடிவேலன், கமுதி

? ஈக்களால் பரவும் நோய்கள் எவையெவை? அவற்றை எவ்வாறு தடுப்பது?

! ஈக்கள் நேரடியாக நோய்களைப் பரப்புவதில்லை. ஆனால், நோயை உண்டாக்கும் கிருமிகளைப் பரப்புகின்ற 'நோய் பரப்பி'களாக (Vectors) அவை செயல்படுகின்றன. ஈக்கள் குப்பை, சாணம், மலம் போன்ற அழுக்கு நிறைந்த இடங்களில் முட்டையிட்டுப் பெருகும். இவை எல்லா பொருள்களிலும் உட்காரும். குறிப்பாக, தெருக்களில் உள்ள மலம், சாணி, எச்சில், தேங்கி நிற்கும் சாக்கடை, அழுகிய பொருள்கள் ஆகியவற்றில் உட்காரும். அப்போது அங்குள்ள அழுக்குகளும் கிருமிகளும் ஈக்களின் கால்களில் ஒட்டிக் கொள்ளும். அவற்றைச் சுமந்து கொண்டு பறந்து, மனித உடல், பாதுகாக்கப்படாத குடிநீர், தெருவில் விற்கப்படும் உணவுப் பொருள்கள் மற்றும் பழங்கள், மூடப்படாமல் திறந்து கிடக்கும் உணவுகள் ஆகியவற்றில் உட்கார்ந்து, தங்கள் கால்களில் உள்ள அசுத்தங்களைப் பரப்பும். இந்த அசுத்தங்களில் எத்தனையோ நோய்க்கிருமிகள் இருக்க வாய்ப்புண்டு. இவ்வாறு அசுத்த மடைந்த உணவையும் குடிநீரையும் நாம் உட்கொள்ள நேர்ந் தால், அவற்றில் உள்ள கிருமிகளைப் பொறுத்து நோய் கள் ஏற்படும். வயிற்றுப் போக்கு, காலரா, சீதபேதி, டைபாய்டு காய்ச்சல், மஞ்சள் காமாலை, காச நோய், குடற்புழுத் தொல்லை, இளம்பிள்ளை வாதம் ஆகியவை ஈக்களால் பரவும் நோய் களுள் மிக முக்கியமானவை. இவற்றைத் தடுக்க விரும்பினால் நாம் அனைவரும் சுய சுத்தம் மற்றும் சுற்றுப் புற சுகாதாரம் காக்க வேண்டும். குறிப்பாகச் சொன்னால், தெருக்களில் குப்பை கொட்டக் கூடாது. தெருக்களில் மலம் கழிக்கக் கூடாது. சாக்கடை நீர் தேங்கி நிற்கக் கூடாது. வீட்டைச் சுத்தமாகப் பராமரிக்க வேண்டும். உணவையும் குடிநீரையும் திறந்து வைக்காமல், மூடிப்பாதுகாக்க வேண்டும். காய்கறிகள், பழங்கள் ஆகியவற்றைத் தண்ணீரில் கழுவியபின்பு சமையலுக்குப் பயன்படுத்த வேண்டும்.





● பி. கந்தசாமி, முதியாநரச்சல்

? என் கையில் ஆணி வளர்ந்துள்ளது. அது கை முழுவதும் பரவுமா? இதற்குச் சிகிச்சை என்ன? மற்ற இடங்களில் பரவாமல் எப்படி தடுப்பது?

! பொதுவாக, நோய் எதிர்ப்புத்திறன் குறைந்தவர் களுக்குக் கை அல்லது கால் பாதங்களில் ஆணி வளர்வதுண்டு. இது பரவுவதும் பரவாததும் உங்கள் உடலமைப்பையும் நோய் எதிர்ப்புத்திறனையும் பொறுத்து


உள்ளது. இப்போது உங்கள் கையில் ஒரு ஆணி தானே உள்ளது. உடனடியாக அருகிலுள்ள தோல் நோய் நிபுணரைச் சந்தித்து, சிகிச்சை, பெற்று ஆணித் தொல்லையிலிருந்து விடுதலை பெறுங்கள். இத்தொல்லை மீண்டும் வராமலிருக்க மருத்துவரின் ஆலோசனைப்படி நோய் எதிர்ப்புத்திறனை அதிகப்படுத்த உதவுகின்ற வைட்டமின் மாத்திரைகளை தொடர்ந்து சில வாரங்களுக்குச் சாப்பிடுங்கள். பலனடைவீர்கள்.



● க. அருள்மணி, தூத்துக்குடி

? நான் தினமும் காபி, டீ போன்ற பானங்களை அதிக சூடாகக் குடிக்கும் பழக்கம் உள்ளவன். இது தவறு என்கிறான் என் நண்பன் உண்மையா, டாக்டர்?

! உண்மைதான், அருள்மணி. காபி, டீ போன்ற பானங்களை அதிக சூடாகக் குடிக்கும்போது உணவுப் பாதையில் அழற்சியும் புண்ணும் உண்டாகும். இதன் விளைவாக அஜீரணம் தலைகாட்டும், பசி குறையும், வயிறு உப்புசம், அடிக்கடி ஏப்பம் வருவது ஆகிய தொல்லைகள் உருவாகும். ஏற்கனவே குடற்புண், இரைப்பைப்புண் உள்ளவர்கள் அதிக சூடுள்ள உணவுகளையும் பானங்களையும் கண்டிப்பாக உட்கொள்ளக் கூடாது.



● பொ. சொர்ணலதா, திண்டுக்கல்

? வயதானால் முகத்தில் சுருக்கம் உண்டாகிறதே, ஏன்?

! நமது தோலுக்கடியில் 'கொலாஜன்' எனும் பொருள் உள்ளது. இதுதான் தோலை விறைப்பாகவும், முறுக்காகவும் வைத்துக் கொள்கிறது. இந்த கொலாஜன் அளவு குழந்தைப் பருவத்திலும் இளமையிலும் 80 சத விகிதமாக இருக்கும். வயதாக ஆக இதன் அளவு குறையும். எழுபது வயதில் சுமார் 20 சதவிகித கொலாஜன்தான் இருக்கும். இதனால் விறைப்பாகவும், முறுக்காகவும் இருந்த தோல் தளர்ச்சியடைந்து, சுருக்கங்கள் விழுந்து விடுகின்றன.

● எஸ். நாகராஜன், மேலப்பாடி


? கை கால்கள் மரத்துப் போவது, ஏன்?

! உடலில் ஏதேனும் ஒரு பகுதிக்கு ரத்த ஓட்டம் சிறிது நேரம் தடைபட்டால், அந்த உறுப்புகளில் உணர்வு குறையும். இதைத்தான் மரத்துப் போதல் என்கிறோம். இது ஒரு தற்காலிக நிகழ்வுதான். பொதுவாக, ஒரே இடத்தில் நெடுநேரம் உட்கார்ந்திருக்கும்போது இம்மாதிரி ஏற்படும். அப்போது உட்கார்ந்த நிலையை மாற்றி, கை, கால்களை நீவிவிட்டு, சொடுக்கிவிட்டால் ரத்த ஓட்டம் சீரடையும். உறுப்புகள் பழைய நிலைமைக்குத் திரும்பி விடும். மரத்துப் போதல் குறைந்து விடும். இது உடல் ஆரோக்கியமாக உள்ளவர்களின் நிலைமை. அதே நேரத்தில் சர்க்கரை நோய், தொழுநோய், வைட்டமின் பி1 குறைபாடு ஆகிய உடல்நலக் குறைபாடு உள்ளவர்களுக்கும் அடிக்கடி கைகால்கள் மரத்துப் போவது உண்டு. இவற்றுக்கு மருத்துவரை ஆலோசித்துத் தகுந்த சிகிச்சை பெற வேண்டியது அவசியம்.

டாக்டர் கு. கணேசன்

ராஜநாகம்

ஆழி



விஷம் உள்ள பாம்புகளில் உலகிலேயே மிகவும் பெரியது ராஜநாகம்தான்! சுமார் 18 அடி (5.5 மீட்டர்) நீளம் இருக்கும்! இதன் இரையே பாம்புதான். சில சமயம் மற்றொரு ராஜநாகத்தைக்கூட விழுங்கிவிடும்!


ராஜநாகம் ஒரு தடவை வெளிப்படுத்தும் விஷத்தின் அளவு 200 மில்லிகிராம்! நல்ல பாம்பு வெளிப்படுத்தும் விஷத்தின் அளவு 35 மில்லிகிராம். ஒரு மனிதனின் உயிர் போக 12 மில்லிகிராம் விஷம் போதும்!

பாம்புகளில் சுமார் 3000 வகைகள் இருக்கின்றன. பாம்புகள், முதுகெலும்புடைய பிராணிகளில் 'ஊர்வன' பிரிவில் அடங்கும். ராஜநாகத்தின் அறிவியல் பெயர் 'ஹாமட்ரியாட்'. 'ஓபியோபாகஸ்' என்னும் பெயரும் உண்டு. (இதற்குப் 'பாம்பைத் தின்னும் பாம்பு' என்பது பொருள்.) இது சுமார் 35 ஆண்டுகள் உயிர் வாழும்.



ராஜநாகம் கடித்தால் சுமார் 90 நிமிடங்களில் உயிர் போய் விடும். நல்லபாம்பு கடித்தால் சுமார் 6 மணி நேரம்.

ராஜநாகம் கடித்தால் சுமார் 2.5 செ.மீ. கனம் உள்ள தோலை உடைய யானைகூட மரணம் அடைந்துவிடும்!



ராஜநாகங்கள் மழைக்காலத்தில் இணைகூடுகின்றன. ஏப்ரல் மாதத்தில் சுமார் 40 முட்டைகள் இடும். முட்டை 6 செ.மீ. நீளமும், 3 செ.மீ. அகலமும், 40 கிராம் எடையும் இருக்கும். குஞ்சாகி வெளிவருகிற வரை முட்டை வளர்ந்து கொண்டே யிருக்கும்!

மனித நடமாட்டம் இல்லாத அடர்த்தியான காடுகளில் வாழும் ராஜநாகம், இலைகள், சருகுகள், குச்சிகள் முதலியவற்றைக்கொண்டு கூடுகட்டுகிறது. கூடு, இரண்டு அடுக்குகளாக இருக்கும். கூட்டின் அடிப்பக்கம் முட்டையிடும்; மேல்பக்கம் அதைக் காவல் காத்துப் படுத்துக் கொள்ளும்!



நாகப்பாம்புகளில், தன் குட்டிகளைக் கூட்டில் கவனமாகப் பாதுகாப்பது ராஜநாகம்தான். குட்டிகள் இருக்கும் பக்கம் யாரையும், எதையும் நெருங்க விடாது. நாகப்பாம்புகளிலே அதிக புத்தி உள்ளது இதுதான் என்று கருதப்படுகிறது!




இது கோபத்தில் படம் எடுக்கும்போது இதன் உடல் கிடுகிடு என்று நடுங்கும். தரையில் இருந்து 1.80 மீட்டர் உயரத்திற்குத் தலையைத் தூக்கும்! (உடல் நீளத்தில் ⅓ பாகம்!) பார்ப்பதற்கே பயங்கரமாக இருக்கும்.






இதன் பற்கள் நீண்டும் வளைந்தும் முட்கள் போன்று இருக்கின்றன. ஆனால் உறுதியாக எலும்புடன் இணைக்கப் பட்டிருக்கின்றன. பற்கள் தேயத் தேய புதுப் பற்கள் வளரும்! விஷப்பற்கள் இரண்டு. கீழ்த்தாடையிலும் மேல்தாடையிலுமாக 6 வரிசைப் பற்கள்!



இதன் விஷத்திலிருந்து பாரிசவாயு, இதய நோய்கள், ஆஸ்துமா, நரம்பு வலி போன்ற வியாதிகளுக்கு மருந்து தயாரிக்கிறார்கள்.


ராஜநாகத்தின் விஷம் தெளிவான மஞ்சள் நிறத் திரவமாக இருக்கும். விஷம் காய்ந்தால் பளிங்குபோல் இருக்கும். எவ்வளவு நாட்கள் ஆனாலும் அதன் வீரியம் குறைவதில்லை. இந்த விஷம் புரதப்பொருளின் சேர்க்கையால் ஆனது.



ராஜநாகம் தன் இரையைப்(பாம்பை) பார்த்துவிட்டால் அதை விரட்டிப் பிடிக்கும். கழுத்தில் கடிக்கும்.

இரை, செயல் இழக்கிற அளவுக்கு மட்டும் சிறிதளவு விஷத்தைச் செலுத்தும். இரை செயல் இழந்து விட்டதும் விழுங்கத் தொடங்கும்.


40 நிமிடங்களில் ஒரு பாம்பை விழுங்கிவிடும்!



இது பெரும்பாலும் பகலில்தான் இரைதேட வெளியில் கிளம்பும். இது மிக நீளமாக இருப்பதால் வேகமாக நீந்தும், நன்றாக மரத்தில் ஏறும்.


உயிர்க்காட்சி சாலைகளில் வளர்க்கப்படும் ராஜநாகத்திற்கு வாரத்திற்கு ஒரு தடவை ஒரு பாம்பை இரையாகக் கொடுப்பார்கள். பாம்பைத் தவிர வேறு எதைக் கொடுத்தாலும் அது தின்னாது!






உயிர்க்காட்சி சாலை ஒன்றில், ஒரு சமயம் மிகுந்த பசியோடு இருந்த ராஜநாகம், தன் வாலையே வேறு ஒரு பாம்பு என்று நினைத்துக் கடித்துத் தின்ன முற்பட்டது! பாம்புப் பிடாரனைக் கொண்டுவந்து அதன் வாயில் இருந்து அதன் வாலை மீட்டார்கள்!

உயிர்க்காட்சிசாலைகளில் உள்ள ராஜநாகத்திற்குச் சில சமயங்களில் இரை கொடுப்பது மிகவும் சிரமம். இதற்கு 6 பேர்கள் வேண்டும். ஒருவர் தலையைப் பிடித்துக்கொள்வார், ஒருவர் இரையை வாய்க்குள் செலுத்துவார், மற்ற நான்கு பேர்களும் அதன் உடலை அழுத்திப் பிடித்துக்கொள்வார்கள். அவர்கள் அனைவரும் பாதுகாப்பான உடைகளை அணிந்து கொண்டிருப்பார்கள்.



ராஜநாகம் 28 நாட்களுக்கு ஒருமுறை சட்டை உரிக்கும். சட்டை உரித்தல் என்பது அதன் வளர்ச்சியைக் குறிக்கும். மரத்தின் கவை போன்ற இடங்களிலும் சொரசொரப்பான பாறைகளிலும் உடலைத் தேய்த்து சட்டை உரிக்கும். இதற்கு 30 நிமிடங்கள் ஆகும். பாம்புக்கு இமை கிடையாது. எனவே சட்டையுடன் கண்ணின் மேல் உள்ள வெள்ளைப் படலமும் சேர்ந்து வரும்.






ஒரிஸா மாநிலம் புவனேஸ்வரம் அருகே 'பத்ம கேஷார்பூர்' என்னும் கிராமத்தில் சுமார் 550 குடும்பங்கள் பாம்பு பிடிப்பதையே தொழிலாகக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் ராஜநாகத்தின் குட்டிகளைப் பிடித்து வந்து வளர்த்து விற்கிறார்கள். விலை ரூ.2500

காட்டில் ராஜநாகம் எதிர்பட்டால் அப்படியே ஆடாமல் அசையாமல் நின்றுவிடுவார்கள். ஏனென்றால் அசையும் உருவங்கள் மட்டுமே பாம்புகளின் கண்களுக்குத் தெரியும்!



நம் நாட்டில் கர்நாடகா, உத்திரப்பிரதேசம், ஒரிஸா, அந்தமான் ஆகிய இடங்களில் ராஜநாகங்கள் இருக்கின்றன. பர்மா, மலேசியா, பிலிபைன்ஸ் முதலிய நாடுகளிலும் உண்டு.



நெஞ்சைத் தொடுகின்றன!

சிறுவர் இலக்கியத்தின் நாடகப் பிரிவில் போதுமான நூல்கள் இல்லை என்ற குறையைப் போக்க வந்துள்ள புது வரவு. இதிலுள்ள 11 நாடகங்களின் கதை, நடை, உணர்த்தும் கருத்துகள் எல்லாம் வித்தியாசமானவை. தமிழ் ஈழம் போராட்டம் காரணமாக உலகத்தின் எந்தெந்த நாடுகளிலோ புகலிடம் தேடி போராடி இரண்டு தலைமுறைகளாக வாழ்ந்து வரும் குடும்பங்களில் உள்ள தமிழ்க் குழந்தைகளின் பிரச்னைகள்தான் பெரும்பாலான நாடகங்களின் கதைக்களம். தாங்கள் வாழும் சூழலில் தமிழை மறந்தே விடும் பேரபாயம் உள்ளதை எண்ணி நெஞ்சம் பதைக்கும் குடும்பங்களும் தமிழை மறந்தால் என்ன, அது தாய்மொழிதானே என்று அசட்டையாக இருக்கும் பெற்றோர், அவர்களது விருப்பத்திற்கு மாறாகத் தமிழைக் கற்க முயலும் குழந்தைகளின் தாய்மொழிப் பற்று என்று எல்லாமே நெஞ்சைத் தொடுகின்றன.

சிறார்களுக்கான சிறு நாடகங்கள் - விக்னா பாக்யநாதன் - பக் 164 - ரூ.32 - மணிமேகலைப் பிரசுரம், 7 தணிகாசலம் சாலை, தியாகராயநகர், சென்னை - 17.

வியப்பு!

நாற்பத்தொன்று ஆண்டுகளாக சிறுவர் இலக்கியத்தை வளப்படுத்திவரும் மூத்த படைப்பாளரின் படைப்பு. படித்ததும் அப்படியா என்று வியக்க வைக்கும்படி பூச்சிகளின் வாழ்க்கை அதிசயங்களோடு ஏராளமான படங்களும் உண்டு. குழந்தை எழுத்தாளர் சங்கம் வழங்கிய குழந்தை இலக்கிய மாமணி விருதுக்குப் பெருமை சேர்க்கும் படைப்பு.

பூச்சிகளின் அதிசயங்கள் - ஆழி. வே.ராமசாமி - பக். 112 - ரூ. 28 - குமரிப் பதிப்பகம் 8, நீலா தெற்கு வீதி, நாகப்பட்டினம் - 611 001.

தாளம் போடு!

தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட அயல் நாடுகளில் வாழும் சிறார்களை மனதில் கொண்டு படைக்கப்பட்ட 33 மழலையர்க்கான பாடல்களின் தொகுப்பு. டிராஃபிக் சிக்னல் எனும் சமிக்ஞை விளக்கைப் பற்றிக் குழந்தைகளுக்கு அதிகமான பாடல்கள் இல்லை. ஆசிரியை இதைப் பற்றி மின் சமிக்ஞை விளக்கு என்ற தலைப்பில் ஒரு பாடலைத் தந்துள்ளார்.

எல்லாப் பாடல்களிலுமே சந்தத்திற்கு முக்கியத்துவம் தரப்பட்டுள்ளதால் படிக்கும்போதே தாளம் போட வைக்கிறது.


கணனி நல்ல கணனி
கணக்கு பார்க்கும் கணனி
தரணி எங்கும் பரவி
திறமை காட்டும் கணனி.

மழலையர்களுக்கான பாடல்கள் - நகுலா சிவநாதன் - பக். 72 - ரூ.16 - மணிமேகலைப் பிரசுரம் 7 தணிகாசலம் சாலை, தியாகராய நகர், சென்னை - 17.

12.7.2001 அன்று சென்னை-கோடம்பாக்கத்திலுள்ள பதிப்பகச் செம்மல் க. கணபதி அரசு மேல் நிலைப் பள்ளியில் 'சுற்றுச் சூழல் பாதுகாப்பு' என்ற தலைப்பில் கட்டுரைப் போட்டி நடத்தினோம். ஏராளமான மாணவ, மாணவியர் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். வெற்றி பெற்றவர்களுக்கு முதல், இரண்டாவது, மூன்றாவது பரிசுகள் வழங்கப்பட்டன. முதல் பரிசு பெற்ற இரா. தென்னரசனின் (பன்னிரண்டாம் வகுப்பு) கட்டுரை இங்கு பிரசுமாகியுள்ளது.

சுற்றுச்

சுற்றுச் சூழல் என்பது என்ன? நாம், நம் பள்ளி, நம் வீடு, நாம் வாழும் இடம் என அனைத்தும் சுற்றுச் சூழல் என்று அழைக்கப்படுகின்றன. நாகரீகமும் முன்னேற்றமும் வளர்ந்து வரும் இக்கால கட்டத்தில் சுற்றுச் சூழல் பெரிதும் பாதிப்படைகின்றது. சுற்றுச் சூழல் பாதிப்படைவதையும், அவற்றைப் பாதுகாக்கும் முறை பற்றியும் விரிவாகக் காணலாம்.



நாகரீகம் வளராத காலத்தில் சுற்றுச்சூழல் அழகாக பேணி காக்கப்பட்டது. நாகரீகம் வளர்ந்து, பல கண்டுபிடிப்புகள் நிகழ்ந்துள்ள இக்காலத்தில் சுற்றுச்சூழல் பெரிதும் மாசடைந்து வருகின்றது. தூய்மையாக வைத்திருத்தல் என்பது, நம்மையோ அல்லது வீட்டையோ மட்டுமல்ல. நம்மைச் சுற்றியுள்ள அனைத்தையும் தூய்மையாக வைத்திருக்க வேண்டும்.

சுற்றுச் சூழல் மாசடைவதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. அவை

1. தொழிற்சாலை,
2. வாகனங்கள் 3. வீடுகள்.

தொழிற்சாலை:

தொழிற்சாலையை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம் (அ) தோல் தொழிற்சாலை (ஆ) இரசாயனத் தொழிற்சாலை.

(அ) தோல் தொழிற்சாலை:

தோல் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீர் அருகில் உள்ள நிலத்திலோ, நீர் நிலைகளிலோ கலக்கப்பட்டு வருகின்றது. இதனால் நிலத்தடி நீர் பெரிதும் மாசடைகின்றது. இது போன்ற நிலத்தடி நீரை உபயோகப்படுத்துவதன் மூலம் உயிரினங்கள் பல நோய்களுக்கு ஆளாகின்றன.

(ஆ) இரசாயனத் தொழிற்சாலை:

இரசாயனத் தொழிற்சாலைகளிலிருந்து உயிருக்குக் கேடு விளைவிக்கின்ற இரசாயன வாயுக்கள் வெளியாகும் போது இதனைச் சுவாசிக்கும் உயிரினங்கள் பாதிக்கப்படுகின்றன.

வாகனங்கள்:

வாகனங்களினால் வெளியாகும் புகை,

சூழல் பாதுகாப்பு!



காற்றைப் பெரிதும் மாசாக்கி வருகின்றது. இதனால் பல பேர் சுவாச கோளாறுகளுக்கும், சுவாச நோய்களுக்கும் ஆளாகின்றனர். இது தவிர வாகனங்கள் ஏற்படுத்தும் அதிக ஒலியினால் மனிதர்களுக்குக் கேட்கும் சக்தி குறையும் வாய்ப்பும் உள்ளது.

வீடுகளினால் ஏற்படும் மாசு:

வீடுகளிலிருந்து வெளியாகும் புகை, சத்தம், கழிவு மற்றும் குப்பைகள் சுற்றுச் சூழலை பெரிதும் மாசடைய வழி வகுக்கின்றன. வீட்டில் உள்ள குப்பையை உரிய இடத்தில் கொட்டுவதோடு, சாக்கடைகளை மூடியும் வைக்க வேண்டும்.

சுற்றுச் சூழல் பாதிப்படைவதால் ஏற்படும் தீமைகள்:

காற்று மாசடைவதனால் பெரும்பாலானவர்களுக்கு சுவாசம் சம்பந்தப்பட்ட வியாதிகள் ஏற்படுகின்றன. நீர்நிலை மாசடைவதால் குடல் மற்றும் வயிறு சம்பந்தப்பட்ட வியாதிகள் ஏற்படுகின்றன. அது மட்டும் அல்லாது மனிதனின் வாழ்வு காலம் குறைந்து, அவன் மரணப் பிடியில் சிக்கிக்கொள்கிறான்.

சுற்றுச் சூழலைப் பாதுகாக்கும் வழி முறைகள்:

1. காடுகளை அழிப்பதைத் தடை செய்ய வேண்டும். வீட்டுக்கு இரண்டு மரங்களை வளர்க்க வேண்டும்.
2. நகரங்களில் இருக்கும் தொழிற்சாலைகளை நகரங்களிலிருந்து வெளியே வைத்து சுற்றுச் சூழலைப் பாதுகாக்க வேண்டும்.
3. தொழிற்சாலை களிலிருந்து வெளியாகும் கேடு விளைவிக்கும் புகை மற்றும் இரசாயனத்தைக் குறைக்க வேண்டும்.
4. காடுகளை வளர்த்து நமக்குத் தேவையான மழையைப் பெறுவதுடன், காற்று மாசடைவதையும் காடுகளின் துணையுடன் தவிர்க்கலாம்.
5. வீடுகளில் உள்ள குப்பைகளை உரிய இடத்தில் போட வேண்டும். வீட்டைச் சுற்றியுள்ள கழிவு கால்வாய்களை மூடி வைக்க வேண்டும்.
6. தொழிற்சாலைகளிலிருந்து வரும் இரசாயனம், நீர் நிலைகளில் சேருவதற்குத் தடை விதிக்க வேண்டும்.

சுற்றுச் சூழல் பாதுகாப்பு என்பது நம் வாழ்க்கையில் ஒரு அங்கமாகத் திகழ்கின்றது. சுற்றுச் சூழல் பாதுகாப்பு இல்லாமல் இருந்தால் மனிதன் இன்னலுக்கு ஆளாவான். சுற்றுச் சூழலைத் தூய்மையாக வைத்திருக்கத் தேவையான வழிமுறைகளைச் செயல்படுத்துவோம். அவ்வாறு செயல்படுத்தினால் நம் வாழ்நாளும் பூமியின் வாழ்நாளும் கூடும். சுற்றுச் சூழலைப் பாதுகாப்பாக வைத்திருப்பதே நம் பாரதத் தாய்க்கு நாம் செய்கின்ற தலைசிறந்த கடமையாகும்.


படங்கள்: ஸ்ரீஹரி

உங்கள் எதிர்கால வழிகாட்டி

கேரள மாநிலம், இடுக்கி மாவட்டத்திலுள்ள வழிதலா இயற்கை அன்னை நேரடியாக ஆட்சி நடத்தும் இடம் என்று சொல்லலாம். தென்னை, பாக்கு மரங்கள், நெல் வயல்கள், சலசலக்கும் ஓடைகள், அதில் செல்லும் ஒற்றைப் படகுகள்; வருடம் முழுவதும் இதமளிக்கும் பருவநிலை... இப்படி வழிதலாவை வர்ணித்துக் கொண்டே போகலாம். அங்கிருக்கும் செயின்ட் ஆண்டனி பள்ளியில் தான் நான் படித்தேன். அப்பாவுக்கு போலீஸில் வேலை. மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை மாற்றிக் கொண்டே இருப்பார்கள்.

இரண்டாவது படிக்கும் போதே பள்ளியில் நடக்கும் ஓட்டப் பந்தய போட்டிகளில் கலந்து கொள்ளத் துவங்கி விட்டேன். பள்ளியிலிருந்து வீடு திரும்பும் போது சின்னச் சின்ன ஓடைகளைத் தாண்ட வேண்டி வரும். அவற்றை லாவகமாகத் தாண்டி நான் வீட்டை நோக்கி ஓடி வருவதைப் பார்க்கும் பெரியவர்கள் "இந்தச் சின்னப் பொண்ணு மான் போலத் துள்ளிப் போகுது பாருங்கப்பா" என்று வியந்து போவார்கள்! நான்காவது படிக்கும் போதே மாவட்ட அளவில் நடக்கும் போட்டிகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டேன். ஓட்டப் பந்தயப் போட்டிகளில் கலந்து கொள்வதில் நான் அதிக ஆர்வம் காட்டுவேன். காரணம் ஊரிலிருந்து ஆசிரியர்களுடன் கிளம்பிச் சென்று திரும்பி வரும் வரை கேட்பதை வாங்கித் தருவார்கள். ஆனால் ஒன்றிரண்டு போட்டிகளில் கலந்து கொண்ட பிறகு ஓட்டப் பந்தயத்தில் உண்மையிலேயே எனக்கு ஆர்வம் ஏற்பட்டு விட்ட்து. அதற்கேற்றபடி பெற்றோரும் ஊக்குவித்தனர்.

ஏழாவது படிக்கும் போது மாநில அளவில் தடகள போட்டிகளில் கலந்து கொள்ளும் அளவுக்கு நான் தயாராகி விட்டேன் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். என் ஆர்வத்தைப் பார்த்து அப்பா கோட்டயத்தில் உள்ள விளையாட்டுப் பயிற்சிப் பள்ளியில் சேர்த்து விட்டார். படிப்பு இரண்டாம் பட்சமாகப் போய் ஓட்டப் பயிற்சி என் நேரத்தை ஆக்ரமிக்கத் துவங்கியது. தினமும் காலை ஐந்து மணி நேரம் கடுமையான பயிற்சி. ஆறு மணிக்கே விளையாட்டுத் திடலில் இருந்தாக வேண்டும். உடலைக் கச்சிதமாகவும், தகுதி வாய்ந்ததாகவும் வைத்துக் கொள்ள உடற்பயிற்சி, மணலில் ஓடுவது,



ஓட்டப் பந்தய வீரராவது எப்படி?

தடகள வீராங்கனை ஷைனி வில்சன்

அருகில் உள்ள சிறு குன்றில் ஓட்டமும் நடையுமாக ஏறி இறங்குவது என்று இடுப்பு எலும்பு கழன்று விடும்படியான பயிற்சிகள்.

எட்டாவது படிக்கும் போதே தேசிய அளவில் ஜூனியர் போட்டிகளில் பங்கு கொள்ள வாய்ப்புக் கிடைத்துவிட்டது. குறிப்பாக நான் கலந்து கொண்டது 400 மற்றும் 800 மீட்டர் தூர ஓட்டப் போட்டிகள் தான். பள்ளியிறுதி வகுப்பு படிக்கும் போது மாநிலத்திலேயே முதல் தர ஓட்டப்பந்தய வீராங்கனையாக உருவாகி விட்டேன். கல்லூரியில் சேர்ந்த சில மாதங்களில் என் விளையாட்டுத் தகுதியைப் பார்த்து இந்திய உணவுக் கழகத்தில் வேலையும் கொடுத்து விட்டார்கள். ஒரு நாளில் பெரும்பகுதி நேரத்தை மைதானத்திலேயே கழித்தேன்.

ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றிக் கொடி நாட்ட வேண்டுமென்று ஒரு வெறி எனக்குள் உருவாகி விட்டது. இந்திய தடகள வரலாற்றிலேயே முதல் முறையாக செமி ஃபைனல் அளவில் ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொண்டது நான்தான். கிட்டத்தட்ட 12 வருடங்கள் ஓட்டமே என் வாழ்க்கையாக இருந்தது. 75 தடவை இந்தியாவின் சார்பாகப் போட்டிகளில் கலந்து கொண்டு 67 பதக்கங்களைப் பெற்றிருக்கிறேன். கேரளாவில் இருக்கும் ஒரு கிராமத்தில் பிறந்த நான் இன்று சர்வதேச அளவிற்குப் புகழ்பெற்று இருப்பதற்குக் காரணம் தடகளத்தில் நான் பதித்திருக்கும் முத்திரைகள் தானே!



இந்தியாவில் விளையாட்டுக்காக வழங்கப்படும் உயர்ந்தபட்ச விருதான அர்ஜுனா விருதும் எனக்குக் கிடைத்து விட்டது. இந்தச் சாதனைகளுக்கும், விருதுகளுக்கும் பின்னே இருப்பது கடுமையான பயிற்சி, என் பெற்றோர்கள் கொடுத்த ஊக்கம் மற்றும் பல்வேறு கட்டங்களில் எனக்கு பயிற்சியாளராக இருந்து வழி காட்டியவர்கள் தான். ஓட்டப் பந்தயத்தில் சாதனைகளைப் படைக்கத் துடிக்கும் இன்றைய சிறுவர், சிறுமிகளுக்கு எனக்கு அமைந்ததைப் போன்ற சாதகமான அம்சங்கள் வாழ்வில் அமைய வேண்டும். அப்படி அமையும் பட்சத்தில் உங்களுடைய லட்சியத்தை விரைவில் அடைந்து விடலாம்.

முதலில் உங்களுக்கு வேண்டியது விடாமுயற்சி. தோல்வி கண்டு துவளாது இருக்கும் மனப்பாங்கு. ஓடுவது என்பது எல்லோருக்கும் தெரிந்த கலைதானே! இதில் என்ன பயிற்சி வேண்டியிருக்கிறது என்று அலட்சியமாகச் சொல்பவர்கள் இன்றும் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களை ஒரு 200 கி.மீ. ஓடச் சொல்லிப் பாருங்கள்; வேர்த்து விறுவிறுத்து, மூச்சு வாங்கி முடியாமல் இடையில் நின்று

விடுவார்கள். ஓடுவது என்பது சாதாரண விஷயமல்ல. முழுமையாக உடல் இயங்கும் பணி அது. 100 மீட்டர் பந்தயங்களில் கலந்து கொள்வதற்குத் தேவை 'வேகம்'. அதே சமயம் 400 அல்லது 800 மீட்டர் ஓட்டப் பந்தயங்களில் கலந்து கொள்வதற்குத் தேவைப்படுவது வேகத்துடன் கூடிய உடல் தகுதி; அதாவது 'ஸ்டாமினா' என்று ஆங்கிலத்தில் சொல்வார்களே அது வேண்டும். இவற்றைக் கொடுப்பது தான் பயிற்சி.

முதலில் உடலை ஃபிட்டாக வைத்துக் கொள்ளுங்கள். மீன், முட்டை, சிக்கன், மட்டன் என்று வெளுத்துக் கட்ட வேண்டியதில்லை. வயதுக்கு ஏற்ற அளவு கலோரிகள் உள்ளே போக வேண்டும், அவ்வளவு தான். சைவ உணவிலும் சத்தான விஷயங்கள் இருக்கின்றன. நல்ல பயிற்சியாளரைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள். முறையான உடற்பயிற்சி மூலம் உடலைச் சிக்கென வைத்துக் கொள்ளுங்கள். அப்போதுதான் காற்றில் கரைந்து ஓடுவதற்கு ஏதுவாக இருக்கும். சோம்பேறித்தனத்திற்கு எந்தக் கட்டத்திலும் இடம் தரக் கூடாது.

நீச்சல் வீரர் வில்சன் அவர்களை நான் திருமணம் செய்து கொண்டேன். ஒரு குழந்தை பிறந்த பிறகு உடல் குண்டாகி விட்டது. பலர் என் காதுபட 'ஷைனியோட ஓட்டம் அவ்வளவு தான். இனி வீட்டுக்குள் ஓட வேண்டியது தான்' என்று கிண்டலடித்தார்கள். 'அப்படியா சொல்கிறீர்கள்; இன்னும் ஒரு வருடத்திற்குள் என்னைத் தகுதி வாய்ந்தவளாக மாற்றிக் கொண்டு சர்வதேச போட்டிகளில் கலந்து கொள்கிறேன் பாருங்கள்' என்று சவால் விட்டேன். அதே போல ஒரே வருடத்தில் என் உடலைத் தடகளத் தகுதிக்கு மாற்றிக் கொண்டு ஆசியப் போட்டிகளில் கலந்து கொண்டு, சாம்பியனாக வெற்றி பெற்றேன். இதற்கு எனக்கு உறுதுணையாக

உடலைக் கச்சிதமாகவும், தகுதி வாய்ந்ததாகவும் வைத்துக் கொள்ள உடற்பயிற்சி. மணலில் ஓடுவது அருகில் உள்ள சிறு குன்றில் ஓட்டமும் நடையுமாக ஏறி இறங்குவது என்று இடுப்பு எலும்பு கழன்று விடும்படியான பயிற்சிகள்.

பின்னால் நின்றவர் என் கணவர்தான். எதற்கு இதைச் சொல்கிறேன் என்றால் மன உறுதியும், விடா முயற்சியும் இருந்தால் எதையும் சாதிக்கலாம் என்பதற்காகத்தான்.

இப்போது நகரத்துச் சிறுவர், சிறுமிகள் கிரிக்கெட்டைத் தவிர வேறு விளையாட்டுக்களுக்கு முக்கியத்துவம் தருவதாகத் தெரியவில்லை. அப்படியே பள்ளிகளில் ஏதாவது தடகளப் போட்டி நடத்துவது என்றால் வருடத்திற்கு ஒரே நாள்... அதுவும் ஸ்போர்ட்ஸ் டே அன்று தான் நடத்துகிறார்கள். அதன்பின் மறந்து விடுகிறார்கள். இதன் காரணமாகத் தடகளத்தில் ஆர்வம் உள்ளவர்களுக்குக் கூட பயிற்சி பெறுவதற்கு வாய்ப்புக் கிடைக்காமல் போய் விடும் சூழ்நிலை இருக்கிறது. இப்போது பெரும்பாலோருக்குப் படிப்பு,

ஓவியப் போட்டி

செல்லப்பிராணிகளில் நாய்கள் என்றால் உங்களுக்கு மிகவும் பிடிக்கும் அல்லவா? சாதாரண நாய், அல்சேஷன், டாபர்மேன், பாமரேனியன், கோம்பை என எந்த வகை நாய்களாகவும் இருக்கலாம். வித்தியாசமான கோணத்தில் படங்களை வண்ணத்தில் வரைந்து அனுப்புங்கள்.

சிறந்த ஓவியங்களுக்கு முதல், இரண்டாவது, மூன்றாவது மற்றும் இரண்டு ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே முடிவானது. முழு முகவரியைத் தரவும். கடைசி தேதி: 20.9.2001

கம்ப்யூட்டர் பயிற்சி என்று நேரம் தேவையாக இருக்கிறது. இந்த நிலையில் ஆர்வமுள்ள, திறமையுள்ளவர்களைக் கண்டு பிடித்து பயிற்சி கொடுக்கும் பொறுப்பு விளையாட்டு ஆசிரியர்களுக்குத் தான் இருக்கிறது.

தினசரி ஆறு மணி நேரம் பயிற்சி எடுக்க வேண்டும். மணலில் ஓடுவது, மலையில் ஏறி இறங்குவது, ஜாக்கிங் என்று பலவிதமான பயிற்சி, ஓட்டத்தில் சிறந்து விளங்கத் தேவைப்படுகிறது. இவற்றைக் கொடுக்கும் அதே நேரத்தில் மன உறுதியை வளர்க்கும் விதத்தில் யோகா போன்ற உடற்பயிற்சிகளிலும் ஈடுபட வேண்டும். தேசிய அளவில் முதலில் நான் கலந்து கொண்ட சில போட்டிகளில் வெற்றி வாய்ப்பை இழந்தேன். அப்போது எனக்கு ஏற்பட்ட மன உழற்சி எக்கச்சக்கம். என்னை நானே தேற்றிக் கொண்டு அடுத்த போட்டிக்குத் தயாரானேன். இது போன்று எல்லோரும் இருப்பார்கள் என்று சொல்ல முடியாது. எனவேதான் யோகா, தியானம் போன்றவை இப்போதைய சிறுவர், சிறுமியருக்குத் தேவைப்படுகின்றன. இந்தத் துறையில்

தடகள பயிற்சிப் பள்ளி துவங்க ஆசைப்படுகிறேன். இதன் மூலம் தடகளத்தில், சர்வதேச அளவில் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் பங்கு கொள்ளும் வாய்ப்பு அதிகரிக்கும்.

தற்போதைய நிலையில் கிராமப்புற இளைஞர்கள் முன்னுக்கு வரத் துடிக்கிறார்கள், இதைப் பல மைதானங்களில் நான் பார்க்கிறேன்.

ஆர்வமுள்ள தனிப்பட்டவர்களின் முயற்சி ஒரு பக்கம் இருக்க, அரசும் தன் பங்குக்கு உதவி செய்ய வேண்டும். ஹாஸ்டல் வசதிகளுடன் விளையாட்டுப் பள்ளிகள் பல இடங்களில் இருந்தாலும், அவற்றை இன்னமும் சிறப்பாக இயக்க வேண்டும். பிரபல தடகள வீராங்கனையான பி.டி. உஷா கேரளாவில் தடகளப் பயிற்சிப் பள்ளி துவங்கியிருக்கிறார். அதற்கு கேரள அரசு 15 ஏக்கர் நிலம் கொடுத்திருக்கிறது. தமிழ்நாட்டிலேயே நிரந்தரமாகத் தங்கி விட்ட நான், இங்கும் அது போன்ற தடகளப் பயிற்சிப் பள்ளி துவங்க ஆசைப்படுகிறேன். இதன் மூலம் தடகளத்தில், சர்வதேச அளவில் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் பங்கு கொள்ளும் வாய்ப்பு அதிகரிக்கும். இந்த விஷயத்தில் நான் முழு மூச்சாக இறங்கப் போகிறேன். தடகளத்தில் எனக்கிருக்கும் ஆர்வம் மட்டுமல்ல இதற்குக் காரணம். ஒலிம்பிக் போட்டிகளில் செமிஃபைனல் வரை மட்டுமே என்னால் செல்ல முடிந்தது. இப்படிப்பட்ட நிலையில், மனதில் ஒரு உறுத்தல் இருக்கவே செய்கிறது. எனவே, என்னிடம் பயிற்சி பெறும் சிறுவனோ, சிறுமியோ ஒலிம்பிக் போட்டிகளில் பங்கு கொண்டு உலகிலேயே முதல் தடகள வீரராக வெற்றிக் கொடி நாட்ட வேண்டும். தடகளப் பயிற்சிப் பள்ளி துவங்க நான் ஆசைப்படுவதற்கு இந்த லட்சியமும் ஒரு காரணம். வருங்கால தடகள வீரர்களுக்கு என் வாழ்த்துகள்!

சந்திப்பு: **ப்ரியன்**

படம்: **ராஜன்**

புதிர் உலகம் விடைகள் :

II நான் ஒருவன் மட்டும் தான் உழவர் சந்தைக்குச் சென்று கொண்டிருக்கிறேன்.

III 1,2,3

IV அந்த எண்கள் 5, 6. அவற்றைப் பெருக்கினால் 5x6 = 30 மூன்று பத்துகள். கூட்டிப் பெருக்கினால் 5+6 = 11x30 =330. முப்பத்து மூன்று பத்துகள்.

V 1. பக்கிம் சந்திர சட்டர்ஜி, 2. பாரதியார், 3. பிரம்ம சமாஜம், 4. பிஜப்பூர், 5. புதன், 6. பூம்புகார், 7. பெரியார், 8. பேடன் பௌல், 9. பைராம் கான், 10. பொட்டி ஸ்ரீராமுலு.



சார் தபால்

மகிழ்ச்சி வெள்ளம்!

✉ நல்லூரிலிருந்து வே. சுபஸ்ரீ "ஆகஸ்ட் இதழில் 'யாருக்கு உதவலாம்?' கதை அருமை. முனியனின் முட்டாள்தனத்தைக் கண்டு மன்னர் கூறிய அறிவுரை மிகவும் நன்றாக இருந்தது. முதல் பரிசு நாடகம், நத்தைகள், ரோஜா மணம் வீசுது பாடல், ராமுவின் விடுமுறை ஆகியவற்றைப் படித்து, சுவைத்தேன்" என்கிறார்.

✉ "நன்றி! நன்றி! நன்றி! இது எதற்குத் தெரியுமா? லியாண்டர் பயஸ் – மகேஷ் பூபதியின் வண்ணப் படங்களை போஸ்டராகத் தந்ததற்கு. இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரிப்பது கண் கொள்ளாக் காட்சி" என்கிறார் கருப்பம்புலத்திலிருந்து வசந்தா காந்த்.

✉ சுவாமிமலையிலிருந்து என். தேசிகன் "மாறியது நெஞ்சம்... மாற்றியது யாரோ... என்ற முதல் பரிசு நாடகத்தை மிகவும் அருமையாக எழுதிய சகோதரி ஆர். திவ்யாவுக்கு என் நெஞ்சார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்கிறார்.


✉ "அப்பாவி மக்களை வேலை வாங்கி, அவர்களுக்குச் சரியான கூலியும் கொடுக்காத கந்தசாமி பண்ணையாருக்கு ரங்கன் சரியான பாடம் கற்பித்து விட்டான். பெங்குவின் பறவைகளை அசத்தலாக வரைந்தவர்களுக்குப் பாராட்டுகள்" என்கிறார் சாத்தூரிலிருந்து எம். செல்லையா.

✉ மதுராந்தகத்திலிருந்து கே.மேபல் மேரி "பள்ளி மாணவர்களாகிய எங்களின் தேவையை, ருசியை அறிந்து செயல்படுவதில் கோகுலத்துக்கு நிகர் கோகுலமே! மாதந்தோறும் கைக்கடிகாரங்கள் பரிசு எங்களை மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தி விட்டது" என்கிறார்.

✉ "மாஜிக் கலை மந்திரமல்ல; தந்திரமே என்று உணர்த்திவிட்டார் ஜேம்ஸ். அட்டையில் உள்ள பெண்ணுக்குத் திருஷ்டி சுற்றிப் போட வேண்டும்" என்கிறார் வேலூரிலிருந்து எஸ். ராதிகா.

✉ இராமநாதபுரத்திலிருந்து எல். சிவா "பிரும்மா செய்த பலப்பரீட்சை என்ற ஆசிரியரின் பக்கத்தைப் படித்ததும் எனக்கு ஆச்சர்யம். கர்வமாக இருக்கும் ஒரு சில மாணவர்களுக்குத் தவறைத் திருத்திக் கொள்ளும் வாய்ப்பு இதைப் படித்தால் நிச்சயம் கிடைக்கும்" என்கிறார்.

✉ "அறிஞர்களின் வாழ்க்கையில் நடந்த சுவையான சம்பவங்களைப் படிக்கும்போது ரொம்ப ஆச்சர்யமாகவும் சுவாரசியமாகவும் இருந்தது. பன்றியைக் காப்பாற்றிய குள்ளன் படக்கதை நன்று. புதிய கண்டுபிடிப்புகள் பிறந்தபோது... கட்டுரையைப் படித்தபோது வியப்பாக இருந்தது" என்கிறார் ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து மோ. பாரதி.



ஞாயிற்றுக்கிழமை. காலை ஏழு மணி வரை விச்சுவும் அவன் தங்கையும் தூங்கிக் கொண்டிருந்தனர்.
ஸ் ஸ் ஸ்...
ஏய், என்ன ரெண்டு பேரும் இவ்வளவு நேரம் தூங்கறீங்க? சீக்கிரம் எழுந்திருங்க.
இருவரும் அசையாமல் தூங்குவதைப் பார்த்த அம்மாவுக்குக் கோபம் வந்தது.
ரெண்டு நிமிஷத்துல எழுந்து பல் தேய்ச்சிட்டு மாடிக்குப் போய், படிங்க. மறுபடியும் உங்களைக் கட்டிலில் தூங்குறதைப் பார்த்தேன், தலையிலே தண்ணீர் ஊத்திடுவேன்.
விச்சு
தூக்கமா வருதுடா விச்சு.
சே! லீவு நாளில் கூட தூங்க விட மாட்டேங்கிறாங்க இந்த அம்மா.
சிறிது நேரம் கழித்து இருவரும் படிப்பதைப் பார்க்க மொட்டை மாடிக்குச் சென்றார் அம்மா.
ஏங்க, பசங்க ரெண்டு பேரும் படிக்க வரலையா?
இல்லையே!
மறுபடியும் கோபத்துடன் படுக்கையறைக்குச் சென்றார் அம்மா.
கட்டிலிலும் காணோமே! எங்கே போயிருப்பாங்க?
அம்மா குழப்பத்துடன் பார்த்துக் கொண்டிருந்தபோது கட்டிலுக்குக் கீழே ஏதோ சத்தம் கேட்டது.
ஸ் ஸ் ஸ்...
ஸ் ஸ் ஸ்...
அடப் போக்கிரிகளா!

நிற்பதுவே... நடப்பதுவே...

உடலுறுப்புகளின் உருவாக்கத்தில் அற்புதமாகப் படைக்கப்பட்ட, சிக்கலான எந்திரம் நம் பாதங்களே!


நம் உடல் உறுப்புகளில் ஒவ்வொன்றும் முக்கியமானதே. நாம் இடம் விட்டு இடம் அசையக் காரணமான கால்கள் கூடுதல் முக்கியத்துவத்தைப் பெறுகின்றன. மனிதன் ஒரு கோடி ஆண்டுகளுக்கு முன் மரத்திலிருந்து இறங்கியதும் காடு, மேடு, சகதி, தண்ணீர், மலை என அனைத்து இடங்களுக்கும் வெறும் கால்களால் நடந்தே சென்றான். குரங்கினத்திலிருந்து மனிதன் இரு கால்களால் நடக்கத் தொடங்கியதும் நிறைய மாற்றங்கள் குதிகாலிலும் பாதங்களிலும் ஏற்பட்டன. குதிகால் எலும்பும் வளைந்த பாதமும்தான் நம் எடையைத் தாங்குகின்றன.

நாம் இரு காலிகள். விலங்குகளுக்கு நான்கு கால்கள். அதாவது இரண்டு கைகளையும் கால்களாகவே பயன்படுத்துகின்றன. புவியின் ஈர்ப்பு விசையை எதிர்த்து செயல்பட்டு, நம்மை கம்பீரமாக எழுச்சி நடை போட வைப்பது இந்தக் கால்களே!

நம் உடம்பிலுள்ள எலும்புகளிலும் நரம்புகளிலும் நீளமானது தொடையிலுள்ள ஃபீமர் என்ற எலும்பும் இடுப்பிலிருந்து கணுக்கால் வரை நீண்டிருக்கும் கட்டளை நரம்பும்தான்.



முழங்காலுக்கும் கணுக்காலுக்கும் இடையிலுள்ள உறுதியான 'ஆடும் தசை' எனப்படும் 'காஸ்ட்ரோன்மியஸ் தசை' தான் நடக்கவும், ஓடவும் பயன்படும் முக்கியமான தசையாகும். ஒருவர் 70 கிலோ எடை உள்ளவராக இருந்தால் அவர் ஒற்றைக் காலை மட்டும் ஊன்றி நிற்கும்போது ஆடும் தசை கிட்டத்தட்ட 420 கிலோ எடை தூக்குவதற்கான சக்தியைத் தர வேண்டியிருக்கிறது. அதுவே பாலே நடனம் ஆடுபவராக இருந்தால் ஒரு காலில் உள்ள கட்டை விரலில் மட்டும் ஊன்றி ஆடும்போது அந்தக் காலின் ஆடு தசை கிட்டத்தட்ட 1000 கிலோ எடையைத் தூக்குவதற்குச் சமமான சக்தியைத் தருகிறது. நாம் நடக்கும்போது இரண்டு கால்களும் ஒரே நேரத்தில் நகருவதில்லை; மாறி மாறி செயல்படுவதால்தான் நடக்கவே முடிகிறது.



பாதத்தில் 26 எலும்புகளும், 107 சிறு இணைப்புகளும் 19 தசைகளும் எண்ணிலடங்கா நரம்பு செல்களும் நிறைய இரத்த தமனி மற்றும் சிரைகளும் உள்ளன. பாத எலும்புகளின் எண்ணிக்கை உடல் எலும்புகளின் எண்ணிக்கையில் நான்கில் ஒரு பங்காகும்.

நடப்பது என்பது ஒரு சிக்கலான விஷயம். குதிகால் எலும்பும் அதனுடன் இணைந்த நரம்புகளும் இதற்கான முன் முயற்சி எடுத்து, கொஞ்சம் எம்பி, உடலின் முழு எடையையும் தாங்கி, பாதத்தில் அமைந்துள்ள 5 மெடா டார்சல் எலும்புகளில் அழுத்தித் தாக்கி, பாதத்திற்குத் தள்ளுகிறது. பின் இறுதியில் பெருவிரல்தான் இதற்கான உந்து சக்தியைத் தந்து, உடல் நகர உதவுகிறது. எனவே கால்களின் எலும்பும், தசையும் அசைந்தாலும் குதிகால் மற்றும் கட்டை விரல் உதவியின்றி நடப்பது என்பது இயலாத காரியமாகும்.

சாதாரணமாக ஒரு நிமிடத்தில் 50 முறை காலை எடுத்து வைத்து நடக்கிறோம். நம் வாழ்நாளில் கிட்டத்தட்ட 1,00,000 கி.மீ தூரம் நடக்கிறோம். இவ்வளவு தூரம் நடந்தும் கூட பொதுவாக, பாதம், குதிகால் மற்றும் பெருவிரல் மூட்டுகள் அவ்வளவு எளிதில் பழுதாவதில்லை.

'காலில் அடிபட்டால், உடம்பு முழுவதும் அடிபட்ட மாதிரி' என்ற பழமொழி ஒன்றுண்டு. பாதத்தில் ஏற்படும் பிரச்னையால் முதுகுவலி, தலைவலி, சுளுக்கு மற்றும் மூட்டுவலி என நோய்கள் உருவாகின்றன. ஆண்களைவிட பெண்களுக்கு 4 மடங்கு அதிகமாகப் பாதப் பிரச்னைகள் ஏற்படுகின்றன. ஹைஹீல்ஸ் எனப்படும் குதி உயரமான செருப்புகளை அணிவதே இதற்கு முக்கியக் காரணம். குதி உயர்ந்த காலணிகள் உடலின் எடையை முன்னுக்குத் தள்ள, ஆடும் தசைகளின் நீளத்தைச் சுருக்கி, முதுகெலும்பைத் தன்னிலையிலிருந்து வெளியே நீட்டி இயற்கைக்கு மாறான அமைப்பை உண்டு பண்ணுவதால் இடுப்பு வலியும் கால் வலியும் ஏற்படுகின்றது.

பாதம் கிட்டத்தட்ட 50 வகை பிரச்னைகளால் தாக்கப்படுகின்றது. இதில் முக்கியமானது பாதத்தில் ஏற்படும் 'ஆணி'. இது ஷூ போட்டு அதனால் ஓரிரு இடத்தில் அழுத்தம் அதிகமாகி, அங்கே தசைகள், செல்கள் குவிக்கப்பட்டு, இறுகி, இறந்து விடுவதால் ஏற்படுகின்றது. அதன் கீழே உள்ள நரம்பு அழுத்தத்திற்குள்ளவதால் வலி ஏற்படுகிறது.

அடுத்தது பித்த வெடிப்பு. இது இல்லாதவர்களே மிகக் குறைவு. அடுத்து சேற்றுப் புண். இது விரல்களுக்கு இடையே வருகிறது. இவை பூஞ்சையால் ஏற்படுகின்றன. காலை ஈரமாக வைத்திராமல் உலர வைத்திருக்க வேண்டும். விரல்களுக்கு இடையே பவுடர் போடலாம். தேவைப்பட்டால் மருத்துவரை அணுகி தக்க நுண்ணுயிர்க் கொல்லி மருந்துகளைப் பூசலாம்.

கை, கால் விரல் நகங்களில் அழுக்கு சேராமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

முகத்தைச் சுத்தம் செய்வது போல் பாதங்களையும் சுத்தப் படுத்த வேண்டும். இரவில் படுக்கும்முன் வெதுவெதுப்பான நீரில் சிறிது உப்பு போட்டு கால்களைச் சற்று நேரம் அமிழ்த்து வைக்க வேண்டும். பிறகு கால்களைத் துண்டால் துடைத்து விட்டுப் படுத்தால் நல்லது.

செருப்புப் போடாமல் வெளியில் செல்லக் கூடாது. பாதம் கண்ட இடங்களில் தேய்வதால் சக்தி வீணாகிறது. ஹைஹீல்ஸைத் தவிர்த்து காற்றோட்டமாக இருக்கும் செருப்புகளை அணிவது நல்லது.

— மோகனா



• ஒலிம்பிக் கொண்டாட்டம்

கோகுலம் நியூஸ்

சாதனை!

அமெரிக்காவில் கென்ட்டகி மாநிலத்தில் இறந்து போகும் தருவாயில் இருந்த ஒருவருக்கு இருதயத்தில் திராட்சைப் பழ அளவுள்ள ஒரு கருவியைப் பொருத்தி உயிரைக் காப்பாற்றியிருக்கிறார்கள் மருத்துவர்கள். இக் கருவி பொருத்தப்பட்டவரின் உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டு வருகிறது. அவர் பூரண குணமடைந்ததும் சாதாரண மனிதரைப் போல் எழுந்து நடமாடலாம். இந்தக் கருவி ஓராண்டு வரை நல்ல நிலையில் இருக்கும் என்று சிகிச்சை செய்த மருத்துவர்களில் ஒருவரான ராபர்ட் பவ்லிங் கூறியுள்ளார்.

தேள் நண்பி

ஒவ்வொருவருக்கும் ஏதாவது சாதனை செய்ய வேண்டும் என்ற லட்சியம் இருக்கும். மலேஷியாவைச் சேர்ந்த நோர் மலினா ஹசனுக்கு வயது 24. சாதனை படைக்க வேண்டும் என்ற ஆர்வத்தில் இரண்டாயிரம் தேள்களுடன் ஒரே அறையில் வசித்து வருகிறார். 30 நாட்கள் ஆயிரக்கணக்கான தேள்களுடன் ஒரே அறையில் வசித்தவர் என்ற சாதனை முயற்சியில் ஈடுபட்டுள்ளார். இன்னும் ஆயிரம் தேள்களைச் சேர்த்து மூவாயிரம் தேள்களுடன் இருந்தவர் என்ற சாதனையைப் படைக்க விரும்பி தேள்கள் தேடுதல் படலத்தில் இறங்கியிருக்கிறார்.

ஒலிம்பிக்


2008 ஆம் ஆண்டில் ஒலிம்பிக் போட்டியை நடத்தும் வாய்ப்பு சீனத் தலைநகர் பீஜிங்குக்குக் கிடைத்துள்ளது. பீஜிங், பாரிஸ், டொரான்டோ, இஸ்தான்புல், ஒசாகா ஆகிய ஐந்து நகரங்கள் இப்போட்டியை நடத்த போட்டியிட்டன. மாஸ்கோவில் நடந்த ஒலிம்பிக் கமிட்டி கூட்டத்தில் நடந்த ஒட்டெடுப்பில் பீஜிங் நகரம் வெற்றி பெற்றது. இந்த வெற்றியைச் சீனர்கள் மகிழ்ச்சியாகக் கொண்டாடி மகிழ்ந்தனர். 2008 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிக்கு சீனா இப்போதே தயாராகி வருகிறது.

முக்கிய சந்திப்பு

இந்தியப் பிரதமர் வாஜ்பாய்க்கும் பாகிஸ்தான் அதிபர் பர்வேஸ் முஷாரப்க்கும் இடையில் ஆக்ராவில் பேச்சுவார்த்தை நடந்தது. இறுதியில் எந்தவித உடன்படிக்கையும் ஏற்படாமல் இந்த மாநாடு முடிவுற்றது.

அட்லாண்டிஸ்

விண்வெளியில் சர்வதேச ஆராய்ச்சி நிலையத்தை அமெரிக்காவும் ரஷ்யாவும் அமைத்து வருகின்றன. இந்த சர்வதேச விண்நிலையத்தில் உபகரணங்கள் பொருத்தும் பணி நடைபெற்று வருகிறது. இதற்காக அட்லாண்டிஸ் விண்கலம் விண்ணுக்குச் சென்று விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தில் பிராணவாயு சிலிண்டர்களைப் பொருத்திவிட்டு, 13 நாள் பயணத்தை முடித்துக் கொண்டு பத்திரமாக வந்து சேர்ந்தது.



கோகுலத்துக்கு சந்தா செலுத்துங்கள்!

புதிர், ஜோக்ஸ், படக்கதைகள் மட்டுமா? நகைச்சுவைக் கதைகள், புராணக்கதை, கட்டுரை, துணுக்குகள்... இன்னும் ஏராளமான அம்சங்களையும் தாங்கி வரும் கோகுலத்துக்கு சந்தா செலுத்துங்கள்! உங்கள் நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள்.

பெயர் : ....

முகவரி : ....

....

....

ஆறு மாத சந்தா (6 இதழ்கள்) ரூபாய் 36/- ஒரு வருட சந்தா (12 இதழ்கள்) ரூபாய் 72/-. இதை டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். வெளியூர் காசோலைகள் ஏற்கப்படமாட்டா. டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டரை அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்)
47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.

சிறந்த வீரர் ஜெயசூர்யா

தடகளம்

தடகள ராணி என்று அழைக்கப்படும் அமெரிக்காவின் மரியான் ஜோன்ஸ், ஒலிம்பிக்ஸில் 100 மீட்டர் ஓட்டம் உட்பட 3 தங்கப் பதக்கங்களை வென்று சாதனை படைத்தவர். ஜூலை மாதம் ஃபிரான்ஸ் நாட்டில் நைஸ் நகரில் சர்வதேச தடகள போட்டிகள் நடைபெற்றன. இதில் 100 மீட்டர் ஓட்டத்தில் பங்கேற்ற மரியான் ஜோன்ஸ் 11.25 வினாடிகளில் ஓடி தங்கம் வென்றார். இது 100மீ ஓட்டத்தில் இவரது 50வது தொடர் வெற்றியாகும். "என்னைப் பொருத்தவரை எல்லா வெற்றிகளுமே முக்கியமானவைதாம். இந்த வெற்றிகள் எல்லாம் அடுத்து வரும் உலக சாம்பியன் போட்டிக்கு நான் தயாராவதற்கு உறுதுணையாக இருக்கும். பெண்கள் 100மீ ஓட்டத்தில் இன்றும் கிரிபித் ஜாய்னர் கர்சியின் 10.49 வினாடி வேகமே உலக சாதனையாக இருக்கிறது. இந்தச் சாதனையை உடைக்க வேண்டும் என்பதே என் லட்சியம்" என்கிறார் மரியான் ஜோன்ஸ்.

செஸ்

ஈரான் தலைநகர் தெஹ்ரானில் சமீபத்தில் நடந்த 20 வயதுக்குட்பட்டோருக்கான செஸ் போட்டியில் மதுரையைச் சேர்ந்த எம்.கஸ்தூரி கலந்து கொண்டார். 14 வயதான இவர் வலுவான வீரர்களையெல்லாம் வீழ்த்தி 'ஆசிய ஜூனியர் சாம்பியன்' என்ற பட்டத்தை வென்றார். 11 சுற்றுகளில் 8.5 புள்ளிகள் எடுத்த கஸ்தூரி, எந்தச் சுற்றிலும் தோற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இப்போட்டியின் மூலம் ஆசிய ஜூனியர் சாம்பியன் பட்டத்துடன் சர்வதேச மகளிர் மாஸ்டராகவும் ஆகிவிட்டார் கஸ்தூரி.

முத்தரப்பு கிரிக்கெட்

இந்தியா, இலங்கை, நியூசிலாந்து ஆகிய நாடுகளுக்கு இடையே ஒருதினப் போட்டிகள் இலங்கையில் நடைபெற்றன. இதில் இலங்கை அணி இறுதிப் போட்டிக்கு சுலபமாக முன்னேறி விட்டது. இலங்கையுடன் மோதப் போவது இந்தியாவா? நியூசிலாந்தா?. இறுதி லீக் போட்டி இந்த இரு நாடுகளிடையேயும் நடந்தது. டாஸ் வென்ற நியூசிலாந்து முதலில் பேட் செய்து 50 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 264 ரன்கள் எடுத்தது. 265 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற கடினமான இலக்குடன் இந்திய அணி களமிறங்கியது. புதிதாக சேர்க்கப்பட்ட வீரேந்தர் சேவக் அதிரடி ஆட்டம் ஆடினார். 29 பந்தில் 50



• மரியான் ஜோன்ஸ்



• ஜெயசூர்யா




• கஸ்தூரி

ரன்களைக் குவித்தார்; 68வது பந்தில் 100 ரன்களை எடுத்து அவுட் ஆனார். சச்சினின் அதிரடி ஆட்டத்தைக் காண முடியாமல் தவித்த ரசிகர்களுக்கு சேவக் உற்சாக மூட்டிவிட்டார். கேப்டன் கங்குலியும் சிறப்பாக ஆடி 64 ரன்கள் எடுத்தார். திராவிட் 57, பதானி 35 ரன்களை எடுத்தனர். 45.4வது ஓவரில் 3 விக்கெட் இழப்புக்கு 267 ரன்களை எடுத்து இறுதிச் சுற்றுக்கு தகுதி பெற்றது இந்திய அணி. இறுதிப் போட்டியில் ஜெயசூர்யாவின் அபாரமான ஆட்டத்தால் 295 ரன்களை குவித்து, கோப்பையைத் தட்டிச் சென்று விட்டது இலங்கை.

ஆல்ரவுண்டர் ஜெயசூர்யா

இலங்கை கிரிக்கெட் அணியின் கேப்டன் சனத் ஜெயசூர்யா. 1969ஆம் ஆண்டு ஜூன் 30ந் தேதி இலங்கையில் உள்ள மத்தாரா என்ற மீனவ கிராமத்தில் பிறந்தார். புத்த மதத்தின் மீது மிகுந்த ஈடுபாடு கொண்டவர். இடது கை ஆட்டக்காரரான ஜெயசூர்யா பள்ளியில் படிக்கும் காலத்திலிருந்தே கிரிக்கெட்டை ஆர்வத்துடன் விளையாடி வந்தார். 1990ஆம் ஆண்டு நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் இலங்கை அணிக்காகக் களமிறங்கினார் ஜெயசூர்யா. இருந்தும் 1996 உலக கோப்பை கிரிக்கெட் போட்டிகளின் போதுதான் தமது அதிரடி ஆட்டத்தின் மூலம் உலகத்தின் கவனத்தைத் தம்பால் ஈர்த்தார். ஜெயசூர்யாவின் அதிரடி ஆட்டத்தின் மூலம் இலங்கை அணி குறைந்த ஓவரில் அதிக ரன்களைக் குவித்து பல போட்டிகளில் வெற்றி பெற்றது. உலகின் புகழ்பெற்ற பந்து வீச்சாளர்களுக்குக் கூட ஜெயசூர்யா தமது அதிரடி ஆட்டத்தின் மூலம் பயத்தை ஏற்படுத்தினார். இவரது டெஸ்ட் சராசரி 40 ரன்கள். அதிக பட்சமாக 340 ரன்களை ஒரு டெஸ்ட்டில் குவித்திருக்கிறார். இவர் சிறந்த பேட்ஸ்மேன் மட்டுமல்ல; சிறந்த பந்து வீச்சாளரும் கூட. சிறந்த ஆட்டக்காரராகத் திகழும் ஜெயசூர்யாவுக்கு 1999ஆம் ஆண்டு அர்ஜுனரணதுங்காவிடமிருந்து கேப்டன் பொறுப்பு வந்து சேர்ந்தது. கேப்டன் பொறுப்பையும் திறம்பட செயல்படுத்தி வரும் ஜெயசூர்யா, கால்பந்து விளையாட்டிலும் தூள் கிளப்பக் கூடியவர். உங்களுக்காக ஜெயசூர்யாவின் போஸ்டர் 40ஆம் பக்கத்தில்.

உங்களுடன் ஒரு நிமிடம்



கலியுக காளிங்கன்கள்!

சுற்றுச் சூழல் பாதுகாப்பு குறித்து கட்டுரைப் போட்டிக்கு ஒரு பள்ளிக் கூடத்தில் ஏற்பாடு செய்திருந்தோம். பல மாணவர்கள் கலந்து கொண்டு மிக நன்றாக எழுதினார்கள். முதல் பரிசு கட்டுரை இந்த இதழில் பிரசுரமாகிறது.

தோல் பதனிடுதல், இறால் வளர்ப்பு போன்ற தொழில்கள் காரணமாக பூமியும் நிலத்தடி நீரும் விஷமயமாகிறது என்பது இன்று பலருக்கும் தெரிந்திருக்கிறது. பூமி விவசாயத்துக்குப் பயனற்றதாகிறது. நீரை குடிக்கவோ குளிக்கவோ எதற்கும் உபயோகிக்க முடியாது. ரசாயன ஆலைகளிலிருந்து வெளிப்படும் கழிவுகள் ஆறுகள், ஏரிகள், குளங்கள் முதலியவற்றைப் பாழாக்குகின்றன. பெட்ரோலியம் எண்ணெய்க் கசிவினால் கடலே கெட்டுப் போய் அதில் வாழும் உயிரினங்களைப் பாதிக்கிறது.

இவ்வாறு சுற்றுச்சூழல், பாதிப்புக்குள்ளாவது புராண காலத்திலேயே இருந்திருக்கிறது என்பதைத்தான் 'காளிங்க நர்த்தனம்' கதை உணர்த்துகிறது. ஒரு நாள் கண்ணனும் கோபாலர்களும் மாடு கன்றுகளை மேய விட்டுவிட்டு விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். மாடுகள் புல் மேய்ந்து, தாகம் மேலிட சற்று தூரத்தில் இருக்கும் மடு நோக்கிச் செல்கின்றன. அதை நெருங்கும்போதே அனல் பறக்கிறது என்றும் மடுவைச் சுற்றி வெகு தூரத்துக்கு எதுவும் விளையவில்லை என்றும் பாகவத புராணம் சொல்கிறது! நீர்நிலையில் இருந்த நீரை அருந்தியதும் மாடுகள் மயங்கி விழுகின்றன.

அந்த மடுவில் கருடனைப் பகைத்துக் கொண்ட காளிங்கன் என்ற பாம்பு, பறவை அரசனின் கோபத்துக்குப் பயந்து ஒளிந்து கொண்டிருக்கிறது. விஷம் பரவ காளிங்கனே காரணம் என்பதை உணர்ந்த கண்ணன், அதனுடன் போராடி வெற்றி பெறுகிறான்! அதன் வாலைப் பற்றிக் கொண்டு அதன் தலைமீது நின்று நர்த்தனம் ஆடுகிறான். கண்ணன் பாதம் தன் தலைமீது பட்டதை பாக்கியமாகக் கருதிய காளிங்கன், வணங்கி பிரார்த்திக்கிறான். கண்ணன் உத்தரவுப்படி காளிங்கன் அங்கிருந்து புறப்பட்டுத் தன் சொந்த இருப்பிடமாகிய ரமணத் தீவுக்குப் போய்விடுகிறான். "கருடன் இனி உன்னைத் துன்புறுத்த மாட்டான்; நீயும் அவனிடம் மரியாதையாக நடந்துகொள்" என்று கண்ணன் புத்தி சொல்லி அனுப்புகிறான்.

இன்று இந்தியாவில் பல காளிங்கன்கள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் கண்ணனைப் பிரார்த்தித்து மனம் திருந்த வேண்டும். மாசுக் கட்டுப்பாடு பற்றி பேசியும் எழுதியும் திருப்தி கொள்ள முடியாது. நீர், நிலம், காற்று, ஆகாயம் முதலியவற்றில் எவ்வித மாசும் பரவாமல் நாம் ஒவ்வொருவரும் கவனமுடன் செயல்பட்டு ஒத்துழைக்க வேண்டும். இல்லாவிட்டால் இந்த உலகம் வெகு சீக்கிரம் யாருமே வாழ்வதற்கு இயலாத நிலைக்குப் போய்விடும். அழகான இந்த உலகத்தை எதிர்கால சந்ததியினரும் அனுபவித்து மகிழ ஏற்ற விதத்தில் காப்பாற்றித் தருவோம்.

— ஆசிரியர்

Edited, printed and published by K. Rajendran at Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621
Subscription : (Inland) Annual Rs. 72/-; Half Yearly Rs. 36/-
Overseas (Air Mail) Annual Rs. 400/-; Half Yearly Rs. 200/-


ஐந்து வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்!





விடை : 1. மீன், 2. ஷவரிலிருந்து வரும் தண்ணீர், 3. வளையல், 4. தவளை, 5. தண்ணீர் குழாய்.

அறுந்த பட்டம் யாருடையது?




விடை : 1. மணி

ஜாலியான விளையாட்டு

எப்படி கூட்டினாலும் பத்து வருமாறு அமைக்கவும்.

1	2	3	4
1	2	3	4
1	2	3	4
1	2	3	4

1	3	2	4
4	2	3	1
4	2	3	1
1	3	2	4



''எதுக்கு எங்களை உங்க வீட்டு மாடிக்குக் கூப் பிடறீங்க?''

''வீட்டு மேலதான் லோன் கொடுப்போம்னு சொன்னீங்களே!''

- எம். வினோத்,
விருத்தாச்சலம்.

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / Chief PMG-154 / 2001*
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 50 * Registered as a Newspaper in Srilanka

